விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

மாநகர சபை
யாழ்ப்பாணம்.

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு

Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 கார்த்திகை 22 செவ்வாய்க்கிழமை (08.12.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 354




# தமிழீழ போராட்டத்தை முன்னெடுக்க 'மக்கள் விடுதலை இராணுவம்' உதயம்

## பிரித்தானிய 'த ரைம்ஸ்' அதிரடித் தகவல்

(லண்டன்)

தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கான ஆயுதப் போராட்டங்களைத் தீவிரப்படுத்தும் நோக்கத்துடன் புதிய விடுதலை அமைப்பு ஒன்று கிழக்கிலங்கையில் உருவாக்கப்பட்டுள்ளதாகப் பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட த ரைம்ஸ் ஊடகம் தெரிவித்துள்ளது. (16 ஆம் பக்கம் பார்க்க)

## 'மக்கள் விடுதலை இராணுவம்' குறித்து அரசாங்கம் அறிந்திருந்தது-ஹெகலிய

(கொழும்பு)

கிழக்கில் இயங்கி வருவதாக த ரைம்ஸ் சஞ்சிகை தெரிவித்துள்ள மக்கள் விடுதலை இராணுவம் தொடர்பில் அரசாங்கம் அறிந்திருந்ததென பாதுகாப்புப் பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

குறித்த தமிழ் கிளர்ச்சி இயக்கம் தொடர்பில் இராஜதந்திர மற்றும் அரசியல் ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் விடுதலை இராணுவம் அல்லது பீ.எல்.ஏ. கிளர்ச்சி இயக்கம் தொடர்பில் ஏற்கனவே தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

உலகின் எல்லா நாடுகளிலும் இவ்வாறான நிலைமைகள் காணப்படுவது வழமை. தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்தரீதியாக தோற்கடிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த விடயம் தொடர்பில் அரசியல் ரீதியாக அணுகப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-5)

## எதிர்வரும் ஜனவரியில் ஏ-32 வீதி பாவனைக்கு

(யாழ்ப்பாணம்)

ஏ-32 வீதி எதிர்வரும் ஜனவரி மாதம் மக்கள் பாவனைக்காக திறக்கப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

சங்குப்பிட்டி-மன்னார் ஏ-32 வீதி திருத்தப் பணிகள் முடிபடைந்துள்ளது. எனவே ஜனவரி மாதம் முதல் மக்கள் பாவனைக்காக ஏ-32 வீதி திறந்து வைக்கப்படும்.

இவ் வீதியின் திருத்தப் பணிகளுக்கு பிரித்தானிய அரசு உதவி வழங்கியதாகவும் வடக்கு மாகாண ஆளுநர் குறிப்பிட்டார். (ந-5)


## சரத்துடன் சம்பந்தன்; பசிலுடன் சுரேஷ் சந்திப்பு தீவிரம்-முடிபெடுப்பதில் தாமதம்



(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் ஜெனரல் சரத் பொன்சேகாவும் தீவிர கவனம் செலுத்தி வருவதாகக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இதேவேளை ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என்பது குறித்து இறுதி முடிபெடுக்கும் நோக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் வேட்பாளர் தரப்புடன் பேச்சுவார்த்தை (16 ஆம் பக்கம் பார்க்க)



# ஒரு இலட்சத்து 27 ஆயிரம் பேரே வவுனியா நலன்புரி முகாமில் உள்ளனர்

## ஊடகவியலாளர் மாநாட்டில் வடக்கு ஆளுநர் தகவல்

(யாழ்ப்பாணம்)

வவுனியா நலன்புரி முகாம்களில் ஒரு இலட்சத்து 27 ஆயிரத்து 905 பேர் மட்டுமே தற்போது தங்க வைக்கப்பட்டுள்ளனர் என வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

இம் மக்கள் அனைவரும் ஜனவரி மாத இறுதிக்குள் மீள்குடியமர்த்தப்படுவர் எனவும் அவர் குறிப்பிட்டார். வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

இவ் ஊடகவியலாளர் மாநாட்டில் வடக்கின் வசந்தம் வேலைத் திட்டம் தொடர்பில் விளக்கமளித்தார். இதன்போதே வடக்கு மாகாண ஆளுநர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்;

வவுனியா, யாழ்ப்பாணம் நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களில் இதுவரை ஒரு இலட்சத்து 13 ஆயிரத்து 262 பேர் சொந்த (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த நேற்று கட்டுப்பணம் செலுத்தினார்

(கொழும்பு)

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிடும் மகிந்த ராஜபக்ஷ தனது கட்டுப் பணத்தினை நேற்று செலுத்தியுள்ளார்.

ஆளும் அரச கூட்டணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜெயந்த அரச தலைவருக்கான கட்டுப்பணத்தினை இராஜகிரியவில் உள்ள தேர்தல் செயலகத்தில் செலுத்தியுள்ளார்.

வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கான கால எல்லை எதிர்வரும் 17 ஆம் திகதி நிறைவடைவது குறிப்பிடத்தக்கது. (ந-5)

## பிரிட்டன், நோர்வேத் தூதுவர்கள் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம்

### மீள்குடியேற்றம் தொடர்பில் ஆராய்ந்தனர்


(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான பிரித்தானிய, நோர்வே நாட்டுத் தூதுவர்கள் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தனர்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்றுக் காலை 9 மணிக்கு வருகை தந்த தூதுவர்கள் யாழ். மாவட்ட செயலகத்தில் வைத்து வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி, யாழ்.அரச அதிபர் க.கணேஷ் ஆகியோரைச் சந்தித்தனர்.

இச் சந்திப்பில் யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் வடக்கு மாகாண (16 ஆம் பக்கம் பார்க்க)




வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் சாவகச்சேரி நகரசபையின் பிரதான வீதிகளில் பொருத்தப்பட்ட வீதி விளக்குகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் இணைந்து ஆரம்பித்து வைப்பதையும்,சாவகச்சேரிச் சந்தையின் கட்டிடப்பகுதிகளை பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

## கேள்விப் பத்திரம் கோரல்

யாழ் போதனா வைத்தியசாலையில் பின்வரும் உபகரணங்கள் பராமரிப்பு செய்வதற்கு தகுதியானவர்களிடமிருந்து போதனா வைத்தியசாலைப் பணிப் பாளரினால் கேள்விகள் கோரப்படுகின்றது. கேள்விப்பத்திரங்களையும் நிபந்தனைகளையும் மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப்பணமாக ரூபாய் 500/- செலுத்தி 21.12.2009 வரை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் 23.12.2009 மு.ப. 10.00 மணிக்கு திறக்கப்படும். அத்தருணம் கேள்வி சமர்ப்பித்த ஒப்பந்தகாரர்கள் சமுகந்தரமுடியும்.

பராமரிக்கபட வேண்டிய உபகரணங்களின் விபரம்:

1) Window type Air Conditioner
2) Split type Air Conditioner
3) Package type Air Conditioner
4) Mortuary Coolers
5) Industrial Washing Machine
6) British Aid (Central) Air Conditioner

ஏ.தேவநேசன்,
பணிப்பாளர்.
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

(C-3877)

## அரசாங்க அறிவித்தல்

### பருப்பு விற்பனை செய்வதற்கான கூறுவிலை கோரல்

நாவற்குழி அரச உணவுக் களஞ்சியத்தில் விற்பனை செய்வதற்காக தரமான பருப்பு காணப்படுகின்றது. இப் பருப்பினை விற்பனை செய்வதற்கான முத்திரையிடப்பட்ட(Sealed) கூறுவிலைகள் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரினால் கோரப்படுகின்றது.

இப் பருப்பினை கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் விண்ணப்பபடிவத்தை புனர்வாழ்வுக் கிளையில் பெற்று தபால் உறையின் மேல் மூலையில் "**பருப்பு விற்பனை செய்வதற்கான கூறுவிலை**" எனக் குறிப்பிட்டு 16.12.2009ஆம் திகதி 10.00மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு புனர்வாழ்வுப் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாக அல்லது பதிவுத் தபால் மூலம் சீல்(Seal)இடப்பட்ட கடித உறையில் தங்களது கூறு விலைகளை சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றார்கள்.

இதன் மேலதிக விபரங்களை மாவட்டச் செயலக புனர்வாழ்வுக் கிளையுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

கூறு விலைகள் 16.12.2009ஆம் திகதி பிற்பகல் 3.00மணிக்கு திறக்கப்படும். இதில் கூறு விலை சமர்ப்பித்தவர் அல்லது அவரின் பிரதிநிதி உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன் சமுகமளிக்க முடியும்.

**கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.**

**க.கணேஷ்**
அரசாங்க அதிபரும் /மாவட்டச் செயலரும்
யாழ் மாவட்டம்.

(C-3878)

## தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தற்காலிக இணைப்புப் பெற்ற ஆசிரியர் ஒன்றியத்தின் சிறப்புக் கூட்டம் நாளை புதன் கிழமை முற்பகல் 11மணிக்கு யாழ்ப்பாணம் ஆரிய குளம் உயர் கல்வி நிலையத்தில் நடைபெற உள்ளது.

தற்காலிக இணைப்புப் பெற்ற ஆசிரியர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய உள்ளதால் யாழ்.குடாநாட்டில் உள்ள அனைத்து தற்காலிக இணைப்புப் பெற்ற ஆசிரியர்களையும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு தம்மை பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ந-14)

## சர்வதேச மனித உரிமைகள் தின விழாவில் தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகள் பங்கேற்பு

### 10ந் திகதி யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகள் இல்லத்தினால் நடத்தப்படும் சர்வதேச மனித உரிமைகள் தின நிகழ்வும், மக்கள் பேரணியும் நாளை மறுதினம் வியாழக் கிழமை காலை 10 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிச் செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழக தலைவர் த.சித்தார்த்தன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பத்மநாபா பிரிவுத் தலைவர் ஸ்ரீதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மனித உரிமைகள் கலாசாரத்தைத் ஊக்குவிப்பதற்கான தீபங்கள் ஏற்றுதல் எனும் தொனிப் பொருளில் தீபமேற்றும் நிகழ்வுமாலை 6.30மணிக்கு நடைபெறும். (ந-14)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வேலையற்ற பட்டதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல் இன்று செவ்வாய்க் கிழமை காலை 9.30மணிக்கு பிகொன் (BECON) கல்வி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ்.மாவட்டத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகள் அனைவரும் தங்களது தகைமைச் சான்றிதழ்களுடன் தவறாது கலந்துகொள்ளுமாறு பட்டதாரிகள் சங்க செயலாளர் அறிவித்துள்ளார். (ந-14)

## இணையவழி கற்கை பெயர் விபரம் வெளியாகியது

(யாழ்ப்பாணம்)

வியாபார முகாமைத்துவமானி (BBM on line) இணையவழி கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள நூறு மாணவர்களது பெயர் விபரம் யாழ். பல்கலைக்கழக இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் தமது பதிவுகளை வெளிவாரிப் பதிவுகள் அலகினூடாக அல்லது யாழ். பல்கலைக்கழக இணையத்தளமூடாக (www.jfn.ac.lk) மேற்கொள்ளுமாறு முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி க.தேவராஜா கேட்டுள்ளார். (ந-14)

## இடம்பெயர்ந்த மக்களுக்கு உலக உணவுத் திட்டம் உதவும்

(கொழும்பு)

இடம் பெயர்ந்த தமிழ் மக்களுக்கான உதவிகளை வழங்கும் பொருட்டு உலக உணவுத்திட்ட அமைப்பு 134.9மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு முன்வந்துள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

இடம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கான உணவு விநியோகங்கள் மற்றும் உதவிகளை அதிகரிக்கும் நோக்கத்துடன் உதவிகளை வழங்கஉலக உணவுத்திட் அமைப்பு முன்வந்துள்ளது.

இந்த திட்டத்திற்கு அமைய 134.9மில்லியன் டொலர்களை வழங்குவதற்கான உடன்பாடு ஒன்றை உலக உணவுத்திட்டம், நிதி திட்டமிடல் அமைச்சுடன் மேற் கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

போரில் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட மக்களுக்கும் இடம் பெயர்ந்த மக்களுக்கும் உதவும் பொருட்டே இந்த உதவித் தொகை வழங்கப்படுவதாக உலக உணவுத் திட்ட அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த திட்டமானது அம்பாறை, மட்டக்களப்பு, திருமலை, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் யாழ்.மாவட்டங்களில் பிரதானமாக முன்னெடுக்கப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)


யாழ் நகரில் மிகக்குறைந்த கட்டணங்களில்
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

Post Graduate Diploma in Management (Pre.MBA)
(MBA final (Topup) in UK / London) காலம் 9 மாதங்க்ள்
To Whom :பட்டதாரிகள், (BA,Bsc) வியாபார பட்டதாரிகள் அந்தஸ்து அற்றவர்கள் உயர்தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்கள் (HNDM, HNDA)

Foundation Diploma In Hospitality Management (Topup degree in UK / London)
காலம் 6 மாதங்கள்
Hotel Management
இவ் 6 மாதக் கற்கை நெறியினை முடித்தவர்க்ள் அவர்களின் 2 வருடப் (Degree) பட்டப்படிப்பை லண்டனில் (London - UK) கற்கமுடியும்.
கல்வித்தகைமை: G.C.E (O/L) பயின்றிருந்தால் போதுமானது. மேலதிகவிபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

Diploma in English 100 % வெற்றி
100 % பயிற்சி Advanced Diploma in English
காலம் 6 மாதங்கள்
மாணவர்கள் ஆங்கிலத்தில் தங்களின் உயர்கல்வியினை தொடரவும், ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுவதற்கும் ஏற்றவிதமாய் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது
ஒரு நிறுவனத்தைச் சேர்ந்த / தனிப்பட்ட குழு உறுப்பினர்களுக்கு தனிப்பட்ட (Special) முறையில் வகுப்புகள் ஒழுங்கு படுத்தித் தரப்படும். அத்துடன் நல்ல கட்டணக் கழிவும் தரப்படும்.

Access Programming
(Foundation Degree Programme )
காலம் 6 மாதங்கள்
O/L முடித்த மாணவர்கள் அல்லது A/L லில் நல்லபெறுபேறுகள் அல்லாதவர்களும் இப்பாட நெறியினைப் பூர்த்தி செய்து Higher National Diploma & Degree போன்ற கற்கை நெறிகளைக் கற்று, Bsc, BBA,MBA பட்டதாரி ஆக முடியும்.

அதிக வருவாய் நல்ல வேலைவாய்ப்பு Foundation Diploma In Nursing (Health & Social Care)
Topup degree in UK / London
காலம் 6 மாதங்கள்
கல்வித் தகைமை (G.C.E (O/L) பயின்றிருத்தல் போதுமானது மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

மாணவர்களுக்கு 100 % Student Visa பெற்றுக்கொள்வதற்கு அனுபவம் வாய்ந்தஎமது சட்டத்தரணிகளால் உத்தரவாதம் அளிக்கப்படும். விபரங்களை அறியவும், அறிவுரைகளுக்கும் காலதாமதம் செய்யாது இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்

Foundation Diploma in Management காலம் 6 மாதங்கள்
(For BBA Degree Programme) Minimum Requirement : G.C.E. (O/L)
இப்பாட நெறியின் 2 வருடப் பட்டப்படிப்பை நீங்கள் லண்டனில் பூர்த்திசெய்து BBA பட்டதாரி ஆகலாம்.
தனிப்பட்ட நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் Management துறையிலே தங்களின் அறிவை மேம்படுத்திக் கொள்வதற்காகவும் இப்பாட நெறியில் இணையலாம்.

Second Floor,
No.15, Sirampiyadi Lane
(Off Stanley Road)
(ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்)
(கொசி Hotel மேலே)
Tel :021 2224550 E-mail: info@bchs.lk
HotLines: 0773501499
0777222422/ 0714299935

## இன்று ஒரு தகவல்

# வாழ்வின் சுவை

குடும்பஸ்தர் ஒருவர் சந்தைக்குப் போனார். அங்கே குறைந்த விலையில் மிளகு தாராளமாகக் கிடைத்தது.

அதனால் ஒரு மூட்டை மிளகு வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வந்தார். வந்த கையுடன் மூட்டையைப் பிரித்தார்.

அதிலிருந்து ஒரு மிளகை எடுத்து வாயில் போட்டார். காரமாக இருந்தது. இன்னொன்றையும் எடுத்து வாயில் போட்டார். காரம் அதிகமானது. மறுபடியும் ஒன்றை எடுத்து வாயில் போட்டார். நாக்கு எரிய ஆரம்பித்தது.

தொடர்ந்து ஒவ்வொரு மிளகாக எடுத்து வாயில் போட்டுக் கடித்துக் கொண்டே இருந்தார். ஒரு கட்டத்தில் அவரால் தாங்க முடியவில்லை.

கண்ணீர் சொட்ட ஆரம்பித்தது.

ஆ... ஊ... என்று கத்தினார். ஆனாலும் மிளகு சாப்பிடுவதை நிறுத்தவில்லை.

இதை பார்த்துக் கொண்டிருந்த ஒருவர், "ஏன் இப்படி தொடர்ந்து மிளகைத் தின்று கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

அதற்கு அவர், "அதுவா... ஒன்றாவது இனிப்பாக இருக்காதா? என்று பார்க்கிறேன்" என்றார்.

அது எப்படி இருக்கிறது? பாருங்கள்.

மிளகின் இயல்பு காரம்.

இனிப்பு வேண்டுமென்பவர்கள் கற்கண்டையல்லவா தேடி எடுத்துச் சாப்பிட வேண்டும். நம்மில் பலர் இப்படித் தான் இருந்து கொண்டிருக்கிறோம்.

தித்திக்கும் மிளகு கிடைக்குமா? என்று தேடிக் கொண்டிருக்கிறோம். துயரமான வாழ்க்கையில் இனிமை வந்து சேரும் என்று காத்துக் கொண்டிருக்கிறோம்.

தித்திக்கின்ற மிளகைத் தேடுவது நம்பிக்கைக்கு எதிராக நம்பிக்கை வைப்பது மாதிரித்தான்.

கடந்த காலத்திலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டுமே தவிர கடந்த காலத்திலேயே தங்கிவிடக் கூடாது.

கடந்த காலத்தை நிகழ்காலத்தில் பொருத்திக் கொண்டு வாழ முற்படுவது மகா தவறு.

அதைவிட அந்த வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து விடுவதே நல்லது.

எதையும் உள்ளது உள்ளபடி பார்க்க வேண்டும். வாழ்க்கையை முழுமையாக வாழும்படி தான் நாம் ஆசீர்வதிக்கப்பட்டோம்.

இன்றைக்குப் பலபேர் வாழ்க்கையின் ருசி தெரியாமலே போய்ச் சேர்ந்து விடுகிறார்கள்.

பலபேர் எப்படியென்றால்... அவர்களுக்கு யாரையாவது பின்பற்றத் தெரிகிறதே தவிர, தாமே ஒரு முன்மாதிரியாக நடந்து காட்டவேண்டும் என்று தோன்றுவதில்லை.

நடந்து தேய்ந்த பாதையில் நடப்பது அவர்களுக்குப் பாதுகாப்பாகத் தெரிகிறது. அதுதான் நல்ல பாதை என்றும் வேறு பாதையே கிடையாது என்றும் நினைத்து விடுகிறார்கள். கிடைத்தது போதும் என்று நினைப்பவர்கள் பழைய பாதையையே தேர்ந்தெடுக்கிறார்கள்.

சரி... இந்த உபதேசமெல்லாம் ஒருபக்கம் இருக்கட்டும். இப்பொழுது நாம் செய்ய வேண்டியது என்ன? அதற்கு ஒரு சுலபமான ஆலோசனை உண்டு. அது என்னவென்றால்,

எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கும் மனிதர்கள் உண்டு. அவர்களைக் கண்டுபிடித்து அவர்களோடு பழக்கம் வைத்துக் கொள்ள வேண்டும். அவர்களுடனேயே இருங்கள்.

அவர்களுடைய கண்களை நன்றாக கவனித்துப் பாருங்கள். ஓர் இனம் தெரியாத இனிமை நமக்குள்ளே நுழையும். வாழ்க்கை என்பது துன்பம் மட்டுமே இல்லை என்பது புரியும்.

ஒரு குடும்பத் தலைவர் படுக்கையில் கிடந்தார். பக்கத்தில் நின்று கொண்டிருந்த மனைவிக்கு ஒரு யோசனை...

இவர் எப்பொழுதும் சாப்பிடும் ஒரு பலகாரத்தைக் கொண்டுவந்து கொடுக்க வேண்டும் என்று.

உள்ளே ஓடிப்போய் எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தார். வாங்கிச் சாப்பிட்டார்.

அதன்பின் அவரது உதடு துடித்தது. ஏதோ சொல்ல முயற்சி செய்வது தெரிந்தது. மனைவியைப் பார்த்து கையை அசைத்தார். அவர் குனிந்து கொண்டே வந்தார். இவர் மெதுவாக வாயைத்திறந்து, "இனிமேலாவது வாய்க்கு ருசியாக பலகாரம் செய்யக் கற்றுக் கொள்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# க.பொ.த. (சா/த) பரீட்சையில் 5, 45, 132 பரீட்சார்த்திகள்

## 3213 நிலையங்களில் 70 ஆயிரம் ஆசிரியர் கடமையில்

(கொழும்பு)

எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ள க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையை நாடு பூராகவும் நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்தார்.

இது குறித்து அவர் தெரிவித்ததாவது,

இவ்வாண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 22 ஆம் திகதி நிறைவடையும்.

இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கான பாடசாலை மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் அடங்கலாக 5 இலட்சத்து 45 ஆயிரத்து 132 பேர் தகைமை பெற்றுள்ளனர்.

இவர்களில் 4 இலட்சத்து 5 ஆயிரத்து 257 பேர் பாடசாலை பரீட்சார்த்திகளாகவும் எஞ்சிய 1 இலட்சத்து 39 ஆயிரத்து 875 பேர் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாகவும் இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

இம்முறை க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை புதிய மற்றும் பழைய பாடத் திட்டங்களுக்கு அமைவாக நடைபெறவுள்ளது.

இதற்கமைய புதிய பாடத் திட்டத்திற்கு 4 இலட்சத்து 10 ஆயிரத்து 274 பரீட்சார்த்திகளும் பழைய பாடத்திட்டத்திற்கு 1 இலட்சத்து 34 ஆயிரத்து 858 பரீட்சார்த்திகளும் தோற்றவுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் 3 ஆயிரத்து 215 பரீட்சை நிலையங்கள் அமையப் பெறவுள்ளதோடு 504 பரீட்சை இணைப்பு நிலையங்களும் நிறுவப்படுமென அவர் குறிப்பிட்டார்.

இப்பரீட்சையை மேற் பார்வை செய்வதற்காக 70 ஆயிரம் ஆசிரியர்கள் கடமைக்காக நியமிக்கப் பட்டுள்ளனர்.

அத்துடன் இப்பரீட்சை மதிப்பீட்டுப் பணிகளின் முதல் கட்டமானது எதிர்வரும் 31 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு ஜனவரி 9 ஆம் திகதி நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்ட போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபையின் வரணி பொது நூலகத்தினரால் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்க ளின் விபரம் வருமாறு,

**கட்டுரைப் போட்டி**

**பிரிவு I**

சி. வித்தியா (கரம்பைக்குறிச்சி அ.த.க. பாடசாலை), பி. ஆஷகா (வரணி மகா வித்தியாலயம்), நி. சனாதனி (இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை).

**பிரிவு II**

யோ. சபிதா, க. அனந்தா (கரம்பைக் குறிச்சி அ.த.க பாடசாலை), சி. கிருசாளினி (வரணி மகா வித்தியாலயம்).

**பிரிவு III**

ஞா. சார்த்திகா (இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணியம் வித்தியாசாலை), அ. கார்த்திகா (வரணி மகா வித்தியாலயம்), க. பிறேமா (குடமியன் அ.த.க. பாடசாலை).

**பிரிவு IV**

மா. துவாரகன் (வரணி மகா வித்தியாலயம்), இருவர் இரண்டாமிடம் - கு. தினேஸ், செ. கிருசாளினி, சி. கனுஜா (வரணி மகா வித்தியாலயம்).

**பொது அறிவுப் போட்டி**

**பிரிவு IV**

ப. கஜீவன் (இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணியம் வித்தியசாலை), க. சுதாஸ்கரன், சொ. மயூரன் (வரணி மகா வித்தியாலயம்).

**பிரிவு V**

க. துவாரகன், வ. யசிந்தன், நி. நிரோசன் (வரணி மகா வித்தியாலயம்).

**கவிதைப் போட்டி**

**பிரிவு V**

சி. ஷாலினி, மு. மேனகா, சி. நிஷாந்தி (வரணி மகாவித்தியாலயம்).

**வாசகர்களுக்கிடையேயான பொது அறிவுப் போட்டி**

செ. உதயமோகன் (கரம்பைக் குறிச்சி மேற்கு), சி. பிரபாகரன் (குடமியன், வரணி), இருவர் மூன்றாமிடம் - தெ. ரவீந்திரன், சி. ஷாமினி (நாவற்காடு வரணி). (ஓ-4-29)

## இராசி பலன்

08-12-2009
(கார்த்திகை 22 செவ்வாய்க்கிழமை)
சப்தமி முன்னிரவு 11.18 மணிவரை
மகம் மாலை 5.50 மணிவரை
இராகுகாலம் 3.17 - 4.47 மணிவரை
சுபநேரம் 10.47 - 12.17 மணிவரை
ஆறுமுகநாவலர் குருபூசை

| | |
|---|---|
| மேடம் | வேலைச்சுமை, குடும்பக் கவலை, பணக்குறைவு, முயற்சி தாமதம். |
| இடபம் | தாய்வழி உறவு, கல்வியில் ஆர்வம், ரோகபயம், அதிக பிரயாசை. |
| மிதுனம் | இனிய சம்பவம், புதிய பொருள் சேர்க்கை, எடுத்த காரியம் கைகூடும், வாகன சுகம். |
| கடகம் | மாதர் நட்பு, பொருள் விரயம், வேலைச்சுமை, ரோக நிலை. |
| சிங்கம் | தெய்வ சிந்தை, நண்பர்கள் உதவி, பொருள் சேர்க்கை, போசன நன்மை. |
| கன்னி | காரிய அலைச்சல், திடீர் நன்மை, உணர்ச்சி வசப்படல், சயன சுகக் குறைவு. |
| துலாம் | தொழில் சிந்தை, எடுத்த காரியம் கைகூடும், கலந்துரையாடல், தனதானிய சேர்க்கை. |
| விருச்சிகம் | தூர தேசச் செய்தி, அதிகாரம், காரிய அனுகூலம், புதிய தகவல். |
| தனுசு | கட்டுப்பாடு, ஆரோக்கியக் குறைவு, பிதா சிந்தை, முயற்சி தாமதம். |
| மகரம் | வாகனபயம், வீண்தொல்லை, தொழில்நன்மை, மரியாதைக் குறைவு. |
| கும்பம் | செல்வாக்கு, பிரயாண நன்மை, முயற்சி கைகூடும், தனவருவாய். |
| மீனம் | நோய் குணமடைதல், காரிய நன்மை, சுவாரஸ்யம், போசன சுகம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 140 | 160 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 70 | 80 | 120 |
| தக்காளி | 70 | 70 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 30 | 40 |
| கோவா | 70 | 80 | 80 |
| கரட் | 60 | 70 | 80 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 80 | 100 | 60 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 150 | 60 | 140 |
| பாகற்காய் | 80 | 140 | 100 |
| வெண்டிக்காய் | 20 | 30 | 20 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 60 | 70 | 60 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 70 | -- |
| கறிமிளகாய் | 100 | 120 | -- |
| முருங்கைக்காய் | 100 | 120 | 200 |
| போஞ்சி | 80 | 100 | 140 |
| கத்தரி தம்புள்ள | 100 | 120 | -- |
| கீரை - 1 பிடி | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 120 | 140 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 40 | 35 |





யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு 2010 ஆம் ஆண்டிற்கான நேரசூசி அட்டவணை யாழ்.நகர பொறுப்பதிகாரி கேணல் ஜெயசுந்தர தலைமையில் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் சென் மேரிஸ் றோ.க.த.க.பாடசாலை அதிபரிடம் நேரசூசி அட்டவணையை கையளிப்பதையும், மாணவர்களுக்கு வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் 157 ஆவது ஜயந்திதின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தூய அன்னை ஸ்ரீசாரதா தேவியின் 157 ஆவது ஜயந்திதின நிகழ்வு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 5.30 மணிக்கு மங்கல ஆரத்தியுடன் ஆரம்பமாகி பகல் 12 மணிக்கு விசேட பூசைகளும் அன்னையைப் பற்றிய மலர் வெளியீடும் இடம்பெறவுள்ளது.

இத் தினத்தினை முன்னிட்டு தொண்டைமானாற்றில் உள்ள ஒரு வயோதிபருக்கு சுயதொழில் வாய்ப்புக்கு உதவி வழங்கல், சேவாச்சிரமத்தில் பணிபுரியும் மா.மகேந்திரம் என்பவரின் வீட்டுக்கு மின்சாரம் வழங்கல், அத்துடன் பெண் ஒருவருக்கு தையல் இயந்திரம் வழங்கப்படவுள்ளது.

ஜயந்திக்கு நன் கொடைகள் தர விரும்புவோர் சேவாச்சிரமத் தில் அதனை செலுத்தலாம் என சேவாச்சிரம செயலாளர் தெரிவித்துள்ளார். (ஓ-4)

## பரிசளிப்பு விழா

(அல்வாய்)

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் சி.சிதம்பரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்வி விளையாட்டுத்துறை பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா கலந்து கொள்ளவுள்ளார். (ஓ-9-19)




## உதவி கோருகிறார்



(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ,ஏழாலை மேற்கைச் சேர்ந்தவரும் மட்டக்களப்பு மாமாங்கம் இல.95/4 ,1ஆம் குறுக்குத் தெரு என்ற விலாசத்தில் வசிப்பவருமான ரவிச்சந்திரன் ஷர்மிளா தம்பதியினரின் புதல்வன் செல்வன் சஞ்சைய் என்பவர் இருதய நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார். இரண்டரை வயதுடைய இவருக்கு இதயச் சத்திரசிகிச்சை செய்யவேண்டும் எனவும் அதற்கு 5 இலட்சம்ரூபா செலவாகும் எனவும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

கஷ்ட நிலையில் உள்ள இவரின் பெற்றோர் தமது பிள்ளையின் உயிரைக் காப்பாற்றுவதற்காக கருணை உள்ளம் படைத்தோரிடமிருந்து உதவியினை எதிர்பார்த்து நிற்கின்றனர்...

பண உதவி செய்ய விரும்புவோர் கொமர்ஷல் வங்கி மட்டக்களப்பு கிளை 8105034963 என்ற கணக்கிலத்திற்கு பணத்தினை அனுப்பிவைத்துதவுமாறு கேட்கின்றனர். அவர்களின் தொலைபேசி இலக்கம் -077 8526121. (ஓ-7)

## இளம் தொழில் முயற்சியாளர்களுக்கான பயிற்சிப் பட்டறையும் கருத்தரங்கும்

(யாழ்ப்பாணம்)

தேசத்தின் வங்கியாகிய இலங்கை வங்கி யாழ்.மாவட்ட இளைஞர், யுவதிகளின் மேம்பாட்டிற்காக இளம் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் இலவசக் கருத்தரங்கும் பயிற்சிப் பட்டறையும் நடாத்த ஏற்பாடு செய்துள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு வைபவ ரீதியாக யாழ்.நூலகக் கேட்போர்கூடத்தில் எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்படும்.பயிற்சிப் பட்டறையும், கருத்தரங்கும் இலங்கை வங்கி உதவிப் பொது முகாமையாளர் காரியாலய வளாகத்தில் நடைபெற ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் இலங்கை வங்கியின் பொது முகாமையாளர் பி.ஏ.சி. பெர்னாண்டோ, பிரதிப்பொது முகாமையாளர் (கிளைகள்) ஐ.டீ.வீரசேன ஆகியோருடன் நிபுணத்துவ வாளர்களும் கொழும்பு தலைமைக் காரியாலயத்திலிருந்து பங்குபற்றுவதற்கு வருகை தரவுள்ளனர்.

இவர்களுடன் யாழ். மாவட்ட அரச அதிபரும், யாழ்.மாநகர முதல்வரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

ஏற்கனவே பத்திரிகை மூலம் கொடுக்கப்பட்ட விளம்பரத்திற்கு ஏற்ப இதுவரை விண்ணப்பிக்காத இளம் தொழில் முயற்சியாளர்கள் உடனடியாக தமது விண்ணப்பங்களை மேற்கொள்ளுமாறு இலங்கை வங்கியின் வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் என்.சிவரட்ணம் கேட்டுக்கொள்கின்றார். (ஓ)

## கட்டாக்காலிகளால் சேதமாகிய முட்கம்பி வேலிகள் திருத்தம்

(சாவகச்சேரி)

தனங்கிளப்பு வயல்களில் நெற்பயிரினை பாதுகாக்கும் நோக்குடன் அமைக்கப்பட்ட முட்கம்பி வேலி கட்டாக்காலி கால்நடைகளால் சேதமாக்கப்படுவதால் அதற்கு கதியால் நட்டு செப்பனிட வேண்டி உள்ளது. அதற்குத் தேவையான கதியால்களை பயிர்செய்கையாளர்களிடம் இருந்து பெற உள்ளதால் மேற்படி பகுதி விவசாயிகள் இது சம்பந்தமாக கலந்து தீர்மானம் எடுக்கும்படி தனங்கிளப்பு கமக்காரர் அமைப்பின் செயலாளர் சி.புவனதாஸ்அறிவித்துள்ளார். (ஓ-29)

## கலை விழா

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகர் புவேந்தன் பாலர் பராமரிப்பு நிலையத்தின் வருடாந்தக் கலைவிழா எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு தென்மராட்சி கலை மன்ற கலாசார மண்டபத்தில் நிலயைத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக சாவகச்சேரி மாவட்ட நீதிபதி அ.பிறேம் சங்கர் மற்றும் திருமதி திலகா பிறேம் சங்கர் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் சி.சிவகரன், தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி ந.ரஞ்சனா ,தென்மராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ. வரதராஜமூர்த்தி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தென்மராட்சிப் பொறுப்பாளர் சூ.அலெக்சாண்டர் (சாள்ஸ்) ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளதுடன் மாணவர்கள் கௌரவிப்பும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (ஓ-4-29)

## கலந்துரையாடல்

(அல்வாய்)

வடமராட்சி வலயத்தினால் நடத்தப்பட்ட தமிழ்ப் பாடத்திற்கான துரித கற்றல் செயற்றிட்டம் தரம் 6-8, தரம் 10-11 தொடர்பான செயற்பாட்டு கலந்துரையாடல் கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு புலோலி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி வலயத்திலுள்ள பாடசாலைகளில் இச் செயற்றிட்டத்திற்குப் பொறுப்பான ஆசிரியர்களை தவறாது கலந்துகொள்ள வேண்டும் என அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இக் கலந்துரையாடலுக்கு வரும் ஆசிரியர்கள், அளவுப் பரீட்சை புள்ளிப் பகுப்பாய்வு, மதிப்பீடு 1, இறுதி மதிப்பீடு என்பவற்றுக்கான புள்ளிப் பகுப்பாய்வு, விடைத்தாள் பகுப்பாய்வு என்பவற்றைத் தவறாது எடுத்து வர வேண்டும் என வடமராட்சி வலய தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப் பாளர் திருமதி சுதாமதி நந்தபாலன் அறிவித்துள்ளார். (ஓ-9-19)

## விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை யில் இன்று செவ்வாய்க்கிழமை நல்லூர் பொதுச் சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை வைமன் வீதியிலும் நண்பகல் 11.30 மணி தொடக்கம் 1.30 மணிவரை நாவலர் ஒழுங்கை ஆனைப்பந்தி சந்தியிலும் வைத்து ஏற்றப் படவுள்ளது.

மேலும் கொழும்புத்துறை பொதுச் சுகா தாரப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை புதுவீதி, கொய்யாத் தோட்டம் பகுதியிலும் நண்பகல் 11.30 மணியிலிருந்து 1.30 மணிவரை பழைய பூங்கா வீதியிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

தொடர்ந்து அரியாலை பொதுச் சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை இராஜேஸ்வரி வீதி, கனகரட்ணம் வீதி சந்தியிலும் நண்பகல் 11.30 மணி தொடக்கம் 1.30 மணிவரை முள்ளி அம்மன் கோவிலடியிலும் வைத்து ஏற்றப்பட வுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு இத் தடுப்பூசி யினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் கேட்டுள்ளார். (ஓ-9)

## நல்லூர் பிரதேச சபையின் 2010 ஆம் ஆண்டுக்குரிய புதிய வரவு செலவுத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டண சட்டத்திற்கமைவாக நல்லூர் பிரதேச சபையின் 2010 ஆம் ஆண்டுக் குரிய வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

புதிய வரவு செலவுத்திட்டத்தை பொது மக்கள் இன்று செவ்வாய்க்கிழமை முதல் ஒரு வார காலத்திற்கு தலைமை அலுவலகம், உப அலுவலகங்களிலும் பார்வையிட முடியும் என நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் மே.சாந்தசீலன் தெரிவித்துள்ளார். (ஓ-9)


**க.பொ.த (உ/த) பரீட்சையினை மேற்கொண்டு பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களே உங்களிற்கு**

இலங்கையில் 45 வருடகாலம் மக்களிற்கு காப்புறுதிச் சேவையினை மேற்கொண்டுவரும் பிரபல அரச காப்புறுதி நிறுவனமான இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் மாபெரும் வேலைவாய்ப்புடன் கூடிய பயிற்சி நெறியினை வழங்கவுள்ளது.

* 06 மாதகாலப் பயிற்சிநெறி.
* பயிற்சி நெறிமுடிவில் அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தினால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்.
* பயிற்சி நெறியினை பூரணமாக்கும் மாணவர்களுக்கு , பல்கலைக்கழகப்படிப்புடன் கூடிய பகுதிநேர வேலைவாய்ப்பு

எனப் பல நன்மைகளை வழங்கக் காத்திருக்கின்றது.

(விண்ணப்பங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன)

மேற்படிப் பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தங்களின் சுயவிபரக்கோவையினை

**30.12.2009 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.**

**விண்ணப்ப முகவரி: விற்பனை முகாமையாளர் - ஆயுள் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுதாபனம் வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.**

குறிப்பு :- க.பொ.உ.த.பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களும், மேற்படி பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம். உயர்பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவார்கள். (C-3874)

# விஜயநகரப் பேரரசுக் கால சமய நூல்கள் (கி.பி.1100-1700)

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

72

சென்னையின் பகுதியாக உள்ள திருவொற்றியூருக்கு ஒரு புராணம் ஞானப்பிரகாசரால் இயற்றப்பட்டது. திருவாரூர் பற்றிய புராணம் ஞானக்கூத்தர் என்பவரால் இயற்றப்பட்டது. இவ்வாறு தலங்களுக்கு எழுதப்பட்ட புராணங்கள் கணக்கற்றவை ஆயின. ஒவ்வொரு தலபுராணத்திலும் அந்தந்தக் கோயிலைச் சிறப்பித்துக் கூறுவதற்காக , இந்திரன் முதலான தேவர்கள் தாம் பெற்ற சாபம் நீக்குவதற்காகவும் பாவம் தீர்வதற்காகவும் அந்த ஊர்க்கோயிலுக்கு வந்து வழிபாடு செய்ததாகவும் அதற்குப் பிறகே கடவுளின் அருள்பெற்றுக் கடைத்தேறியதாகவும் கதைகள் புனையப்பட்டன. அந்தந்த ஊரை அடுத்த மலை ஆறு முதலியவை விரிவாக வர்ணிக்கப்பட்டன. கதைகளும் வர்ணனைகளும் பெரும்பாலும் ஒரே வகையாக இருப்பது உண்டு. இத்தனை தலபுராணங்களுள் பலவற்றை இன்று கற்றவர்களும் போற்றிப் படிப்பதில்லை. படிக்கும் இரண்டொரு தல புராணங்களையும் ஆர்வத்தோடு படிப்பவரைக் காண முடியவில்லை.

ஆயிரக்கணக்கான செய்யுள்களை அருமுயற்சி செய்து இயற்றிப் புலவர்கள் தந்த நூல்கள் இந்த நிலைக்கு வரக் காரணம். இவற்றுள் பலவற்றில் இலக்கியக் கலையிலிருந்து குறைந்திருப்பதே ஆகும். எங்கள் ஊருக்கு ஒரு புராணம் வேண்டும், எங்கள் தலைவனுக்கு ஒரு கோவை வேண்டும் , ஓர் உலாவேண்டும், ஒரு கலம்பகம் வேண்டும் என்று போட்டியிட்டுக் கொண்டுபல தலபுராணங்களையும் மற்ற நூல்வகைகளையும் இயற்றுமாறு செய்தார்கள் அக்காலத்தார். அவற்றில் இலக்கியப் புதுமை உண்டா , நயம் உண்டா ,வாழ்வை ஒட்டிய படைப்பு உண்டா என்று கவலைப்படவில்லை. அந்தத் தலபுராணம் முதலியவற்றுள் ஒன்றுக்கொன்று வேறுபாடு மிகுதியாக இல்லை. ஏறக்குறைய ஒரே வகையான அமைப்பு , ஒரே வகையான செய்யுள் வடிவம், ஒரே வகையான வர்ணனைகள் என்று பாடினால், ஒரு நூலைப் படித்தவர்கள் மற்றொரு நூலைப் படிக்கும் போது சலிப்பு அடைகிறார்கள்.

செய்யுளினைப் பொருள் உணர்வதற்கு உரிய பயிற்சிக்கு வேண்டுமானால் படிக்கலாமே தவிர , இலக்கிய நயத்துக்காக , கலை விருந்துக்காகப் படிக்கத் தேவையில்லாமற் போகிறது. தவிர , பாடிய புலவர்கள் தம் சுற்றுப் புறத்தாரின் வாழ்வை ஒட்டி நடப்பியலாக (realisn) ஆகப் பாடுவதை மறந்து வெறுங் கற்பனை வேடிக்கையிலும் சொல் விளையாட்டிலும் ஈடுபட்டவர்களாக இருந்து நூல்கள் இயற்றினால் , அந்த நூல்கள் ஒரு காலத்தில் ஒரு சிலருக்குப் பலன்தரலாம்; காலம் கடந்து பயன் தருவதோ, பலர்க்கும் இன்பம் அளிப்பதோ முடியாமற் போகிறது. தல புராணங்கள் முதலியவை இன்று மறுபதிப்புத் தேவை இல்லாமல் போய்விட்டதற்குக் காரணம் இதுவே ஆகும்.

ஆயினும் அவற்றுள் விரல்விட்டு எண்ணக்கூடிய நூல்கள் சில, இலக்கியச் சிறப்புக் குன்றாமல் இன்றும் விளங்குகின்றன. முழு நூலும் பயனுள்ளதாக இல்லாவிட்டாலும் சில பகுதிகள் சிறந்து நிற்கின்றன. காரணம் , அவற்றை இயற்றிய புலவர்கள் கலைத் திறமையும் உணர்ச்சிப் பெருக்கும் கற்பனையாற்றலும் உடையவர்களாக இருந்ததே ஆகும். ஓவியக் கலையில் வல்லவன் தன்னை மறந்து கிழிக்கும் கோடுகளும் சிலவேளைகளில் கலைப்பொருள் உடையனவாக விளங்குதல் போல் அவை சிறந்த புலவர்களின் திறமையால் சுவையுடன் அமைந்து விட்டவை எனலாம்.

### அழகிய மணவாளதாசர்

யமகம் , சிலேடை முதலான சொல்லலங்காரங்கள் மிகுதியாக அமைந்துள்ள ஒரு தொகுப்பு அஷ்டப்பிரபந்தம் என்பது. அதில் உள்ள எட்டு நுல்களில், ஐந்து நூல்கள் திருவரங்கம் (ஸ்ரீரங்கம்) என்னும் கோயிலைப் பற்றியவை. இரண்டு திருப்பதியைப் பற்றியவை. கலம்பகம், அந்தாதி என்னும் நூல் வகைகள் திறமையோடு இயற்றப்பட்டுள்ளன. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் அல்லது அழகிய மணவாளதாசர் என்னும் வைணவ பக்தர் இவற்றை இயற்றினார் என்று பொதுவாகக் கூறப்படுகிறது.

இந்த எட்டு நூல்களும் ஒருவரே பாடியவை அல்ல , ஒரே பெயர் உடைய வெவ்வேறு காலத்துப் புலவர் சிலர் பாடியவை என்று சிலர் கருதுகின்றனர். பாடல்களின் சொல்லாட்சியும் பொருளமைப்பும் ஏறக்குறைய ஒரே வகையாக உள்ளன. யமகமும் திரிபும் ஆகிய சொல்லலங்காரங்கள் அமைந்த அந்தாதிப் பாடல்கள் பாடிய அளவில் பொருள் விளங்குவன அல்ல. வந்த தொடர்களே திரும்பத் திரும்ப வரும்; ஆனால் ஒவ்வொரு தொடரிலும் சொற்களை வெவ்வேறு வகையாகப் பிரித்து வெவ்வேறு பொருள்கொள்ள வேண்டும். இவ்வாறு செயற்கையாகச் சொற்கள் அமைந்த செய்யுள்கள் ஆதலால் , ஆழ்வார்களின் பாடல்கள் போல்படித்தவுடன் நெஞ்சை உருக்கும் தன்மை இல்லை. சீரங்கநாயர் ஊசல் என்னும் நூலில் , ஊசலாடுதலை வைத்துப் பாடியுள்ள பாடல்கள் சுவை யும் நயமும் பெற்றுள்ளன.

### பட்டினத்தார் பாடல்கள்

பத்து அல்லது பதினொன்றாம் நூற்றாண்டில் பட்டினத்தார் என்ற பெயரில் சைவ சமயத்தைச் சார்ந்த சான்றோர் ஒருவர் காவிரிப் பூம்பட்டினத்தில் வாழ்ந்து சமயப் பாடல் சில பாடியுள்ளார். அவருடைய பாடல்கள் சைவத் திருமுறைகளுள் பதினொன்றாம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன. கோயில் நான்மணிமாலை , திருக்கழுமல மும்மணிக் கோவை ,

**பேராசிரியர் மு.வரதராசன்**

திருவிடைமருதூர் மும்மணிக் கோவை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி , திருவொற்றியூர் ஒருபா ஒருபது என்பவை அவருடைய நூல்கள்.பாடல்கள் நேரான ஓட்டம் உடையனவாய் , கற்பவர் உள்ளத்தை வயப்படுத்துவனவாய் உள்ளன. அவருடைய அகவல் பாக்களின் நடை , எளிமையும் தெளிவும் உடையது. உலக வாழ்க்கையில் செய்யத்தக்க கடமைகளைச் செம்மையாகச் செய்து , உள்ளத்தில் மட்டும் கடவுளின் நினைவு கொண்டால் போதும் என்பது அவருடைய கருத்து. சிந்தையைச் சிவனிடம் வைத்திருப்பதால், இல்வாழ்க்கையில் மனைவி மக்களோடு இன்பமாக வாழும் வாழ்வையும் இழக்கவில்லை , இறந்தபின் பெறும் முத்தியை யும் இழக்கவில்லை என்று தன்னம்பிக் கையோடு கூறுகிறார்.

(தொடரும்)

## கிளிநொச்சி கரைச்சி பகுதியில் மீள்குடியேற்றம்

(கொழும்பு)

கிளிநொச்சி, கரைச்சி பிரதேச செயலர் பரிவில் மீள்குடியேற்றம் இடம்பெறுகின்றமையால் இதற்கு அமைவாக வவுனியா நலன்புரி நிலையங்களில் இருந்து ஒரு தொகுதி மக்கள் கிளிநொச்சிக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இங்கு மீள்குடியேறியுள்ள மாணவர்களின் கல்விச் செயற்பாட்டை முன்னெடுக்கும் முகமாக கனகபுரம் ம.வி., கிளிநொச்சி இந்துக் கல்லூரி, உருத்திரபுரம் கிழக்கு பற்றிமா பாடசாலை ஆகியவற்றில் கற்பித்தல் செயற்பாடுகளை ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை பயணிகள் பஸ் சேவை முறிகண்டி - அக்கராயன் - ஜெயபுரம் விதியூடாகவும் மாங்குளம் - மல்லாவி வீதியூடாகவும் முழங்காவில் வரையும் இடம் பெறுகின்றது.

மீள்குடியேறியுள்ள மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு இந்த இரண்டு வீதிகள் ஊடாகவும் இலவசமாக அரச ஊழியர் பஸ் சேவையும் இடம்பெறுகிறது.

பூநகரிப் பகுதியில் மீள்குடியேறியுள்ள மக்கள் தமது இருப்பிடங்களைத் துப்புரவு செய்யும் பணிகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

முழங்காவில் ம.வி, பூநகரி ம.வி உட்பட ஏனைய பாடசாலைகளையும் அடுத்த வருடம் முதலாம் திகதியில் இருந்து ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

## மடுமாதா ஆலயத்தில் சிலுவைப் பாதை சிலைகள் இன்று பிரதிஷ்டை

(கொழும்பு)

கொழும்பிலிருந்து மடு மாதா ஆலயத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட சிலுவைப் பாதைச் சிலைகள் இன்று செவ்வாய்க்கிழமை மன்னார் ஆயர் வணக்கத்திற்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகையினால் ஆசீர்வதிக்கப்பட்ட பின் ஆலய வளவில் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது.

இச் சிலைகள் அனைத்தும் கொழும்பு பேராயர் கலாநிதி அதிவண. மெல்கம் ரஞ்சித்தினால் ஆசீர்வதிக்கப்பட்ட பின்னர் வாகன ஊர்வலமாக மன்னார் மடுத் தேவாலயத்திற்குக் கொண்டு செல்லப்பட்டன. இதுதொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் ஐ.தே.க.பாராளு மன்ற உறுப்பினர் டொக்டர் ஜயலத் ஜெயவர்த்தன மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்று இடம்பெறவுள்ள பூஜை வழிபாடுகளில் இரவு தங்கியிருந்து கலந்துகொள்வதற்கு பாதுகாப்பு அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ஓ-6)

## டக்ளஸ் தேவானந்தாவிற்கு ஜனாதிபதி அளித்த வாக்குறுதிகள் பாரதூரமானவை

### ஜே.வி.பி.பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா

(கொழும்பு)

ஈ.பி.டி.பி கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அளித்துள்ள வாக்குறுதிகள் பாரதூரமானவை எனவும் குறிப்பாக அவைகளில் இரண்டை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் ஜே.வி.பி. கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா குறிப் பிட்டுள்ளார். குறிப்பாக ஈ.பி.டி.பிக்கு வழங்கப்பட்ட இரண்டு வாக்குறுதிகள் பாரதூரமானவை என அவர் தெரிவித்துள்ளார்.


13 ஆவது திருத்தச் சட்டமூலத்தைத் தாண்டியதோர் அதிகாரப்பரவலாக்கம் மற்றும் பிரதேச சுயாட்சி முறைமை ஆகியவை பாரதூரமானவை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விடுதலைப்புலிகளினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட திம்பு தீர்மானத்தை அமுல்படுத்துவதா என்பது குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு தெளிவான விளக்கம் அளிக்கவேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் இராச்சியம் தொடர்பில் ஜனாதிபதியின் நிலைப்பாடு என்ன என்பது குறித்து நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பதற்கு டக்ளஸ் தேவானந்தா விதித்துள்ள பத்து அம்ச நிபந்தனைகளுக்கு ஆளும் கட்சி இணக்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாக 13 ஆவது திருத்தச் சட்டமூலத்திற்கு அப்பாலான தீர்வு வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கை ஏற்றுக்கொள்ளமுடியாது என அவர் தெரிவித்துள்ளார். (ஓ-6)



ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலையின் ஒளிவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட புன்னாலைக்கட்டுவன் அ.த.க. பாடசாலை ஆசிரியர் பீலிக்ஸ் மோகன்குமார் மங்கல விளக்கேற்றுவதையும், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட முன்னாள் அதிபர் செ.சிவநடராசா, பாடசாலை அதிபர் செல்வி ந.பிரதா மற்றும் ஆசிரியர்கள், மாணவர்களைப் படத்தில் காணலாம்.

# "நாவலர் எழுந்தார்" 01

## நல்லைநகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூசைத் தினம் இன்று

மேற்படி தலையங்கம் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ஐயா அவர்கள் ஆறுமுக நாவலர் பற்றி எழுதிய நூலில் ஓர் அத்தியாயமாக இடம்பெற்றுள்ளது. இது பற்றி பின்னர் கவனிப்போம். நாவலர் ஐயா அவர்கள் தோன்றிய காலம் (கி.பி.1822-1879) பிரித்தானிய அரசின் ஆணைகொடிகட்டிப் பறந்த காலம்.

அத்துடன் இவ் அரசு ஈழத்தின் நிர்வாக சீர்திருத்தம் பற்றி ஆராய்வதற்கு கோல்புறூக் கமரன் ஆணைக்குழுவையும் நியமித்திருந்த காலமும் ஆகும். இவ் ஆணைக்குழுவினர்



ஈழத்தின் நிர்வாகப் பதவிகளுக்கு வேண்டியவற்றை நியமிக்கும் போது ஆங்கில நாட்டில் இருந்து இவர்களைத் தருவிப்பது மிகச் செலவீனம் என்றும் இச் செலவீனத்தைக் கட்டுப் படுத்துவதற்கு ஈழத்தவர்க்கே ஆங்கிலக் கல்வியை கற்பிப்பதன் மூலம் அவர்களின் பணியை குறைந்த செலவில் இலகுவாகப் பெறலாம் எனவும் சிபார்சு செய்திருந்தனர். இதனால் அரசாங்கம் ஆங்கில கல்வியைப் பரப்புவதில் முனைப்பாக செயற்பட்டது.

இச் சூழலில் தான் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதற்கு மிஷனரிமாரும் ஈழத்திற்கு வந்தனர். ஆங்கில கல்வியின் தேவை உணரப்பட்ட காலத்தில் சமயத்தைப் பரப்புவதற்கு இவர்கள் ஆங்கில கல்வியை ஒரு சாதனமாகப் பயன்படுத்தினர். இதனால் ஆங்கிலக் கல்வி மூலம் சமயம் பரப்புதல் மும்முரமாக நடைபெறத்தொடங்கியது.

ஆங்கில அரசாங்கமும் பள்ளிக் கூடங்களை அமைத்து கல்வியை விஸ்தரிப்பதற்குப் பதிலாக மிஷனரிமாரின் நடவடிக்கைகளுக்கு ஊக்கமளித்தனர். இதனால் ஆங்கிலக் கல்வியை கற்பதற்கான அவா ஒரு வெறியாக யாழ்ப்பாணத்தவர் மத்தியில் காணப்பட்டது.

மலைநாட்டில் கோப்பித் தோட்டங்களை ஆரம்பித்து இலாபம் ஈட்டுவதில் முதலாளிமார் இவ்வாறு வெறிக்கோலத்துடன் செயற்பட்டார்களோ அவ்வாறு யாழ்ப்பாணத்தவர் மத்தியிலும் ஆங்கில கல்வியைக் கற்பதில் ஒரு வித வெறித்தன்மை காணப்பட்டது.

இத்தகைய போக்குப்பற்றியும் நம்மவரின் நடத்தை பற்றியும் 1884ஆம் ஆண்டில் சட்ட சபையில் உரைநிகழ்த்தும் போது சேர். பொன். இராமநாதன் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

**"சைவ மாணவர்கள் தங்களுக்குத் தேவையான ஆங்கிலக் கல்வியைப் பெறுவதற்கு மிசனரிமார்களுடைய கல்லூரிகளையே நாட வேண்டியுள்ளது. இவ்வாறு நாடிச்செல்லும் போது மனச்சாட்சிக்கு எதிராக தட்டுவாணிகளாக தம்மை ஆக்குவதில் வல்லவராகின்றனர்"**

சேர்.பொன். இராமநாதன் அவர்கள் சாடிய கூட்டம் மனச்சாட்சியை விற்று பிழைத்த சைவக் கூட்டத்தினரையே எனலாம். அதுவும் நாவலர் அவர்கள் ஏற்படுத்திய கலாசாரப் புரட்சி மக்கள் மத்தியில் பரவ ஆரம்பித்து அவர் இறைபதம் எய்திய (1879) ஆம் ஆண்டின் பின்னர் இச் சம்பவங்கள் நடைபெற்றன் என்றால் நாவலர் காலத்துச் சூழல் பற்றி எழுதவும் பேசவும் வேண்டுமா?

### நாவலர் குடும்பப் பின்னணி

நாவலர் அவர்கள் சாதாரண மத்திய தரக் குடும்பத்தை சேர்ந்தவர் எனினும் அவரது குடும்பத்திற்கு ஆங்கிலக் கல்வி பெற்று வளமாக வாழும் வாய்ப்பும் கிடைத்திருந்தது. உத்தியோகம் புருஷஇலட்சணம் என்பதே அக்கால நம்மவர்களின் அவா. இதன் மூலம் வளமான வேலைகளைத் தேடிச் சமூகத்தில் அந்தஸ்துப் பெற்றவர்களாகத் திகழ நம்மவர்கள் ஓடிஅலைந்து திரிந்த காலம்.

நாவலரோ எனில் தாம் பெற்ற அடிப்படைத்தமிழ்க்கல்வியோடு மிஷனரிமாரின் கல்லூரியில் ஆங்கிலக் கல்வியைக் கற்றதன் மூலம் அவர்களின் நடவடிக்கைகளையும் நன்கறிந்தார். எவ்வாறு காந்தி அடிகளைத் தென்னாபிரிக்கா அனுபவம் மகாத்மாவாக மாற்றியதோ அவ்வாறே ஆங்கிலக் கல்வியும் மிஷனரிமாரிடம் பெற்ற அனுபவங்களும் இவரை நாவலராக்கியது.

இதனால் நாவலர் அக் காலத்து வழக்குக்கு மாறாக ஆங்கிலக் கல்வி என்ற வெள்ளத்தால் அடித்துச் செல்வதற்குப் பதிலாக எதிர் நீச்சலடித்தார். மிஷனரிப் பள்ளிக் கூடத்தில் கற்றுப் பின்னர் கற்பித்தல் தொழிலையும் மேற்கொண்டிருந்த போது விவிலிய வேதத்தை பேர்சிவல் பாதிரியாருடன் இணைந்து மொழிபெயர்க்கும் வாய்ப்பும் நாவலருக்குக் கிடைத்ததோடு விவிலிய வேதத்தின் மொழி பெயர்ப்புகளில் நாவலரின் மொழி பெயர்ப்பே தலை தலைசிறந்தது எனச் சென்னையிலும் அங்கீகரிக்கப்பட்டது.

இதனால் சமயப் பிரசார நடவடிக்கைகளில் மிஷனரிமார் சைவத்தைச் சாடும் போது விவிலிய வேதத்திலிருந்து மேற்கோள் காட்டும் புலமையும் நாவலருக்கு இருந்தது.

தமக்கு வருவாய்தந்த ஆசிரியத் தொழிலுக்கு முழுக்குப் போட்டுவிட்டு 23 ஆவது வயதில் கற்பனவெல்லாம் கற்றுத் தமிழ்க் கல்வியையும் சைவ சமயத்தையும் வளம் படுத்தத் தம்மை ஆயத்தமாக்கிக்கொண்டிருந்தார். இதனால் ஒருவனின் வாழ்க்கையின் அடுத்த படியாகிய இவ் வாழ்க்கையில் புகுந்து அக்கால வழக்குக்கு ஏற்ற வளமான ஒரு செல்வாக்கான பதவியைப் பெற்றுச் சமூகத்தில் தம்மை இனங்காட்டிக்கொள்ள அவரது மனச்சாட்சி இடம் கொடுக்கவில்லை. மாறாக அவர் நைஷ்டிய பிரமச்சாரியானார்.இதன் மூலம் திரிகரண சுத்தியுடன் தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் சைவசமுதாயத்திற்கு அர்ப்பணிக்கத்துணிந்தார்.

தாம் ஏன் பிரமச்சரியம் பூண்டார் என்பதை நாவலர் அவர்களே பின்வருமாறு விளக்கியுள்ளார்.

**"சைவசமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்னும் பேராசையே"**

சாதாரண மனிதர்கள் தங்களை மேம்படுத்த பல ஆசைகளை நிறைவேற்ற முயல்வதை இன்றும் நாம் காணக்கூடியதாக இருக்கிறது. இவ்வாசைகள் பேராசைகளாக மாறும் போது தான் பல இடர்கள் ஏற்படுகின்றன. ஆனால் இல்லறத்தைத் துறந்து துறவியாகிய நாவலருக்கு ஏற்பட்ட பேராசை அவரது சுயநலத்துக்கு அப்பால் தாம் வாழும் சமூகத்தை மேன்மையுறச் செய்ய ஆவன செய்ய வேண்டும் என்பதாகும்.

இத்தகைய தன்னலமற்ற பெருந்தகை தனது வாழ்நாளிலேயே நமது இனத்தின் கலாசார விடுதலைக்கு அர்ப்பணித்ததால் ஈழத்துக் கலாசாரமறுலர்ச்சியின் தந்தை எனப் போற்றப்படுவது மட்டுமன்றி தென்னிலங்கையில் ஏற்பட்ட பின்னர் பௌத்த கலாசார மறுமலர்ச்சிக்கெல்லாம் இவரது சைவ கலாசார மறுமலர்ச்சி தான் வழிகோலியது என்பதையும் தென்னிலங்கை வரலாற்றாசிரியர்கள் அங்கீகரித்துள்ளனர்.

நாவலர் காலத்தில் சைவர்கள் கற்பதற்கு வசன நடையில் நூல்கள் இல்லை. எழுதப்பட்ட நூல்களும் செய்யுள் வடிவிலே தான் காணப்பட்டன. அத்துடன் கிடைக்கும் நூல்களும் ஏட்டுருவில் தான் கிடைத்தன.

இவற்றை எல்லாம் தேடி இலகு தமிழில் நூல்களையும் விளக்க உரைகளையும் நாவலர் எழுதியதோடு இளைஞரும் முதியோரும் கல்வி கற்பதற்கான நடவடிக்கைகளில் இறங்கினார்.

அவரது வாழ்விடமே முழு நேர கல்வி நிலையமாகியது. திண்ணைப் பள்ளிக் கூடங்கள் குறிப்பாக ஆசிரியர் வாழ்விடங்கள் தான் அக்கால கல்வி நிலையங்கள். இப்போக்கினை மாற்றி பாடசாலைகளை ஆரம்பித்த பெருமை நாவலருக்கே உண்டு.

நாவலர் திரிகரண சுத்தியுடன் மேற்கொண்ட நடவடிக்கையால் பல நல் மாணாக்கர்கள் அவரைச் சூழ்ந்து அவரது பணிகளை முன்னெடுப்பதற்கு அயராது உழைத்தனர். இதனால் அன்றும் இன்றும் யாழ்ப்பாணத்தில் "நாவலர் மரபு" "நாவலர் வழிவந்த யாழ்ப்பாண கலாசாரம்" ஒன்று வேரூன்றி வளர ஆரம்பித்தது. இது நாவலரது அயராது உழைப்பிற்கு கிடைத்த சன்மானமாகும்.

### நாவலரும் சேர் பொன் இராமநாதனும்

நாவலர் அவர்கள் தமக்குப் பின்னும் தமது பணியைத் தொடர் நல்லதொரு மாணாக்கர் கூட்டத்தினை கவர்ந்தது போல் தனக்குப்பின்னர் இப்பணியை பன்மடங்காக விஸ்தரிக்கச் செய்யும் ஆற்றல் வாய்ந்த ஒருவரையும் தேர்ந்தெடுத்துச் செல்வதிலும் வெற்றி கண்டார். எவ்வாறு சுவாமி இராம கிருஸ்ணபரமகம்சரின் சிந்தனைகளைச் சுவாமி விவவோகனந்தர் உலகளாவ எடுத்துச் சென்றர்ரோ அவ்வாறே நாவலரது சிந்தனைகள் பன்மடங்காக பிரகாசிக்க வைக்க ஒருவர் தோன்றினார். அவர் வேறு யாரும் இல்லை. சேர் பொன் இராம நாதன் ஆவார்.

இதற்கான சந்தர்ப்பம் 1879இல் கிட்டியது. இவ் வாண்டில் தான் கலாயோகி ஆனந்த குமார சுவாமியின் தந்தையாரான சேர் முத்துக் குமாரசுவாமி அவர்கள் தமிழ் பிரதிநிதியாக சட்ட சபையில் இருந்து மறைய அவரிடத்தில் ஒருவரைத் தெரியும் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

அக்காலத்து யாழப்பாணத்துப் பெரியோர் ஒன்று கூடி ஒருவரது பெயரை கவர்னருக்கு சிபார்சு செய்வதும் வழக்கமாகியது. தமிழர் பிரதிநிதியாக சட்டசபையில் இடம் பெறுவதற்கு அப்போது 29 வயதான இராமநாதனும் அவரது சகலனுமாகிய பிறிட்டோவும் விளைந்தனர். சட்டத்தரணியாகிய இராமநாதனை விட பிரிட்டோ சட்டத்துறையில் பிரபல்யம் பெற்றிருந்ததோடு வயதாலும், அனுபவத்தாலும் , செல்வாக்காலும் முதன்மை பெற்றிருந்தார்.

அக்காலத்து நல்லூர் முருகன் ஆலய அறங்காவலருக்கும் ஆந்தணப் பெருமக்களுக்குமிடையே ஏற்பட்ட வழக்கில் நல் லூர் அறங்காவலர் சார்பாக நீதிமன்றத்தில் ஆஜரானவர்தான் பிறிற்வோவாகும் நாவலரோ எனில் அந்தணப் பெருமக்கள் சார்பில் செயற்பட்டவர். நாவலர் தமக்குச் சார்பாக இயங்கினால் தாம் நல்லூர் அறங்காவலரை ஆதரிக்காது இரகசியமாக அந்தணப் பெரு மக்கள் பக்கம் சாய்வதற்கு ஆயத்தம் என்றும் தூதும் அனுப்பியிருந்தார். இத்தகைய மனச்சாட்சிக்கு விரோதமான செயலில் பிறிட்டோ இறங்குவதைக்கண்டு நாவலர் வெகுண்டார்.

எனினும் நாவலரின் ஆளுமையை வெளிக்காட்டுவதற்கான சந்தர்ப்பம் 1879 ஆம் ஆண்டிலே தான் வந்தது. இச் சந்தர்ப்பமாக அமைந்தது தான் 1879ஆம் ஆண்டு 22ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலையில் நடந்த கூட்டமாகும். நாவலர் இருக்கும் போது கலந்து கொண்ட இறுதியான பொது நிகழ்ச்சியாகவும் இது அமைந்தது. அன்றைய யாழ்ப்பாண முன்னணிப் பிரமுகர்களான மூவாயிரம் பேர் இக் கூட்டத்தில் பங்கு பற்றினர். இக் கூட் டம் நடைபெற்ற போது தொய்வு நோயினால் பீடிக்கப் பட்ட நாவலர் தமது மாணாக்கரான கரோல் விஸ்வநாதப்பிள்ளையை தலைமை தாங்கி இதனை நடாத்தச்சொல்லி விட்டு ஒரு தூண் அருகில் அமர்ந்திருந்து நடவடிக்கைகளை அவதானித்துக்கொண்டிருந்தார்.

எனினும் பிரிட்டோவின் ஆதரவாளர்கள் முன்னணியில் நிற்பதைக் கண்ட நாவலர் அவர்கள் கரோல் விசுவநாதப்பிள்ளையை ஒதுங்கச்சொல்லி விட்டு தாமே கூட்டத்திற்கு தலைமைதாங்கி இராமநாதன் சார்பாக ஒரு பிரேரணையை முன் வைக்க குழம்பியிருந்த சபை எதுவித முணுமுணுப்பும் அதனை ஏற்றுக்கொண்டது.

இச் சம்பவம் தான் பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஐயா அவர்களின் ஆறுமுக நாவலர் பற்றிய நூலில் "நாவலர் எழுந் தார்" என்ற தலையங்கத்தில் ஒரு அத்தியாயமாக இடம்பெற்றுள்ளது.

அன்று நாவலர் அவர்கள் முன் வைத்த பிரேரணை இது தான். நமக்கு முன்பு இன்றுள்ள கடமை தகைசார்ந்த இந்தப் பெருமகனின் (சேர். முத்துக்குமாரசுவாமியின்) இடத்துக்கு தகுதி வாய்ந்த ஒருவர் யார் என்று காண்பதே. சட்ட சபையிலே எமது பிரதிநிதியாக அமர்பவர் தமிழராய் இருத்தல் வேண்டும் அவர் சிறந்த கல்விமானாய் விளங்கல் வேண்டும். உயர்ந்த கொள்கை உடையவராதல் வேண்டும். நல்ல செல்வ வசதி பெற்றிருத்தல் வேண்டும் உயர்ந்த சமூகத்திலே பழகக்கூடிய நல்வாய்ப்பு உடையவராதல் வேண்டும் தமது கருத்துக்களை சுதந்திரராயும் எந்தச் சூழலிலும் எவ்வித அச்சமுமின்றி அக் கருத்துக்களை வெளியிட வல்லராயும் இருத்தல் வேண்டும். இவை யாவிலும் மேலாக அவர் ஆள்வோரதும் ஆளப்படுவோரதும் மதிப்பிற்கு உரியவராதல் இன்றியமையாதது.

பெரியவர்களே பொறுமையோடு ஆராய்ந்தால் மேற்கூறிய பண்புகள் யாவும் பொருந்தியவர் பொன்னம்பல முதலியார் இராமநாதன் அவர்களே என்பதில் ஐயத்திற்கு இடமில்லை.... இங்குள்ளவர்களின் எவரும் திரு.இராமநாதனில் நம்பிக்கையற்றவராய் இரார் என்பது எனது நம்பிக்கை. எனவே பின்வரும் பிரேரணையை உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன். (தொடரும்)


பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்
தகைசால் பேராசிரியர்,
தலைவர், சேர். பொன். இராமநாதன்,
நம்பிக்கை நிதியம்,
துணைத்தலைவர், நாவலர் பணி மன்றம்.


## நாவலனைப் போற்றிடுவோம் !

தமிழொடு சைவத் திருநெறி தழைத்திட
நூல் பல தந்தும் பிரசங்கம் செய்தும்
தமிழொடு சைவ நூல்களை அச்சிட
அச்சு இயந்திர சாலைகள் அமைத்தும்
தமிழொடு சைவக் கல்வியை வளர்த்திட
வித்தியா சாலைகள் தாபித்தும் மேலாம்
தமிழொடு சைவம் காத்திட அரிய
தொண்டுகள் செய்த நாவலனை போற்றிடுவோம் !

நாயன்மார்க்கட்டு ப.மகேந்திரதாசன்

# விவாத அரங்கு 2

## யாழ். குடாநாட்டின் வீதிகளை விஸ்தரிப்பது

## உடனடி அவசியம் ⇄ அவசியமில்லை

# இரண்டாம் அமர்வு

## வீதிகளின் விஸ்தரிப்பு காலத்தின் கட்டாய தேவை



தற்போது யாழ். குடாநாட்டின் சூழ்நிலைகள் வழமைக்கு திரும்பி வருகிறது. மக்களின் வாழ்க்கை முறையும் இயல்புக்கு திரும்பி வருகின்றது. இதனால் மக்களின் தேவைகளும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

மக்கள் தம்தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள மிகவும் இன்றியமையாத ஒரு சேவை போக்குவரத்தாகும். அதிலும் விரைவானதும் பாதுகாப்பானதுமான போக்குவரத்தே அவசியமானதாகும். இப்படியான போக்குவரத்து எம்மக்களுக்கு தேவை என்றால் வீதிகளை விஸ்தரித்தலும் முக்கியமான தொன்றாகும்.

தென்னிலங்கை நகர வீதிகளோடு ஒப்பிடும் போது எமது பிரதேச வீதிகள் மிகவும் அகலம் குறைந்தவையாகும்.

ஒரு பிரதேசத்தின் பொருளாதார வளர்ச்சி யில் வீதிகள் பெரும் பங்கு வகிக்கின்றன. வீதிகள் விஸ்தரிக்கப்படுவதனால் இலகுவானதும், விரைவானதும், பாதுகாப்பான்துமான போக்குவரத்துக்கள் நடைபெற துணை புரிகின்றது. இன்று ஏ-9 வீதி திறக்கப்பட்டுள்ளதன் காரணமாக யாழ்ப்பாணத்திற்குள் அதிகமான வாகனங்கள் உள் வருகின்றன. அதில் கனரக வாகனங்களும் அடங்கும். ஆனால் இந்த கனரக வாகனங்கள் மிகவும் சிரமத்துடனேயே இவ் வீதிகள் வழியே பய ணிக்கின்றன. இதற்கு காரணம் வீதிகள் விஸ் தரிக்கப்படாமையே ஆகும்.

பிரதான வீதியில் இருந்து குறிப்பிட்ட தூரத்துக்கு அப்பால் தான் பொதுமக்கள் கட்டிடங்களை அமைக்க வேண்டும் என்று சட்டம் சொல்கிறது. எனினும் சிலர் சட்டத்துக்கு முரணான வகையில் குறிப்பிட்ட தூரத்திற்கு உள்ளேயே கட்டிடங்களை கட்டியுள்ளனர். இப்படியான சட்ட விரோதமான கட்டிடங்களை அகற்றுவதற்கு அரசுக்கு அதிகாரம் உண்டு.

எது எப்படி இருப்பினும் தற்போதைய இயல்பான சூழ்நிலையை வாய்ப்பாகக் கொண்டு உடனடியாக யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்து பிரதான வீதிகளையும் விஸ்தரிப்பதே காலத்தின் தேவை மாத்திரமல்ல, கட்டாயமும் கூட.

**கனகரட்ணம் கவிநாத்**
**கரவெட்டி மத்தி, கரவெட்டி.**

## யாழ்ப்பாணத்தின் வீதிகளை விஸ்தரித்தல் உடனடியாக அமுல்படுத்தவேண்டும்



போக்குவரத்து வாகனங்களும், சனநடமாட்டமும் அதிகரித்துக் கொண்டே போகின்ற காலகட்டத்தில்நீண்டகாலத்திற்கு முன்னர் அமைக்கப்பட்ட வீதிகள் இன்று பெரும் இடர்பாடுகளையும், தடைகளையும் ஏற்படுத்துவதனால் யாழ்ப்பாணத்தின் வீதிகளை விஸ்தரித்தல் உடனடியாக அமுல்படுத்த வேண்டுமென்ற அவசியத்தை இங்கு குறிப்பிடலாம்.


யாழ்ப்பாணத்தில் கடைத் தொகுதிகள், அரசாங்க காரியாலயங்கள், ஆலயங்கள் ஆஸ்பத்திரிகள், சந்தைகள் என நெருக்கமாக இருக்கின்ற பகுதிகளில் வாகனங்கள் பாதசாரிகள் நெருக்கமாகப் பயணிக்கின்ற வேளை வீதிகள் ஒடுக்கமாகவும் செப்பனிடப்படாமலும் இருப்பது மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்த வாய்ப்பாகிறது.

வீதிகள் விஸ்தரிப்புச் செய்யப்படாத விடத்து விபத்துக்களை மக்கள் சந்திக்க வேண்டிய அவலநிலை ஏற்படுகிறது. யாழ்ப்பாணத்தின் நகரமையப் பகுதிகளில் நெருக்கமான கடைத் தொகுதிகளும், அவற்றிற்கு முன்பாக வீதியோரங்களில் தற்காலிக விற்பனைக் கடைகளும் இடம் பெற்றிருப்பதும், வீதிகள் விஸ்தரிப்பின்றி இருப்பதும், என்றும் மக்களுக்கு இடைஞ்சலான காரியமாகத் தெரிகிறது.

எனவே யாழ்ப்பாணத்தின் வீதிகளை விஸ்தரித்தல் உடனடியாக அமுல்படுத்த வேண்டும் என்பது எனது கருத்தாகும்.

**வ.காந்திமதிநாதன்**
**கொற்றாவத்தை.**

## யாழ்ப்பாணத்தில் வீதிகளை விஸ்தரித்தல் தற்போது அமுல்படுத்துவது அவசியமில்லை



*ஆழமறியாமல் காலை விடாதே* என்பது தமிழ் பழமொழி. அதா வது விடயப்புலமை இன்றி எந்தவொரு விடயத்தையும் மேற்கொள்ள முயலாதே என்பதாகும். யாழ்ப்பாணத்தில் வீதிகளை விஸ்தரித்தல் என்பது யாருமே விரும்பாத ஒன்றல்ல; அனைவ ருக்கும் நன்கு விருப்பமானது. பலருடைய மனங்களிலே நீண்டகாலமாக அலைபாய்ந்து வரும் எண்ணக்கருவாகக் கூட இது விளங்குகிறது.

ஆனால் தற்காலத்தில் அதனை அமுல்படுத்துவது என்பது அவசியமற்ற ஒன்றாகும். இன்றைய காலகட்டத்தில் யாழ். மக்களின் தேவை வீதிகளை விஸ்தரிப்பு செய்வதல்ல. மாறாக நிரந்தரமான, நிம்மதியான, மகிழ்ச்சியான வாழ்வு வாழ்வதே அவர்களின் அடிப்படையான தேவையாக உள்ளது.

எங்களுடைய மக்கள் கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக யுத்தத்தின் பளுவை தாங்க முடியாதவர்களாக, நாடோடிகளாக அலைந்து திரிகிறார்கள். இன்னும் அவர்க ளுக்கான தீர்வு வழங்கப்படவில்லை. மற்ற வர்களிலே தங்கி வாழ்கின்ற வாழ்க்கையே அவர்களுக்கு கிடைத்திருக்கிறது.

அவர்கள் இருந்த இடம், இல்லாமல் ஒழிக்கப்படிருக்கிறது. அவைகள் காடுகளாகவும், வனாந்தரமாகவும், இராணுவக் காவலரண்களாகவுமே இப்பொழுது காட்சியளிக்கின்றன. இவ்வாறான நிலையில் எங்கே வீதி விஸ்தரிப்பு செய்வது?

இடம் பெயர்ந்த நிலையிலே தங்களுக்கு கிடைத்த பாதுகாப்பான இடங்களிலும், சொந்த பந்தங்களின் வீடுகளிலும் இன்னும் முகாம்களிலுமே எமது மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இதனால் இடநெருக்கடி, சனநெருக்கடி போன்ற பிரச்சனைகள் எழுந்துள்ளது. இவ்வாறு மக்களின் வாழ்க்கை இருக்கையில் எவ்வாறு வீதி விஸ்தரிப்பு செய்வது...?

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் அநேகமான கட்டடங்கள் வீதியின் அருகிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன. வீதி விஸ்தரிப்பு செய்வதாயின் இவைகள் அகற்றப்பட வேண்டிய தேவை இருக்கிறது. இதனால் தொடர்ந்தும் பாதிக்கப்போவது எமது மக்களே. ஆகவே வீதி விஸ்தரிப்பு என்பது தற்போது அவசியமற்றதாகும்.

**கெ.இரோன்**
**பண்டத்தரிப்பு**

## விபத்துக்களைத் தவிர்க்க வீதிகளை விஸ்தரிப்பது அவசியம்



யாழ்ப்பாணத்தின் பெரும்பாலான வீதிகள் போக்குவரத்து வசதிகளிற்கு போதாமையாக இருப்பதால் வீதி விபத்துக்கள் இடம்பெறுகின்றன. இதனால் மனித வளம் மற்றும் பொருளாதார வளம் இழக்கப்படுகின்றது. குறிப்பாக யாழ்ப்பாணத்தின் கே.கே.எஸ்.வீதி தொடக்கம் பண்ணைவீதி வரை வீதிகள் விஸ்தரிக்கப்படாமையால் வீதி விபத்துக்கள் நடைபெறுவதை அவதானிக்கக் கூடியதாய் உள்ளது.

யாழ்ப்பாண நகரத்தின் முக்கிய இடங்களிலும் ஏனைய இடங்களிலும் நடைபாதை வியாபாரம் இடம்பெறுகின்றது. மற்றும் மாநகர சபை எல்லைப் பிரதேசங்களில் காணப்படுகின்ற கடைகளுக்கும் வீதிகளுக்கும் இடைவெளியானது மிகக் குறைவாகும். இவற்றிற்கு சட்ட நடவடிக்கை எடுப்பதன் மூலமே இவற்றை தடைசெய்து வீதிகளை விஸ்தரிக்கமுடியும். இதனால் போக்குவரத்து நெருக்கடி குறைக்கப்படும்.

யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வரும் சனத்தொகையினாலும், அவர்களின் பொருளாதார வளர்ச்சியாலும் போக்குவரத்து நெருக்கடி மிகையாகக் காணப்படுகின்றது. இதனை குறைவடையச் செய்ய யாழ்ப்பாணத்தின் வீதிகளை விஸ்தரித்தல் உடனடியாக அமுல்படுத்த வேண்டும்.

போக்குவரத்து வீதிகள் விஸ்தரிக்கப்படாமல் இருப்பதால் போக்குவரத்து சமிக்ஞைகள் சட்டதிட்டங்க்ள் என்பவற்றை சரிவர பின்பற்ற முடியாதுள்ளது. ஆக்வே யாழ்ப்பாணத்தில் வீதிகளை விஸ்தரித்தல் உடனடியாக அமுல்படுத்த வேண்டும்.

**தர்சிகா புஸ்பராசா**
**நாவலடி வீதி,**
**வண்ணார்பண்ணை.**

## வாகனங்கள் அதிகரிக்கும் போது வீதிகளின் விஸ்தரிப்பு அவசியம்



யாழ். மாநகரத்தை சென்றடையும் பிரதான பெரும் வீதிகள் அனைத்தும் உடனடியாக விஸ்தரிக்கப்பட வேண்டும். முக்கியமாக யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட பெருந்தெருக்கள் இணையும் வீதிகள் உடனடியாக விஸ்தரிக்கப்பட வேண்டும். குறிப்பாக முக்கியமான பெருந்தெருக்கள் வீதிகளான யாழ்-பருத்தித்துறை வீதி, யாழ்-கண்டி வீதி, யாழ்- பொன்னாலை வீதி, யாழ்-காங் கேசன் துறை வீதி, யாழ்- பலாலி வீதிகள் அனைத்தும் உடனடியாகவே விஸ்தரிக் கப்பட வேண்டும்.

கிட்டத்தட்ட நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகாரணமாக 20 வருடகாலமாக வீதிகள் அனைத்துமே முழுமையாக செப்பனிடப்படவில்லை. யாழ் மாவட்டத்தில் தற்சமயம் வாகனப் போக்குவரத்துக்கள் குறிப்பாக மோட்டார் சைக்கிள்கள் அதிகம். வீதிகள் குறுகி இருப்பதால் வாகனங்கள் ஒன்றை ஒன்று விலத்தும் போது அல்லது முந்திச் செல்லும் போதும் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

வீதி இருமருங்கிலும் செல்லும் பாதசாரிகளும், துவிச்சக்கர வண்டி ஓட்டுனர்களும் விபத்துக்குள்ளாகின்றார்கள். மரணங்களும் ஏற்படுகின்றன. மேலும் தார் வீதிகள் அனைத்தும் கிளறி கல்போட்டு உயர்த்தப்பட வேண்டும். வீதி இருமருங்கும் உயர்ந்தும் தார்வீதிகள் பதிந்தும் காணப்படுகின்றன.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் இருமருங்கும் உள்ள மண்ணை அகற்றுகின்றார்களே ஒழிய வீதியினை உயர்த்தவில்லை. எனவே எனது கருத்துப்படி இருவிடயங்களும் தார்வீதிகள் முழுமையாக உயர்த்தி செப்பனிடப்படுவதுடன், வீதிகள் விஸ்தரித்தலும் ஒரே நேரத்தில் இடம் பெற வேண்டும். இதனை உடனடியாக அமுல்படுத்தினால் எல்லாப் பொதுமக்களும் நன்மை அடைவார்கள்.

**க.கனகசபை**
**கலாஜோதி புத்தக நிலையம்,**
**சங்கானை.**

# விவாத அரங்கு 3

## மாணவர்களின் கல்வி முன்னேற

## யாழ். குடாநாட்டிலுள்ள சிறிய பாடசாலைகளை பெரிய பாடசாலைகளுடன்

## இணைக்க வேண்டும் ⇄ இணைக்கக் கூடாது

**உங்கள் கருத்துக்களை அனுப்ப வேண்டிய இறுதித்திகதி :– 11.12.2009**

குறிப்பு: ஒரு தடவை விவாத அரங்கில் கலந்து கொண்டவர்கள் இன்னொரு விவாத அரங்கில் பங்கேற்பது தவிர்க்கப்பட்டுள்ளது.




நீர்வேலி ஸ்ரீ கணேசா சனசமூக நிலையத்தின் வைரவிழா ஸ்ரீ கணேசா முன்பள்ளியின் வெள்ளிவிழா நிகழ்வுகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மதுமதி வசந்தகுமாருக்கு முன்பள்ளி ஆசிரியை செ.சிவாஜினி மாலை அணிவித்து வரவேற்பதையும் ஆங்கில ஆசிரியரும் சனசமூக நிலைய ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவருமான த.ந.பஞ்சாட்சரம் மங்கல விளக்கேற்றுவதையும் நிலையத் தலைவர் ச.க.முருகையா உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் 100 பேர் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்த 100 முன்னாள் உறுப்பினர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் வழிகாட்டல்களின் காரணமாக குறித்த நபர்கள் உயர்தரப் பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு பரீட்சைக்குத்தோற்றிய முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களில் 100 பேர் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் உள்ளிட்ட நாட்டின் ஏனைய பல்கலைக் கழகங்களில் தமது கல்வியைத் தொடர உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர்கள் நீண்டகாலத்திற்கு தடுத்து வைக்கப்படுவார்கள் என்ற சில விமர்சனங்களுக்கு பதிலளிக்கும் வகையில் அரசாங்கம் இந்த நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஓ-6)

# ஜே.வி.பி எம்.பி லால்காந்தவின் காரியாலயம் மீது தாக்குதல்

(கொழும்பு)

ஜே.வி.பி.பாராளுமன்ற உறுப்பினர் கே.டி.லால்காந்தவின் அனுராதபுர காரியாலயம் மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். காரியாலயம் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டதாக கட்சிக் காரியாலயத்திற்கு முன்னால் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறெனினும், இந்தத் தாக்குதல்களில் எவரும் காயமடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பொலிஸ் சீருடை தரித்த நபர்களே இந்தத் தாக்குதலை நடத்தியதாக ஆதரவாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதேவேளை, புத்தளம் பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி காரியாலயம் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அண்மையில் தாக்கியழிக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டாரவின் கட்சிக் காரியாலயம் மீதே மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

குறித்த காரியாலயம் அண்மையில் ரணில் விக்கிரமசிங்கவினால் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வெள்ளை வானில் வந்த இனந் தெரியாத குழுக்களே இத்தாக்குதலை மேற்கொண்டிருக்கக் கூடுமென அறிவிக்கப்படுகிறது.

(6)

# ஐ.தே.க.நிகழ்வுகள் புறக்கணிக்கப்படும் அரச ஊடகங்கள் அறிவிப்பு

எதிர்வரும் காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சியினால் முன்னெடுக்கப்படும் நிகழ்வுகள் புறக்கணிக்கப்படும் என அரசாங்க ஊடகங்கள் அறிவித்துள்ளன.

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன தொலைக்காட்சி ஆகியன எதிர்வரும் காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டங்கள் மற்றும் ஊடகவியலாளர் மாநாடுகளை தவிர்க்கத் தீர்மானித்துள்ளன.

கடந்த சனிக்கிழமை வத்தளையில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சி தேசிய மாநாட்டின் போது தமது ஊடகவியலாளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவ்வூடகங்கள் தெரிவித்துள்ளன.

ஊடகங்கள் மீது தாக்குதல் நடத்தியதன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி தமது நிகழ்வுகளுக்கு அரச ஊடகங்கள் கலந்துகொள்ளும் என எதிர்பார்க்க முடியாது என ஊடக அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா குறிப்பிட்டுள்ளார்.

(ஓ-6)

# தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரி வியாழக்கிழமை கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு வலுயுறுத்தி நாளை மறுதினம் வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொழும்பு கோட்டைப் புகையிரத நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது.

அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான அமைப்பின் ஏற்பாட்டிலேயே அரசாங்கத்தை வலியுறுத்தும் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது.

இது தொடர்பாக இவ் அமைப்பின் அமைப்பாளர் சமில் ஜயநித்தி மேலும் தெரிவிக்கையில்,

தற்போது புலிகளின் செயற்பாடுகள் ஒளிக்கப்பட்டிருப்பதாக அரசாங்கம் அறிவிக்கின்றது.

அப்படியானால் இன்றைய நாட்டுச் சூழலில் பயங்கரவாதத் தடைச்சட்டம் தேவையா? இந்த சட்டத்தின் கீழ் கைதானவர்களை தடுத்து வைத்திருப்பது எவ்வாறு நியாயமாகும்.

இது ஓர் இனத்துக்கு செய்யும் துரோகச் செயலாகும். 1971 , 1988-89 காலகட்டங்களில் ஏற்பட்ட கிளர்ச்சிகளில் பங்கேற்ற சிங்களவர்கள் அரசியல் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டு பின்னர் படிப்படியாக விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் இன்று 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் விடுவிக்கப்படாது தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை விடுவிக்க வேண்டுமென வலியுறுத்தியே சர்வதேச மனித உரிமை தினமான நாளை மறுதினம் வியாழக்கிழமை இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்துகிறோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஓ-6)

# பருவ மழை மாற்றம் நெல் விளைச்சலுக்கு பாதகம்

## விஞ்ஞானிகள் எச்சரிக்கை

(கொழும்பு)

பருவ நிலை மாற்றத்தால் தெற்காசிய மக்களின் அதிலும் குறிப்பாக தமிழர்களின் பிரதான உணவு தானியமான நெற்பயிரின் விளைச்சல் கடுமையாக பாதிக்கப்படக்கூடும் என்று விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

தமிழகத்தில் ஒரு ஹெக்டேயர் நிலத்தில் தற்போதைய நிலையில் சராசரியாக இரண்டரை முதல் ஐந்து தொன் வரை நெல் விளைகிறது. ஆனால் பருவநிலை மாற்றம் காரணமாக வேகமாக புவி வெப்பமடைந்து வருவதால் அடுத்த பத்து ஆண்டுகளில் அதாவது 2020ஆம் ஆண்டுக்குள் தற்போதைய நெல் விளைச்சலில் பதினைந்து முதல் இருபது சதவீதம் வரை வீழ்ச்சியடையும் என்று வேளாண் விஞ்ஞானிகள் கணக்கிட்டிருக்கிறார்கள்.

அதைத் தடுப்பதற்கான ஆராய்ச்சிகளும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கோவையில் இருக்கும் தமிழ்நாடு வேளாண்மைப்பல்கலைக்கழகம் அத்தகைய ஆராய்ச்சியை செய்து வருகிறது.

(ஓ-6)

# உதவி ஆசிரியர்களை பதிவு செய்யக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலயத்தில் புதிதாக நியமனம் பெற்ற சகல உதவி ஆசிரியர்களையும் நெ.ம.மகாவித்தியாலயத்தில் அமைந்துள்ள வடமராட்சி வலய ஆசிரிய நிலையத்தில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பதிவு செய்து கொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொள்கின்றார்.

(ஓ)

# அங்கவீனமுற்றவர் வாக்களிக்க புதிய நடவடிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் அங்கவீனமுற்றவர்களுக்கு வாக்களிப்பதற்கான உரிமையைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் புதிய நடவடிக்கை ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக சமூக சேவைகள் பிரதியமைச்சர் லயன்ஸ் பிரேமசிறி தெரிவித்துள்ளார்.

இத் திட்டத்தின் மூலம் முழுமையாக அங்கவீனமுற்றவர்களில் 4 சதவீதத்திற்கு மேற்பட்டவர்களுக்கு வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஓ-9)

# வடக்கு முஸ்லிம்கள் இம்மாதம் 26 ஆம் திகதி மீள்குடியேற்றம்

(கொழும்பு)

யுத்தகாலத்தில் வெளியேற்றப்பட்ட வடக்கு முஸ்லிம்கள் எதிர்வரும் 26 ஆம் திகதி மீண்டும் மீள்குடியேற்றப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புத்தளம் மற்றும் ஏனைய மாவட்டங்களில் இடம்பெயர்ந்து வாழ்ந்து வந்த வடக்கு முஸ்லிம் மக்கள் 20 வருடங்களுக்குப் பின்னர் தமது சொந்த இடங்களுக்கு திரும்பவுள்ளனர்.

எதிர்வரும் 26 ஆம்திகதி நடைபெறவுள்ள மீள்குடியேற்றும் வைபவத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இருபது வருடங்களுக்கு முன்னர் வடக்கில் வசித்துவந்த ஒரு இலட்சம் முஸ்லிம் மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டதாக அனர்த்த நிவாரண மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் ரிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

குறித்த முஸ்லிம்களை மீள்குடியேற்றுவது தொடர்பில் 2002 சமாதான உடன்படிக்கை காலத்தின் போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போதிலும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதுகுறிப்பிடத்தக்கது.

(ஓ-6)

# மக்களை மட்டுமன்றி இயற்கை வளத்தையும் சீரழித்த வடக்கு – கிழக்கு யுத்தம்

20 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் விஞ்ஞான வளர்ச்சியின் உச்சக் கட்டமாக வளர்ந்து வரும் உற்பத்தி, தொழில் நுட்ப முன்னேற்றம் என்பன உலகின் இயற்கைச் சூழலுக்கு மிகப்பெரும் அச்சுறுத்தலாக மாறி வருவதனைக் காணமுடிகின்றது.

இதனால் அழிக்கப்படுகின்ற அல்லது குழப்பமடைகின்ற இயற்கைச் சூழலின் எதிர்வினை காலநிலை மாற்றத்தை ஏற்படுத்தவல்லது. இதனால் புவியில் வெப்ப அதிகரிப்பு ஏற்பட்டு வடதுருவப் பனிப்பாறைகள் உருகுவதனால் உலகின் சில நாடுகள் நீரில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் தான் சமூக ஆர்வலர்கள் 21 ஆம் நூற்றாண்டில் சுற்றுச் சூழல் பாதுகாப்பினை உறுதிப்படுத்த பெரும் பிரயத்தனம் மேற்கொண்டிருக்கின்றனர்.

இந்த வகையில் இலங்கையின் சுற்றுச் சூழல் பாதுகாப்பு என்பது அரசினைப் பொறுத்தவரை மிகக் கசப்பானதொன்றாகவே கணிப்படுகின்றது. கடந்த 15 ஆண்டுகளில் இலங்கையின் வடக்குக் கிழக்கில் ஏற்பட்ட தீவிரமான யுத்தம் அப்பகுதியின் மக்களை மாத்திரமல்ல இயற்கை வளத்தையும் மிகப் பாரதூரமாகவே சீரழித்து விட்டிருக்கிறது.

வட – கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட மிகப் பிரமாண்டமான இராணுவ நடவடிக்கைகள் வட – கிழக்கின் இயற்கை காடுகளையும், பயன்தரு மரங்களையும் பெருமளவில் அழித்து இப்பிரதேசங்களின் சுற்றுச் சூழல் பெருமளவில் பாதித்திருக்கும் வகையினை நோக்குவோம்.

இலங்கையின் வட – கிழக்கு காடழிப்பு என்று பெரும்படியாகக் குறிப்பிட்டாலும் வடக்கில் நிகழ்ந்த காடழிப்புக்களே உத்தேச மதிப்பீட் டுக்கு உட்படுத்தப்பட்டதாக அல்லது அறியப் பட்டதாக உள்ளது.

வடக்கில் நிகழ்ந்த பெருமெடுப்பில்லான காடழிப்பு நடவடிக்கையை நோக்குவோமாயின் 1996 இல் வவுனியாவிலிருந்து மன்னார் நோக்கி மேற்கொள்ளப்பட்ட எடிபல இராணுவ நடவடிக்கை மூலம் ஏ30, ஏ14 ஆகிய இரு வீதிகளின் இரு மருங்கிலும் சராசரி 50 தொடக்கம் 100 மீற்றர் வரையான அகலமாக உள்ள காடுகள் அழிக்கப்பட்டு அவை இராணுவ பாதுகாப்பு வேலிகளுக்குள் விழுங்கப்பட்டு விட்டன.



இதில் மதவாச்சியிலிருந்து மன்னார் செல்லும் ஏ 14 வீதியில் செட்டிகுளத்திலிருந்து பறையனாலங்குளம் ஊடாக கட்டையடம்பன் வரை கிட்டத்தட்ட 30 கிலோ மீற்றர் தூரத்திற்கு வீதியின் இருமருங்கிலும் உள்ள காடுகள் அழிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே வவுனியா – மன்னார் ஏ 30 வீதியில் பூவரசங்குளத்திலிருந்து பறையனாலங்குளம் வரையாக கிட்டத்தட்ட 25 கிலோ மீற்றர் நீளமான பகுதியில் வீதியின் இரு மருங்கிலும் கிட்டத்தட்ட 50 தொடக்கம் 100 மீற்றர் வரையாக உள்ள காடுகள் அழிக்கப்பட்டன.

அத்தோடு ஏ 30 வீதியின் வடபுறத்தே அமைக்கப்பட்ட பாதுகாப்பு மண் அணையும் பெருமளவு இயற்கைக் காடுகளை அழிக்க வைத்ததோடு சிற்றாறுகளின் நீரோட்டத் திசையினை மாற்றியமைத்து பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்தப்படுகின்ற குளங்களின் நீர் வரத்தினை குளத்தின் நீரேந்துப் பகுதியிலேயே தடுத்து நிறுத்தியதோடு அவற்றின் போக்கினை திசைதிருப்பி விட்டுள்ளது.

மொத்தத்தில் எடிபல இராணுவ நடவடிக்கை வவுனியா – மன்னார் மாவட்டங்களின் இயற்கைக் காடுகளில் ஏறக்குறைய ஆயிரத்து 300 ஏக்கர் பரப்பளவு அழிக்கப்பட்டு விட்டது. இதற்கான மீள்நடுகை இன்றுவரை மேற்கொள்ளப்படவில்லை.

அடுத்து 1997 – 1999 வரையான காலப் பகுதிகளில் இடம்பெற்ற ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கை மிகப் பெரியளவிலான காடழிவுக்கு காரணமாயிற்று.

ஏ9 வீதிவழியே ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கை மூலம் மாங்குளம் வரையான பகுதிகளில் வீதியின் இரு மருங்கிலும் உள்ள காடுகள் அழிக்கப்பட்டதோடு ஓமந்தையிலிருந்து – மாங்குளம் வரையான 40 கிலோ மீற்றர் நீளமான பகுதிகளில் ஆங்காங்கே காணப்படுகின்ற குடியிருப்புக்கள் தவிர்ந்த பகுதிகளில் உள்ள காட்டு மரங்கள் அழிக்கப்பட்டதோடு இப்பிரதேசத்திலிருந்த பயன்தரு தென்னை மரங்கள் முற்று முழுதாக இராணுவத் தேவைகளுக்கென அழிக்கப்பட்டுள்ளது.

ஜயசிக்குறு நடவடிக்கையின் இறுதிக்கட்ட எல்லையாக விளங்கிய மாங்குளத்திலிருந்து கிழக்காக முல்லைத்தீவு செல்லும் ஏ34 வீதியில் ஒட்டுசுட்டான் வரையான 27 கிலோ மீற்றர் நீளப்பகுதியில் வீதியின் இரு மருங்கிலும் 50 தொடக்கம் 100 மீற்றர் வரையான காட்டு மரங்கள் அழிக்கப்பட்டது. அத்தோடு வீதியின் வடபுறத்தே அமைக்கப்பட்ட மண் அணை பாதுகாப்பு அரணுக்காகவும் காடுகள் அழிக்கப்பட்டன.

மாங்குளப் பிரதேசத்தில் மாங்குளம் – மூன்று முறிப்பு – வன்னி விளாங்குளம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய காடு வளர்ப்புத் திட்டத்தினால் வளர்க்கப்பட்ட தேக்கங் காடுகளும், மற்றும் புதூர் பகுதியிலும், புளியங்குளம் பகுதியிலும் பன்றிக் கெய்தகுளம் பகுதியிலும் இருந்த தேக்கம் காடுகளும் முற்று முழுதாக தறித்து எடுக்கப்பட்டது.

அதே போல் மாங்குளத்திற்குக் கிழக்கே ஒட்டுசுட்டான் பகுதியில் உள்ள தேக்கம் காடுகளும் முற்று முழுதாக வெட்டிச் செல்லப்பட்டு விட்டது. இதன்மூலம் மாங்குளம் பிரதேசத்தில் வளர்க்கப்பட்ட கிட்டத்தட்ட 1000 ஏக்கர் தேக்கங் காடுகள் அழியுண்டு போயின.

ஜயசிக்குறு நடவடிக்கையின் கிழக்கு முனை இராணுவ நகர்வின் மூலம் மணலாற்றிலிருந்து முன்னேறிய இராணுவத்தினர் நெடுங்கேணி – ஒட்டுசுட்டான் வீதியிலும், நெடுங்கேணி – வெடி வைத்தகல்லு வீதியின் இருமருங்கிலும் இருந்த காடுகளை அழித்ததோடு நெடுங்கேணியிலிருந்து – குளவிசுட்டான் – கோடாலி பறிச்சான் ஊடாக ஏ34 வீதியில் உள்ள மணவாளன் பட்ட முறிப்பு வரை காடுகளுக்கூடாக 30 கிலோ மீற்றர் நீளமுடைய ஒரு புதிய பாதையை அமைத்து அதன் இருமருங்கிலும் உள்ள காடுகளை அழித்திருக்கின்றனர்.

ஒட்டுசுட்டான் – நெடுங்கேணியூடாக மணலாற்றிலுள்ள டொலர் கென்ற் பண்ணைகள் வரை கிட்டத்தட்ட 40 கிலோ மீற்றர்களுக்கு தொடர் மண் அணைப் பாதுகாப்பை அமைப்பதற்காகவும் பெருமளவான காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. மொத்தத்தில் ஏ9 வீதிக்குக் கிழக்கே 2500 ஏக்கர் பரப்பளவுள்ள காடுகள் அழிக்கப்பட்டுள்ளதாக உத்தேச மதிப்பீடுகள் கூறுகின்றன. ஆனால் இதன் பரப்பு மேலும் அதிகம்.

அடுத்து ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கையில் ஏ9 வீதியின் மேற்குப் புறத்தே அமைந்திருந்த யாழ். புகையிரதப் பாதையை கிரவல் பாதையாக மாற்றி போக்குவரத்திற்கு பயன்படுத்தியதோடு அதன் மேற்குப்புறம் ஒரு பாதுகாப்பு மண் அணையை நொச்சி மோட்டையிலிருந்து – புளியங்குளம் வரை இரும்புப் பாதைக்குச் சமாந்தரம்ாகவும் பின்பு சற்று மேற்கு நோக்கி வளைந்து புதூர் – புதுவிளாங்குளம் ஊடாக வன்னிவிளாங்குளம் வரை காடுகளுக்கூடாக கிட்டத்தட்ட 50 கிலோமீற்றர்கள் நீளத்திற்கு மண்அணை உருவாக்கப்பட்டது. இதன்மூலம் 1300 ஏக்கர் நிலப்பரப்புக் காடுகள் அழியுண்டன.

இவ்வாறே பிரமனாலங் குளத்திலிருந்து – மடு – பாலம்பிட்டி – பெரியமடு – பள்ளமடு வீதியிலும் இராணுவப் பாதுகாப்பிற்காக இரு மருங்கிலும் உள்ள காடுகள் அழிக்கப்பட்டுள்ளன.

அத்தோடு பள்ளமடுவிலிருந்து காடுகளுக்கூடாக சிறாட்டிகுளம் – பனங்காமம் – மூன்று முறிப்பு – வன்னி விளாங்குளம் – மாங்குளம் ஆகிய இடங்கள் வரை தொடுத்து உருவாக் கப்பட்ட மண் அணைப் பாதுகாப்பு வேலியும், மண் அணைக்கு வெளியே பாதுகாப்புக் கென50 தொடக்கம் 100 மீற்றர் வரையான காட்டு மரங்கள் தறித்தழிக்கப்பட்டதனால் ஏற்பட்ட இழப்பு 1000 ஏக்கர்களுக்கு மேல்.

மொத்தத்தில் ஜயசிக்குறு நடவடிக்கையில் மண் அணைப் பாதுகாப்பு வேலைகளுக்காகவும், வீதிப் போக்குவரத்துக்காகவும் பல ஆயிரம் ஏக்கர்கள் பரப்பளவுக் காடுகள் அழிக்கப்பட்டதோடு மணலாற்றிலிருந்து – மாங்குளம் ஊடாக – பள்ளமடு வரை அமைக்கப்பட்ட பாதுகாப்பு அரணுக்குத் தென்புறத்தே இருந்த பெறுமதி வாய்ந்த வைரமரங்களான பாலை, முதிரை, யாவரணை, சமண்டல்ல ஆகிய மரங்கள் வகை தொகையின்றி அரிந்தெடுக்கப்பட்டன.

அடுத்து யாழ்.குடாநாட்டின் நுழைவாயிலான ஆனையிறவு தொடக்கம் – பளை வரையான பகுதியிலுள்ள இயற்கைத் தாவரம் சதுப்புநில முட்புதற்காடுகளும் பனை மரங்களுமே. இப் பளைப் பிரதேசத்தில் பெரும் பகுதி தென்னை மரப் பயிற்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

பளைக்கு அப்பாலுள்ள முகமாலைப் பகுதியில் கிளாலி தொடக்கம் – முகமாலை – நாகர் கோயில்வரை அமைக்கப்பட்ட இராணுவத் தொடர் வேலியும் மண் அணையும் இராணுவத் தேவைக்காக தறித்தெடுக்கப்பட்ட தென்னை மரங்களின் எண்ணிக்கை 2004 இல் எடுக்கப்பட்ட கணிப்பீட்டின் படி 12,000 இற்கும் மேல் சென்றுவிட்டது.

அதன்பின் இறுதி யுத்தத்தின் போது மேலும் பல ஆயிரம் தென்னைமரங்கள் அழிந்து போயின. அத்தோடு இப்பிரதேசத்தின் இயற்கைத் தாவரங்களான கண்டல் காட்டுத் தாவரங்களும், பனை மரங்களும் பெருமளவில் இராணுவ பீரங்கி, விமானத் தாக்குதல்களினாலும், பாதுகாப்புத் தேவைகளுக்காகவும் தறித்தழிக்கப்பட்டன.

இறுதி யுத்தத்தின் போது இப்பிரதேசத்தின் அழிவுகள் உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக இன்னும் உத்தேச மதிப்பீடு செய்யப்படவில்லை.

இறுதியாக நடந்த யுத்தத்தின் போது வன்னியின் மேற்குப் புறத்தே நாச் சிக்குடா – அக்கராயன் – முறிகண்டி ஊடான தொடர் பாதுகாப்பு முன்னரண் பகுதி தொடர் ச்சியாக நீண்ட நாட்கள் சண்டைகள் இடம் பெற்றதனால் இப்பகுதியில் உருவாக்கப்பட்ட மண் அணைக்காகவும், அகோரக் குண்டுத் தாக்குதல்களினாலும் இராணுவத்திற்கு பாதுகாப்பான போக்குவரத்திற்காக துணுக்காயிலிருந்து அக்கராயன் வரையான வீதிகளின் இருமருங்கிலும் உள்ள பெருமளவிலான காட்டுமரங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக இப்பகுதியின் அழிவுகள் பற்றிய மதிப்பீடு செய்ய முடியாதுள்ளது. மற்றும் கிளிநொச்சி நகரத்தைக் கைப்பற்றுவதற்காக நடந்த உக்கிர மோதல்களின் போது அப்பிரதேசத்தின் பயன்தரு பல்லாண்டுப் பயிர்களான மா, பலா, தென்னை மரங்களை பெருமளவில்



அழிவடையச் செய்துவிட்டது.

அவ்வாறே பரந்தனிலிருந்து ஏ35 வீதி வழியே புதுக்குடியிருப்புவரை, மற்றும் மணலாற்றிலிருந்து – முல்லைத்தீவு வரை இராணுவ நடவடிக்கைகளில் இயற்கை காடுகள் உள்ளிட்ட பல பயன்தரு மரங்களும் அழிக்கப்பட்டன.

இது மட்டுமல்லாது இறுதி யுத்தத்தின் பின்னர் வன்னியிலிருந்த இடம்பெயர்ந்த மக்களை அடைப்பதற்காக அகதி முகாம்களை உருவாக்கவென மதவாச்சி – மன்னார் வீதியில் செட்டிகுளம் பிரதேசத்தில் ஏ14 வீதிக்கும் அதன் மேற்குப் புறத்தில் உள்ள அருவி ஆற்றுக்கும் இடைப்பட்ட பகுதியிலும், வீதியின் கிழக்குப் புறத்திலும் கிட்டத்தட்ட 2000 ஏக்கர் பரப்பளவான இயற்கைக் காடுகள் எவ்வித மாற்று நடவடிக்கையும் எடுக்காமல் அழித்தொழிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு அழித்தொழிக்கப்பட்ட காடுகளில் அமைக்கப்பட்ட முகாம்களான மெனிக்பாம், அருணாச்சலம், கதிர்காமர், ஆனந்தகுமாரசுவாமி முகாம் ஆகியவற்றோடு இணைந்த உப முகாம்களும் அமைந்துள்ள பிரதேசம் இன்று பாலைவனமாகத் தோற்றமளிக்கின்றது.

வடகீழ்ப் பருவப் பெயர்ச்சிக் காற்றின் மூலம் மழையைப் பெறுகின்ற வன்னிப் பெருநிலப் பரப்பு காடுகளின் உயர் மரங்களும், இப்பிரதேசத்தின் உயரமான பனை, தென்னை மரங்களும் அழிக்கப்பட்டதனால் எதிர்காலத்தில் பருவமழை பொய்த்து அல்லது மழைவீழ்ச்சி குன்றுவதற்கான சாத்தியங்கள் அதிகம் உள.

இவ் யுத்தத்தின் போது வன்னியின் காட்டு வளம் மாத்திரம் அல்ல பெருமளவிலான வன விலங்குகளும் மற்றும் விவசாயிகளின் பெருந்தொகையான கால்நடைகளும் அழிவடைந்து இப்பிரதேசத்தின் இயற்கைச் சமநிலை முற்று முழுதாக மாற்றமடைந்து சென்றுள்ளது.

இதன்மூலம் எதிர்காலத்தில் இப்பிரதேசத்தின் இயற்கை அனர்த்தங்கள் மிகப் பாரதூரமான பின் விளைவுகளை ஏற்படுத்த வல்லது. இதனை உலகின் சமூகநல ஆர்வலர்கள் இன்றுவரை கருத்திற் கொண்டதாகத் தெரியவில்லை.

***நன்றி. தி. திபாகரன்***

## இலங்கைத் தமிழர் நலன் குறித்து

# மத்திய அரசின் அணுகுமுறை தமிழக மக்களை பெரும் வருத்தத்திற்குள்ளாக்கியது

## வெங்கையா நாயுடு



(சென்னை)

இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்று பா.ஜக முன்னாள் தலைவரும், மாநி லங்களவை உறுப்பினருமான வெங்கையா நாயுடு வலியுறுத்தினர். இதுதொடர்பாக அவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை சென்னையில் நிருபர்களிடம் கூறியது.

தமிழகம் மற்றும் அதன் அண்டை மாநில மக்கள், இலங்கைத் தமிழர்களின் நிலையைப் பார்த்தும்,இந்திய அரசின் அணுகு முறையைப் பார்த்தும், வெளியில் செல்லமுடியாத அளவுக்கு கோபமும்,வருத்தமும் அடைந்துள்ளனர்.மறுவாழ்வு என்ற பெயரில், தமிழர்கள் ஒரு முகாமில் இருந்து வேறொரு முகாமுக்கு மாற்றப்படுகின்றனர்.

இலங்கையின் இராணுவத் தளபதியாக இருந்த சரத்பொன்சேகா, தான் விருப்ப ஓய்வு பெற்றமைக்கு 16 காரணங்களைக் குறிப்பிட்டார்.அதில், அங்குள்ள தமிழர் முகாம்கள் மோசமாக உள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து அங்குள்ள தமிழர்களின் நிலையைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

பா.ஜ.க. தீவிரவாதத்தை அனுமதிக்கவில்லை . தமிழீழக் கோரிக்கையை பா.ஜ.க. ஒத்துக்கொள்ளவில்லை.நிலையான, அமைதியான இலங்கை உருவாகவேண்டும் என்பதே எங்களின் விருப்பம்.

இந்திய, இலங்கை ஒப்பந்தம் 1987 இன்படி, இலங்கையில் வடக்கு, கிழக்கு பகுதிகளில் உள்ள தமிழர்கள், முஸ்லிம்களுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். விடுதலைப்புலிகள் விடயம் வேண்டுமானால் முடிந்திருக்கலாம். ஆனால் தமிழர் பிரச்சினை இன்னும் முடியவில்லை. இலங்கை அரசு, அங்குள்ள தமிழர்களுக்கு நல்ல வாழ்க்கையை அமைத்துத் தரவும், அரசியல் தீர்வு காணவும் விரைந்து செயல்படவில்லை என்றால், புதிய சவால்களைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

மத்திய அரசில் அங்கம் வகிக்கும் தமிழக முதல்வர் கருணாநிதியும், " இலங்கையின் உள் விவகாரத்தில் தலையிடுவது என்பது அதன் இறையாண்மையைப் பாதிக்கும் என்றாலும், இந்த விடயத்தில் இலங்கையைத் தனியாக கருத வேண்டும் என்று பிரதமருக்கு கடிதம் எழுதி னார். அக் கடி தம் தொடர் பாக பிரதமரி டம் இருந்து எந்தப் பதிலும் இல்லை.

இலங்கைத் தமிழர் பிரச்சி னையின் முக்கியத்து த்தை மத்திய அரசு இன்னும் முழுமையாக உணரவில்லை. இது வேதனை அளிக்கிறது.எனவே, மத்திய அரசு அனைத்துக் கட்சி எம்.பிக்களை கொண்ட குழுவை இலங்கைக்கு அனுப்பி, அங்குள்ள உண்மை நிலவரத்தை உறுதி செய்யவேண்டும். இந்த விடயம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் திங்கட்கிழமை பிரச்சினை எழுப்ப உள்ளோம். (ஓ-6)


## அரசியலிலிருந்து ஓய்வுபெறுவதாக கருணாநிதி நாடகமாடுகிறார்

### சுப்பிரமணிய சுவாமி

(சென்னை)

அரசியலிலிருந்து தான் ஓய்வுபெறப் போவதாக முதல்வர் கருணாநிதி கூறியிருப்பது ஒரு நாடகமாகவும் என்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய ஜனதாக் கட்சியின் தலைவர் சுப்பிரமணிய சுவாமி தெரிவித்துள்ளார்.

இதுசம்பந்தமாக செய்தியாளர் ஒ்ருவர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலே கருணாநிதி ஏற்கனவே இதுபோல தெரிவித்துள்ளார் என்றும் எனவே அவர் அரசியலில் இருந்து முதலில் ஓய்வு பெறட்டும் அப்போது எனது கருத்தைக் கூறுகின்றேன் என்று சுப்பிரமணிய சுவாமி மேலும் கூறியுள்ளார். (ஓ-2-6)




## பட்டனை தட்டினால் விரும்பிய உணவுகளை தயாரித்து தரும் இயந்திரம் கண்டுபிடிப்பு

(பாட்னா)

பீகார் மாநிலம் பகல்பூர் ஆர்யபட்டா பப்ளிக் பள்ளியில் பிளஸ் -2 படித்துவரும் மாணவன் அபிஷேக்.

இவர் தானியங்கி முறையில் உணவு தயாரிக்கும் இயந்திரம் ஒன்றைக் கண்டு பிடித்துள்ளார். மின்சாரம் மூலம் செயல்படும் இந்த இயந்திரத்தில் ஒவ்வொரு உணவு தயாரிக்கும் முறையும் புரோகிராம் ஆகப் பதிவு செய்து பொருத்தியுள்ளார்.

12 வகையான உணவுப் பொருட்களை இந்த இயந்திரத்தில் உள்ள அதற்கான அறைகளில் வைக்கலாம். இதில் இருந்து நமக்கு தேவையான உணவை அந்த இயந்திரமே எடுத்து உணவு தயாரித்து கொடுத்துவிடுகிறது.

ஒவ்வொரு உணவுக்கும் ஒரு பட்டன் உண்டு. அதைத் தட்டினால் அதுவே உடனே சமையல் வேலையைத் தொடங்கி உணவு தயாரித்து தந்து விடுகிறது. அதாவது இந்த 12 பொருட்களில் இருந்து தயாரிக்கக் கூடிய உணவை மட்டும் தயாரிக்கும்.தற்போது டீ, தாளித்த அரிசி உணவு, வடநாட்டு கோலே ஆகிய உணவுகளைத் தயாரித்துக் கொடுக்கிறது.இந்த இயந்திரத்தில் மேலும் பல பொருட்களை வைத்து புரோகிராமும் செய்து வைத்தால் இன்னும் பல உணவுகளையும் தயாரிக்க முடியும்.

தேசிய அறிவியல் கண்டுபிடிப்பு பவுண்டேசன் நடத்திய போட்டியில் இந்த இயந்திரம் இடம்பெற்றது. இதில் அபிஷேக்குக்கு முதல் பரிசு கிடைத்தது. முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் அபிஷேக்கை பாராட்டி பரிசு வழங்கினார். இதுபற்றி அபிஷேக் கூறியதாவது, நான் என் தாயார் சமையல் வேலை செய்யும்போது அவருக்கு உதவியாக இருப்பேன். அப்போதுதான் சமையல் இயந்திரத்தை கண்டுபிடிக்க வேண்டும் என்று ஆர்வம் வந்தது.

சில நிறுவனங்கள் என்னை இந்த கண்டுபிடிப்பு பற்றி அறிய தொடர்பு கொண்டிருக்கின்றன.ஆனால் இதற்கான காப்புரிமை பெற முயற்சித்து வருகிறேன்.அதன் பிறகே தயாரிப்பு முறை பற்-றி நிறுவனங்களுக்கு கொடுப்பேன்.இவ்வாறு அவர்கூறினார்.(ஓ-6)

## மணமகனுடன் செல்ல மறுத்தார் மணமகள் பன்றிக்காய்ச்சல் என்ற அச்சமாம்

### மகாராஷ்டிராவில் சம்பவம்

(அஜ்மீர்)

பன்றிக்காய்ச்சல் பீதியால் மணமகனுடன் செல்ல மறுத்த மணமகளால் குழப்பம் ஏற்பட்டது. மகாராஷ்டிர மாநிலம் புனேயில் பன்றிக்காய்ச்சலால் நூற்றுக்கும் அதிகமானவர்கள் இறந்தனர்.இந்தப் பகுதியைச்சேர்ந்த மணமகனுக்கும், ராஜஸ்தான் மாநிலம் அஜ்மீர் பகுதியைச் சேர்ந்த பெண்ணுக்கும் கடந்த வாரம் அஜ்மீரில் திருமணம் நடந்தது.

திருமணச் சடங்கின்போது மணமகன் இருமிக்கொண்டும், தும்மிக்கொண்டும் கடுமையான தடிமனால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். இதனால், மகணமகள் வேறு பக்கமாக முகத்தை திருப்பிக் கொண்டிருந்தார். ராஜஸ்தானில் குளிர் அதிகமாக இருப்பதால் மணமகனுக்கு தடிமன் பிடித்துக் கொண்டதாக மணமகனின் தந்தை காரணம் கூறினார்.

திருமணச் சடங்குகள் முடிந்து மணமகள், மணமகன் வீட்டுக்கு கிளம்ப வேண்டிய நேரமாகிவிட்டது.மணமகள் அறையிலிருந்து மணப்பெண் வெளியே வரவில்லை. மணமகனின் தாய் இரண்டு மூன்று முறை அழைத்தும் பெண் வராததால் மணமகனின் வீட்டினர் சந்தேகித்தனர். மணமகனின் உறவினர்கள் நேராகப் பெண்ணிடம் சென்று விசாரித்தனர்.

மணமகனுக்கு பன்றிக்காய்ச்சல் இருப்பதாக சந்தேகிக்கிறேன்.எனவே, இப்போதைக்கு அவருடன் செல்லமுடியாது. ஒருவாரம் கழித்துச் செல்கிறேன் என மணமகள் கூறினார். இதனால், மணமகன் வீட்டார் ஆத்திரமடைந்தனர்.

மணமகளின்,தாய்மாமன் டொக்டர் என்பதால், உடனடியாக மணமகனை பரிசோதித்தார். இரத்தப் பரிசோதனையும் செய்து பார்த்ததில் சாதாரண தடிமன் தான் என்பது தெரிய வந்தது. இதையடுத்து மணமகள், திருப்தியோடு மணமகனுடன் புகுந்த வீட்டுக்குச் சென்றார். (ஓ-6)

## ஈழத்தமிழர் மீதான மனிதவுரிமை மீறல்களை இந்திய அரசு மட்டும் கண்டுகொள்ளவில்லை

### டாக்டர் கிருஷ்ணசாமி

புதிய தமிழகக் கட்சி சார்பில், உலகத்தமிழர் பாதுகாப்பு மாநாடு ஆலோசனைக் கூட்டம் கோவை அண்ணாமலை ஹோட்டலில் நடைபெற்றது. இக் கூட்டத்துக்கு நிறுவன தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி தலைமை தாங்கிப் பேசினார்.

அவர் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசுகையில், ஈழத்தமிழர்கள் தங்களின் சுய நிர்ணய உரிமை,பாதுகாப்புக்காக கடந்த 60 ஆண்டுகளாக பல்வேறு போராட்டங்கள் நடத்தியும் எந்தவிதப் பிரச்சினைகளுக்கும் இதுவரையிலும் தீர்வு கிடைக்கவில்லை. கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் முதல் இந்த ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி வரை போராளிகளுக்கு எதிராக நடைபெற்ற போரில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டும், உடமைகளை இழந்தும், உடல் ரீதியான பல்வேறு பாதிப்புக்களுக்கு ஆளாகியும் உள்ளனர். 3 1/2 இலட்சத்துக்கும் மேற்பட்ட அப்பாவி ஈழத் தமிழ் மக்கள் 7 மாத காலமாக அங்குள்ள முள்வேலி முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். 15இலட்சத்துக்கும் மேற்பட்ட ஈழத் தமிழர்கள் உலகம் முழுவதும் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர். ஈழத்தமிழர்கள் மீது மனித உரிமை மீறல்கள் நடந்துள்ளது பற்றி மேற்கத்தேய நாடுகளும், ஐ.நா. சபையும் இலங்கைக்கு பொருளாதார தடைகளை விதிக்கும் அளவுக்கு சென்று உள்ளநிலையில், இந்திய அரசு மட்டும் அதை கண்டு கொள்ளவில்லை. கண்டிக்கவும் இல்லை என்றார். (ஓ-6)

## ஒரு சாண் வயிற்றுக்காக...




## படகில் வந்த மாயமான இருவரும் புலிகள் என பொலிஸார் சந்தேகம்

(இராமேஸ்வரம்)

இலங்கை படகில் வந்த இருவர் மாயமானதால், அவர்கள் புலிகள் இயக்கத்தினரா? என்பது குறித்து, பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதேவேளை இலங்கை கிளிநொச்சி அக்கராயன்குளத்தைச் சேர்ந்த கணேசன் (28). நேற்று முன்தினம் காலை பாம்பன் பொலிஸ் நிலையத்திற்கு அகதியாக பதிவு செய்ய வந்தார்.

விசாரணையில், மட்டக்களப்பு கடற்கரையிலிருந்து படகில் புறப்பட்டு நள்ளிரவில் பாம்பன்பாலம் கடற்கரைப் பகுதியில் வந்திறங்கியதாகவும், தன்னுடன் படகில் உடலில் காயத்துடன் இரண்டு பேர் வந்ததாகவும், படகில் இருந்து இறங்கியவுடன், இருவரும் மலேசியா செல்லப் போவதாகக் கூறி நடந்து சென்றுவிட்டதாகவும்" தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து, தலைமறைவான இருவரும் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்பதால், இவர்களை பொலிஸார் தீவிரமாக தேடிவருகின்றனர். விசாரணைக்குப் பின் கணேசன் மண்டபம் முகாம் அனுப்பி வைக்கப்பட்டார். (ஓ-2-6)

# பிறந்த எண் பலன்களும் அதிர்ஷ்ட பெயர்களும்

## உடல் எண் : 4 விதி எண் : 7

### உடலமைப்பு

பிறந்த எண் 4, விதி எண் 7 ஆகிய இரண்டிற்கும் உரியவர்கள் ராகு, கேது ஆவர். சாயா கிரகங்கள் என்று ஜோதிட சாஸ்திரத்தில் இவர்களைக் கூறுவர். இந்த இருவரின் ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள் சம உயரமுள்ளவராகவும், அதற்கேற்ப சதைப் பிடிப்புள்ளவர்களாகவும் இருப்பர். எப்போதும் தூய்மையாகக் காணப்படுவர்.

### மன, குணவியல்பு

எப்போதும் கலகலப்பாகப் பேசும் சுபாவமுள்ளவர்கள். நல்ல அறிவும், எதையும் முன்கூட்டியே அறியும் திறனும் இவர்களுக்குண்டு. இவர்களின் கற்பனைத் திறன் நடைமுறைக்கு சாத்தியமில்லாததைக் கூட எண்ணும் அளவுக்கு இருக்கும்.

இவர்கள் கலையார்வம் மிக்கவர்களாக இருப்பர். நீதி நேர்மைக்குக் கட்டுப்பட்டவர்களாக இருப்பர். சொன்ன வார்த்தையை மீறி நடக்க மாட்டார்கள்.

எதையும் சிந்தித்து நிதானமாகவும், அதே நேரத்தில் தெளிவாகவும் செய்து முடிக்கும் ஆற்றல் பெற்றிருப்பர். இவர்கள் தனக்கு உகந்த பிடித்த செயல்களை மட்டுமே செய்வர்.

பிறர் சொல்லுக்குக் கட்டுப்படமாட்டார்கள். தனக்குப் பிடிக்காததை யார் சொன்னாலும் ஏற்கமாட்டார்கள். இருந்தாலும் வாழ்க்கையில் அதிக கஷ்டமின்றி உயர்வடையும் மார்க்கத்தைப் பற்றியே சிந்திப்பர்.

இவர்கள் பொறுமைசாலிகளைப் போலக் காணப்பட்டாலும் சில நேரங்களில் சிறிய விடயத்திற்கும் பெருமளவு கோபித்துக் கொள்ளும் சுபாவமுள்ளவர்கள். இவர்கள் கடவுள் பக்தி மிகுந்தவராக வேதாந்தம் பேசுவர். இந்த உலக வாழ்க்கையே பொய் என்பர். இவர்கள் பொருள் வசதியுடன் வாழ்கின்ற நிலையில் கூட திடீரென எதையோ இழந்து விட்டதைப் போன்று வேதனைக்குள்ளாவர்.

அழகான பொருள்கள் மீது ஆர்வமுள்ளவர்களாகவும், அதை வாங்கிச் சேகரிப்பவர்களாகவும் இருப்பர். சாப்பிடுவதில் வல்லவர்களாக இருப்பர்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களுக்கு குடும்ப வாழ்க்கை அவ்வளவு சோபிப்பதில்லை. இவர்கள் ஆன்மீகத்தில் அதிகமான நாட்டம் கொள்வர். இந்த உலகம் பொய் ; அதில் வாழ்வதும் பொய் என்ற தத்துவ ரீதியாகவும், வாழ்க்கையில் பிறரை அனுசரித்து திருப்திப்படுத்த இயலாதவராகவும் இருப்பர்.

### தொழிலும் வருமானமும்

கலைத் தொடர்பில் எழுத்தாற்றல், பேச்சாற்றலில் ஈடுபட்டு பணம் சம்பாதிப்பவராக இருப்பர். வண்டி வாகனங்கள் மற்றும் ஆடம்பரப் பொருட்களைத் தயாரித்தல் அல்லது அந்த வகைத் தொழிலில் ஈடுபட்டிருக்கக் கூடும். கமிஷன் ஏஜெண்டுகளாகவும் இருக்கலாம்.

இத்துறையில் அதிகம் பொருள் சம்பாதித்து, சொத்து சேர்ப்பவர்களாக இருப்பர்.

### ஆரோக்கிய நிலை

இவர்களுக்கு உஷ்ண சம்பந்தமான காய்ச்சல், மூலம், இரத்தக்கொதிப்பு, கட்டிகள் போன்ற நோய்கள் உண்டாகலாம். இவை தவிர பல்வலி, தலைவலி, வயிற்றுவலி போன்றனவும் ஏற்படும்.

### சாதக பாதக எண்களும் திகதியும்

இவர்கள் சுக்கிரன், சூரியன் ஆதிக்கம் கொண்ட 6, அது தொடர்பிலான அதிர்ஷ்ட பலன் தரும் எண்களுக்கு தம் பெயரை மாற்றிக் கொள்ள யோகமாகும்.

தம் நிறுவனத்திற்குக் கூட இந்த எண்களே தொடர்பான பெயர் ஏற்றது.

இவர்களுக்கு சுக்கிரன், சூரியன் தொடர்புடைய எண்களே அதிர்ஷ்ட எண்களாகும். அத்தகைய திகதிகளும் அதிர்ஷ்டமானவை.

ஆனால் சனி, செவ்வாய் ஆதிக்கம் பெற்ற 8,9 அது தொடர்பான எண்களும், திகதிகளும் சோதனை வேதனை தருபவை ; விலக்க வேண்டியவை.

## உடல் எண் : 4 விதி எண் : 8

### உடலமைப்பு

பிறந்த எண் 4, விதி எண் 8 ஆகக் கொண்டவர்கள் ராகு, சனி இவர்களின் ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள். இவர்கள் கம்பீரத் தோற்றமுள்ளவர்களாக இருப்பர். குறுகுறுத்த முகத்தோற்றமும், சிறிய கண்களும் கொண்டவர்களாகவும் இருப்பர்.

### மன, குணவியல்பு

இவர்கள் துணிச்சல் மிக்கவர்கள். தம் மனத்திலுள்ளதை வெளிப்படுத்த வல்லவர். தான் எண்ணுவது தவறாக இருந்தாலும் கவலைப்படாது வெளியிடுவர். இதனால் ஏற்படும் விளைவுகளைப் பற்றி எண்ணியும் பார்க்க மாட்டார்கள். பிறர் பாதிக்கப்படுவதைப் பற்றியோ, தான் இழிவுபட நேருவதைப் பற்றியோ கொஞ்சமும் கவலை கொள்ள மாட்டார்கள்.

அந்த அளவுக்கு மனதில் ஒன்றும், வெளியில் ஒன்றும் பேசவோ, செய்யவோ இவர்களுக்குத் தெரியாது. பிறர் கூறுவதைக் கொஞ்சமும் ஏற்கமாட்டார்கள். தாம் கூறுவதே சரி என்று வாதிடுவர். வாதத்தில் வெற்றி பெறும் அளவுக்கு வாதத்திறமையும் இவர்களிடம் காணப்படும்.

சுதந்திரப் பிரியர், யாருக்கும் கட்டுப்படாமல் சுதந்திரமாக வாழ வேண்டுமென்ற எண்ணம் கொண்டவர்கள். பல இடங்களைச் சுற்றிப் பார்க்க வேண்டுமென்ற தணியாத ஆசை கொண்டவர்களாக இருப்பர்.

இவர்களுக்கு குழந்தைகள் என்றால் உயிர். எந்தக் குழந்தைகளாக இருப்பினும் ஆசையுடன் கொஞ்சி மகிழ்வர்.

### குடும்ப வாழ்க்கை

இவர்கள் தம் பெற்றோர்களிடம் அன்புடனும், பாசத்துடனும் நடந்து கொள்வர். இவர்களின் சொந்த குடும்ப வாழ்க்கையில் குழப்பம் மிகுந்து காணப்படும். வசதி இருந்தாலும் அமைதி பூரணமாக இருக்காது. இவர்களுக்கு மனைவி, குழந்தை, உற்றார் உறவினரும் பாதகமானவராக அமைவர். வாழ்க்கையில் ஏற்றத் தாழ்வுகள் இருந்தவண்ணமிருக்கும்.

### தொழிலும் வருமானமும்

இவர்களுக்கு இரும்பு, எந்திரத் தொடர்பிலான வண்டி வாகனத் தொழில் ஏற்றது. தொழில் நுணுக்கமான பொறியியல் துறைகளில் தேர்ந்தவர்களாகவோ, தொழில் நடத்துபவர்களாகவோ, பணியாளர்களாகவோ இருப்பர். அல்லது அது தொடர்பில் கமிஷன் ஏஜெண்டுகளாக இருக்கக் கூடும். இவை தவிர கலைத் துறைகளில் ஈடுபாடு கொண்டு இருப்பர். சமயம், ஜோதிடம், மருத்துவம் போன்ற துறைகளில் ஈடுபாடும், தொழில் புரியவும் கூடும்.

இவர்களின் வருமானம் ஆரம்பத்தில் ஏற்றத்தாழ்வு கொண்டதாக இருந்தாலும் பிற்காலத்தில் அதிக பணம் சேர்ப்பவராக இருப்பர்.

### ஆரோக்கிய நிலை

இவர்களுக்கு உஷ்ண மிகுதிப்பாட்டால் ஏற்படும் நோய்களோடு நரம்பு மூட்டு சம்பந்தமான நோய்களும் ஏற்படும்.

### சாதக பாதக எண்களும் திகதியும்

இவர்களுக்கு சூரியன், சுக்கிரன், புதன் இவர்களின் தொடர்புள்ள 1,6,5 அது தொடர்புடைய எண்களும் அதிர்ஷ்டமானவை. அதனால் இவை தொடர்பு கொண்ட அதிர்ஷ்ட பலனளிக்கும் எண்கள் வருமாறு பெயர் மாற்றம் செய்து கொள்ளலாம்.

தம் நிறுவனத்திற்குக்கூட இந்த எண்களே ஏற்றவை.

இவர்களுக்கு யோகமான எண்களும், திகதிகளும் கூட 1,6,5 தொடர்புடையனவே. ஆனால் இவர்கள் சனி தொடர்புடைய 8 அது தொடர்புடைய எண்களையும், திகதிகளையும் விலக்குவது நன்று. (தொடரும்)

# புலிகள் அமைப்பின் நடவடிக்கைகள் வேறுவழிகளில் இடம்பெற்று வருகின்றன

## கோத்தபாய ராஜபக்ஷ

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் தோற்கடிக்கப்பட்டுள்ள நிலையில் அமைப்பின் நடவடிக்கைகள் வேறு வழியில் முன்னெடுக்கப்படுவதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சர்வதேச மற்றும் உள்நாட்டு ரீதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான இச் செயற்பாடுகள் இடம்பெறுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். மாத்தளை புனித தோமஸ் கல்லூரி பழைய மாணவர் கௌரவிப்பு நிகழ்வில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

30 ஆண்டு கால யுத்தம் காரணமாக நாட்டின் அபிவிருத்திப் பணிகள் ஸ்தம்பிதம் அடைந்திருந்ததாக தெரிவித்துள்ளதோடு எதிர்வரும் காலங்களில் அபிவிருத்தி மற்றும் பொருளாதார மீட்சி குறித்து அதிக கவனம் செலுத்தப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அதிக எண்ணிக்கையிலான கிராமப்புற இளைஞர், யுவதிகளே யுத்தத்தில் உயிர் நீத்துள்ளதாகவும் வடக்கு, கிழக்கு மக்களின் மனங்களை வென்றெடுப்பதன் மூலம் புலிகளுக்கு எதிரான போராட்டத்தை முற்றாக முடிவுறுத்த முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ஓ-6)



நலன்புரி நிலையங்களில் இருந்து யாழ்ப்பாணத்தில் மீளக்குடியமர்ந்த அரசாங்க ஊழியர்கள் தமது கடமையைப் பொறுப்பேற்க வன்னியில் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்ட பிரதேசங்களுக்கு சென்றபொழுது முறிகண்டிப் பிள்ளையார் ஆலயத்தில் தரித்து நிற்பதைப் படத்தில் காணலாம்.

### சரத்பொன்சேகா ஜனாதிபதியானால்

# புலிகளின் சொத்துக்கள் அரசுடமையாக்கப்படும்

## ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகா ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் அவரின் ஆட்சிக் காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சகல சொத்துக்களும் அரசுடமையாக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதில் வெளிநாட்டு வங்கிக் கணக்குகள், தங்கக் கையிருப்பு, கட்டிடங்கள் மற்றும் சொத்துக்கள் அனைத்தும் அடங்கும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இவ்வாறு அரசுடமையாக்கப்படும் புலிகளின் சொத்துக்கள் அரசாங்கக் கடன்களை செலுத்துவதற்கு பயன்படுத்தப்படும் என கூறியுள்ளதோடு தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட சொத்து விபரங்களை முடிந்தால் நாட்டு மக்களுக்கு அம்பலப்படுத்துமாறு ஜனாதிபதியிடமும் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சர்வதேச ரீதியில் 600 வங்கிக் கணக்குகள் காணப்படுவதாக அரசாங்கம் அறிவித்த போதிலும் சுமார் இரண்டாயிரம் வங்கிக் கணக்குகள் காணப்படுவதாக ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-2-6)

# 'பயிர் வளர்ப்போம் நாட்டைக் காப்போம்' திட்டத்தின் கீழ் வடக்குக்கு விவசாய உபகரணங்கள் அனுப்பிவைப்பு

(கொழும்பு)

'பயிர் வளர்ப்போம் நாட்டைக் கட்டியெழுப்புவோம்' எனும் வேலைத் திட்டத்தின் கீழ் வடமாகாணத்திலுள்ள விவசாய காணிகளில் பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்காக புதிய விவசாய உபகரணங்கள் வடமாகாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சின் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் ஏறக்குறைய 50 மில்லியன் ரூபா பெறுமதியான புதிய உபகரணங்கள் தனியார் நிறுவனங்களிடமிருந்து அரசாங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த உபகரணங்கள் மன்னார், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலுள்ள ஏறக்குறைய 11 ஆயிரம் ஏக்கர் விவசாயக் காணிகளில் மீண்டும் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஓ-2-6)

# கடுகின் மருத்துவக் குணங்கள்

கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது என்பது பழமொழி. இத்தகைய சிறப்பு மிக்க கடுகிற்கு ஏராளமான மருத்துவ குணங்கள் உள்ளன.

பொதுவாக நாம் கடுகை சமையலில் தாளிப்பதற்கு பயன்படுத்துகிறோம். அதாவது நாம் சமைக்கும் சமையல் ஜீரணமாக அடிப்படையான கடுகை முதலில் போடு



கிறோம். ஏன் என்றால் கடுகு ஜீரணத்திற்கு உதவுகிறது.

தினமும் காலையில் வெறும் வயிற்றில் கடுகு, மிளகு, உப்பு மூன்றையும் ஒரே அளவு சேர்த்து சாப்பிட்டு விட்டு அதன்பிறகு வெந்நீர் குடிக்க வேண்டும். இப்படி செய்வதால் பித்தம், கபம் போன்றவற்றால் ஏற்படும் உடல் உபாதைகள் நீங்கும்.

விஷம், பூச்சி மருந்து, தூக்க மாத்திரை போன்றவற்றை உட்கொண்டவர்களுக்கு 2 கிராம் கடுகை நீர்விட்டு அரைத்து நீரில் கலக்கி உட்கொள்ளக்கொடுத்தால் உடனடியாக வாந்தி எடுத்து விஷம் வெளியேறும்.

தேனில் கடுகை அரைத்து உட்கொள்ளக் கொடுக்க இருமல், கபம், ஆஸ்துமா குணமாகும்.

கடுகை தூள் செய்து வெந்நீரில் ஊற வைத்து வடித்து கொடுக்க விக்கலை குணமாக்கும்.

கடுகை அரைத்து பற்றிட இரத்தக் கட்டு, மூட்டு வலி தணியும்.

கை, கால்கள் சில்லிட்டு விறைத்துக் காணப்பட்டால் கடுகை அரைத்து துணியில் தடவி கை, கால்களில் சுற்றி வைக்க வெப்பத்தை உண்டாக்கும். உடனடியாக விறைப்பு சீராகும்.

கடுகு, பூண்டு, வசம்பு, கருவாப்பட்டை, கடுகு ஆகியவற்றை சம அளவு எடுத்து நீர் விட்டு காய்ச்சி வடிகட்டி இருவேளை வீதம் ஒரு வாரம் குடித்து வர வாதம், வாய்வு குணமாகும்.

கடுகு, மஞ்சள் சம அளவு எடுத்து நல்லெண்ணெயில் காய்ச்சி வடிகட்டிக் காதில் சில சொட்டுகள் இட தலைவலிக்கு நிவாரணம் கிட்டும்.

**நீரிழிவுக்கு ஏற்ற கடுகு வைத்தியம்**

நீரிழிவு நோயாளிகளுக்கு பல்வேறு கை வைத்தியம் உள்ளது. இவ ற்றை சரியான அளவில் செய்து வந்தால் நீரிழிவு நிச்சயமாக கட்டுப்படுத்தப்படும்.

முதலில் கடுகு, ஆவாரை விதை, மர மஞ்சள், கருவேலம் பிசின் ஆகியவற்றை எடுத்து சுத்தப்படுத்தி வைத்துக் கொள்ளவும்.

வீட்டில் அம்மி இருந்தால் அதில் இவற்றை வைத்து இடித்து பொடியாக்க வேண்டும். இதனை நீர்விட்டு பிசைந்து சூரணமாக்கி வைத்துக் கொள்ளலாம். நீரிழிவு நோயுள்ளவர்கள் இந்த சூரணத்தை 1-2 கிராம் சாப்பிட்டு வந்தால் நீரிழிவு நோய் கட்டுப்படும்.

## உடல் நலக்குறிப்புகள்

⌖ மழைக்காலங்களில்மனிதர்களைபெரிதும் பாதிக்கும் நோய் சேற்றுப் புண்ணாகும். இதற்கு கை வைத்தியத்தில் நல்ல மருந்து உண்டு. அதாவது விளக்கெண்ணெயில் மஞ்சள் தூளைக் குழைத்து, சேற்றுப் புண்களில் தடவ விரைவில் குணம் கிடைக்கும்.

⌖ கல்லீரல் நோய்களை துளசிச் சாறு குணப் படுத்துகிறது.

⌖ பிரண்டையை நெய்விட்டு வதக்கி, துவை யல் செய்துசாப்பிட்டு வர, நல்ல பசி உண் டாகும்.

⌖ வாழைப்பூவை, வாரம் ஒருநாள் கூட்டாக செய்து சாப்பிட, வயிற்றுப் புண் வராது. வாழைப்பூ, கருப்பை கோளாறுகளை நீக்கும் தன்மை கொண்டது.

⌖ சிறுநீரகக் கோளாறு இருப்பவர்கள், வாழைத்தண்டை சாறு எடுத்து அருந்த பலன் கிடைக்கும்.





# முதுகெலும்பின் முக்கியத்துவம்

மனித வாழ்க்கைக்கு நம்பிக்கை மிகவும் அவசியமானது. அடுத்தபடியாக முதுகெலும்பு மிகவும் அவசியமானது.

ஒருவன் நிமிர்ந்து நடப்பதற்கே முதுகெலும்பு தான் காரணமாக அமைகிறது.

மனிதனின் பின்புற இடுப்பில் தொடங்கி மேற்புறம் முகுளம் வரையான தண்டு வடம் ஆற்றும் பணி அரியது. மூளையின் செயலைப் போலவே இதன் செயல்களும் முக்கியமானவை. இதன் மேல் முனையான முகுளம் உணர்வுகளை கடத்துவதிலும் நரம்பு மண்டல செயல்பாட்டிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. தண்டு வடம் இல்லாவிட்டால் மனிதன் துவண்டு போய்த்தான் இருப்பான். தண்டு வடம் செயல் இழந்தாலும் பெரும்பாலான பணிகள் பாதிக்கும்.





மூளையின் கட்டளைகளைப் பெற்று உணர்வுகளைக் கடத்தும் பணியை முதுகெலும்புகள் மிகச் சிறப்பாக செய்கின்றன.

முதுகெலும்பில் பிரச்சினை ஏற்பட்டால் கைகால்களை அசைக்க முடியாத ஜட நிலையை மனிதன் அடையும் வாய்ப்பும் உள்ளது.

# நீர்க்கட்டு குணமாக முருங்கை வைத்தியம்

முருங்கைக் கீரையை சாப்பிடுவதால் இரும்புச் சத்து கிடைக்கும். கீரை வகைக ளில் முருங்கைக் கீரை ஜீரணமாவது கடினம். எனவே இரவு நேரத்தில் முருங்கைக் கீரையை சாப்பிடக் கூடாது.



முருங்கை இலையை எடுத்த பின் மிஞ்சிய காம்புகளை தூக்கி எறியாமல் அதனை நசுக்கிப் போட்டு மிளகு சேர்த்து ரசம் வைத்து உட்கொள்ள கை, கால் அசதி நீங்கும்.

குழந்தைகளின் வயிற்று உப்புசம் தணிய முருங்கை கீரைச் சாற்றுடன் சிறிது உப்பு சேர்த்து உட்கொள்ளக் கொடுக்கவும். முருங்கைக் கீரையுடன் சிறிது உப்பு கூட்டி நன்கு வறுக்க வேண்டும்.

கீரை சுருண்டு உப்புடன் சேர்ந்து கருகும். பின் இறக்கி ஆறியதும் பொடி செய்து வைத் துக் கொள்ளவும். புளியேப்பம் வரும் போது அதில் ஒரு தேக்கரண்டி பொடியை எடுத்து வாயில் போட்டு வெந்நீர் குடியுங்கள். அது சரியாகி விடும்.

முருங்கை கீரையை வெள்ளரி விதையுடன் அரைத்து வயிற்றின் மேல் கனமாக பூச நீர்க்கட்டை உடைத்து சிறுநீரைப் பெருக்கும்.

# கைத் தொலைபேசி பாவனையால் மூளைப் புற்றுநோய் ஏற்படுவதில்லை

## டென்மார்க் ஆய்வாளர்கள் முடிபு

கையடக்கத் தொலைபேசிகளினால் புற்று நோய் ஏற்படுவதாக தெரிவிக்கப்படும் கருத்துக்களில் உண்மையில்லை என டென்மார்க் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.



1990களுக்கு பின்னர் கையடக்கத் தொலைபேசி பாவனை அதிகரித்துள்ளதாகவும், இந்த காலப் பகுதியில் புற்று நோயாளர்களின் எண்ணிக்கையில் பாரிய அதிகரிப்பு ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

டென்மார்க், சுவீடன், நோர்வே மற்றும் பின்லாந்து ஆகிய நாடுகளில் உள்ள 20 முதல் 79 வயது வரையிலான நபர்களிடம் நடத்தப்பட்ட ஆய்வுகளின் மூலம் இந்த முடிபு கிடைக்கப் பெற்றுள்ளது.

கையடக்கத் தொலைபேசி அறிமுகப் படுத்தப்பட்ட காலத்திற்கும் அதற்கு முன்னைய காலத்திற்கும் இடையில் பாரிய வித்தியாசமில்லை எனவும் தொலைபேசி சமிக்ஞைகளினால் மூளைப் புற்று நோய் ஏற்படக்கூடிய சாத்தியம் இருப்பதாக பரவலாக எச்சரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

1974 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரையில் 16 மில்லியன் நபர்கள் தொடர்பான தகவல்கள் திரட்டப்பட்டு இந்த ஆய்வு முடிபு வெளியிடப் பட்டுள்ளது.

எவ்வாறெனினும் கையடக்கத் தொலைபேசிகளினால் மூளைப் புற்று நோய் ஏற்படுகின்றதா என்பது குறித்து ஆய்வுகளை நடத்த இன்னமும் கால அவகாசம் தேவைப்படும் என ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

# உடலுக்கு நலம் தரும் சில விடயங்கள்



⁜ காய்கறிகளை நன்கு சமைத்து சாப்பிடுவது மிகவும் தவறு. பல காய்கறிகளை பச்சையாகவே சாப்பிடலாம். சிலவற்றை மட்டும்தான் சமைத்து சாப்பிட வேண்டும்.

⁜ பச்சைமிளகாயாக இருந்தாலும் சரி காய்ந்த மிளகாயாக இருந்தாலும் சரி அதிகம் சேர்த்துக் கொள்வதை தவிர்க்க வேண்டும்.

⁜ அல்சர் உள்ளவர்கள் உணவில் நெய் சேர்த்து சாப்பிடலாம். உருக்கிய நெய் தான் உடலுக்கு நல்லது. கெட்டியான நெய் உடலுக்கு கெடுதல். அது கொழுப்பை ஏற்படுத்தும்.

⁜ பசுமாட்டு நெய் உடலுக்கு எந்த கெடுதலும் ஏற்படுத்தாது உடல் எடையையும் கூட்டாது. ஆனால் எருமை பாலில் எடுத்த நெய் அதிக கொழுப்பு நிறைந்தது. உடல் எடை கூட வேண்டும் என்று நினைப்பவர்கள் எருமை நெய்யை சாப்பிடலாம்.

⁜ உடலுக்குள் ஏற்படும் அனைத்து வியாதிகளையும் யோகாவால் சரி செய்ய முடியும். ஆனால் விபத்துக்களால் ஏற்படும் பிரச்சினைகளை சரி செய்ய முடியாது. அதே சமயம் விபத்தினால் பாதிக்கப்பட்ட கைகளை சரியாக இயக்க ஆசனங்கள் பயன்படும்.

சிலர் சொல்வது உண்மையாக இருக்கலாம். எல்லோரும் சொல்வது உண்மையாக இருக்க வேண்டும்.

~ இந்தியா

வலம்புரி

# தமிழ் மக்கள் வாக்களிப்பது ஆதரவளிப்பதாகப் பொருள்படாது!

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிப்பது என்பதற்கு முன்னதாக அவர்கள் வாக்களிப்பார்களா? என்ற கேள்வியே முதன்மை பெற்றுள்ளது.

கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் தமிழ் மக்களுக்கு ஆர்வம் அறவே இல்லாமல் இருந்தது.

இதனால் வாக்களிக்கும் கலாசாரத்தில் இருந்து அவர்கள் விடுபட்டுவிட்டனர். வாக்களிப்புகள் கடந்த காலங்களில் சிலர் ஆர்வக் கோளாறினால் வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்றதும், அவர்கள் செல்வதற்கு முன்னதாகவே அவர்களின் வாக்குகள் பதிவாகி இருப்பது தெரிய வந்தது.

இதற்குப் பின்னர் வாக்களிப்பு வேலையே வேண்டாம் என்ற முடிபை எடுக்க வழிவகுத்தது.

தேர்தல் தினத்தில் வீட்டைச் சுத்தப்படுத்துவதில் ஈடுபட்டால் கூட, அது நமக்கு நன்மை பயக்கும் என்று நினைக்கும் அளவிற்கே இலங்கையில் காலத்திற்கு காலம் நடைபெறும் தேர்தல்கள் தமிழ் மக்களை தேர்தல் பற்றற்றவர்களாக்கிவிட்டது.

ஆனால் நிலைமை இப்போது அப்படி அல்ல. தமிழ் மக்களின் வாக்குகளே இந்த நாட்டின் ஜனாதிபதி யாரென்ற முடிபை தீர்மானிக்கப் போகின்றது.

எனவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் கட்டாயமாக வாக்களிக்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிப்பதன் ஊடாக தமிழ் மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கப்போவதில்லை என்பது நிறுத்திட்டமான உண்மை.

அப்படியானால் ஏன்? வாக்களிக்க வேண்டும் என்ற கேள்வி எழுவதும் நியாயமானதே.

இங்கு தான் ஓர் உண்மைத் தன்மை உணரப்பட வேண்டும்.

அதாவது தேர்தலில் வாக்களிப்பதன் மூலம் சில உண்மைகளை வெளிப்படுத்த முடியும். அந்த உண்மைகள் தேர்தல் பிரசாரத்தின் போதே வெளிக்கிளம்பும்.

அதேநேரம் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் ஆர்வமாகவுள்ளனர் என்ற தகவல் ஜனாதிபதி வேட்பாளர்களை தமிழ் மக்கள் பக்கம் இழுக்கும்.

இதற்காக அவர்கள் சில உண்மைகளை வெளிப்படுத்துவார்கள். அந்த சில உண்மைகள் பல உண்மைகளை இந்த உலகத்திற்கு தாராளமாக வழங்கும்.

அப்போது இலங்கையில் நடந்தது என்ன? என்பதை இந்த உலகம் புரிந்துகொள்ளும். இதற்காகவே எங்கள் வாக்குகள் அத்தனையும் அடுத்த 'ஜனாதிபதி' யார் என்ற கேள்விக்கான விடையாக அமையவேண்டும்.

அதே நேரம் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிப்பதென்பது குறித்த வேட்பாளரை ஆதரிப்பதெனப் பொருள் கொள்ளக்கூடாது.

அத்தகையதொரு பொருட்கோடல் தவறான வழிக்கே எம்மை இட்டுச் செல்லும் எனவே தமிழ் மக்கள் மிகவும் உறுதியாக இருக்க வேண்டிய சில விடயங்கள் உண்டு. அதில் ஒன்று; எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நாம் வாக்களிப்போம் என்பதாகும்.

அதற்கு அடுத்தபடியாக ஜனாதிபதித் தேர்தலில் நாம் யாருக்கு வாக்களித்தாலும் அவரை ஆதரிக்கவில்லை என்பதாகும்.

# அரசாங்கத்தின் மீது சேறு பூசுவதை பொன்சேகா உடன் நிறுத்த வேண்டும்

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

ஆயுதக் கொள்வனவு தொடர்பில் ஜெனரல் சரத்பொன்சேகா தம்மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

சீனாவிடமிருந்து பாரிய அளவு ஆயுதங்களை கொள்வனவு செய்வது தொடர்பில் ஏற்பட்ட முரண்பாட்டை திரிபுபடுத்தி ஊடகங்களுக்கு சரத்பொன்சேகா தகவல் வெளியிட்டுள்ளதாக அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசாங்கத்திற்கும் ஜெனரல் சரத்பொன்சேகாவிற்கும் இடையிலான முறுகல் நிலைக்கு ஆயுதக் கொடுக்கல் வாங்கல் விவகாரமே காரணம் என வார இறுதி ஊடகம் ஒன்று பிரதான செய்தி வெளியிட்டிருந்தது.

300 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான ஆயுதங்கள் கொள்வனவு செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சு எடுத்த தீர்மானத்திற்கு தாம் கடும் எதிர்ப்பை வெளியிட்டதாக சரத்பொன்சேகா தெரிவித்திருந்தார்.

இதன் காரணமாக அரசாங்கத்திற்கும் தமக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறு எனினும் ஜெனரல் சரத்பொன்சேகா குறித்த ஆயுதக் கொடுக்கல் வாங்கலில் முனைப்புக் காட்டியதாகவும் பாதுகாப்பு அமைச்சு அதற்கு எதிர்ப்பு வெளியிட்டதாகவும் ஊடக அமைச்சர் பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

இதற்கமைவாக ஆயுதக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் இடம்பெற்ற மோசடிகளை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ விரைவில் அம்பலப்படுத்துவார் என அவர் சுட்டியபோது கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான ஆவணங்களை வைத்திருப்பதாகவும் சட்ட ரீதியான சிக்கல்கள் காணப்படுவதாக உடனடியாக அம்பலப்படுத்த முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் மீது சேறு பூசும் நடவடிக்கைகளை ஜெனரல் சரத்பொன்சேகா உடனடியாக கைவிட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஓ-6)

# வாகனங்களில் பயணிப்போர் ஆசனப்பட்டி அணிவது கட்டாயமாக்கப்படுமா?

(கொழும்பு)

வாகனங்களில் பயணிப்போர் ஆசனப் பட்டிகளை அணிவதைக் கட்டாயமாக்குவது தொடர்பாக ஆராய இரண்டு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களம் தெரிவிக்கிறது.

புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் தொடர்பாகவும் ஏனைய வாகனங்கள் தொடர்பாகவும் இந்த இரண்டு குழுக்களும் ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளன.

இதன் முதல் கட்டமாக கொழும்பு நகருள் பிரவேசிக்கும் வாகனங்களின் சாரதிகள் ஆசனப்பட்டி அணிவது கட்டாயமாக்கப்படவுள்ளது. இவ்விரு குழுக்களதும் சிபாரிசுகள் கிடைத்த பின்னர் புதிய தீர்மானங்களை நடைமுறைப்படுத்தவுள்ளதாக மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களம் தெரிவிக்கிறது. (ஓ-6)

# பன்றிக்காய்ச்சலுக்கான மருந்துகளை பெற்றுக்கொள்வதில் தாமதம்

(கொழும்பு)

பன்றிக்காய்ச்சல் நோய்க்கான மருந்துப் பொருட்களை பெற்றுக்கொள்வதில் கால தாமதம் ஏற்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக தொற்று நோய்ப் பிரிவு மருத்துவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த மருந்துப் பொருட்களை விநியோகம் செய்வதற்கு குறைந்த பட்சம் இன்னும் ஒரு மாத காலம் காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பன்றிக்காய்ச்சல் மருந்துப் பொருட்களை விநியோகம் செய்யும் உலக சுகாதார ஸ்தாபனத்துடன் அரசாங்கம் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகளை நடத்தி வருவதாகவும் அதன் மூலம் அடுத்த வருட ஆரம்ப காலத்தில் இதற்கு எதிரான தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள முடியும் என குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை இந் நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை ஏனைய நாடுகளுடன் ஒப்பீடு செய்யும் போது இலங்கை சாதகமான நிலையில் காணப்படுவதாக பிரதி சுகாதார அமைச்சர் வடிவேல் சுரேஸ் தெரிவித்துள்ளார்.

பன்றிக்காய்ச்சல் நோயினால் இலங்கையில் இதுவரையில் 10 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# கிளிநொச்சி, முல்லைத்தீவு

## வணிக கைத்தொழில் ஒன்றியத்தினர் தம் வர்த்தக நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்க கோரிக்கை

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவில் பாரம்பரியமாக வர்த்தக வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கிளிநொச்சி, முல்லைத்தீவு வணிக கைத்தொழில் ஒன்றிய பிரதிநிதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சந்தித்து தமது கோரிக்கைகளையும் தேவைகளையும் தெரியப்படுத்தியுள்ளார்.

கொழும்பிலுள்ள சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சுப் பணிமனைக்கு இலங்கை வர்த்தக கைத்தொழில் சம்மேளன நிர்வாகிகள் சகிதம் விஜயம் செய்த கிளிநொச்சி, முல்லைத்தீவு வணிக கைத்தொழில் ஒன்றிய பிரதிநிதிகளே மேற்படி வேண்டுகோளை நேரடியாகத் தெரியப்படுத்தியுள்ளனர்.

தற்போது மீள் குடியேற்றம் ஆரம்பமாகியுள்ள நிலையில் காலாதிகாலமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் வர்த்தக வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட தாங்கள் எவ்வகையிலும் பாதிப்படையாமல் இருப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரிய நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டனர். குறிப்பாக தாங்கள் வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிக்காத நிலையில் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் தமது மாவட்டங்களில் பிரபல தொழில் முகவர்களின் முகவர் அஸ்தஸ்தை பெற்றுக் கொள்ளக்கூடிய அபாயம் உள்ளதையும் சுட்டிக்காட்டினார்கள்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு வணிக கைத்தொழில் ஒன்றிய பிரதிநிதிகளின் கோரிக்கையினை செவிமடுத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தற்போது வியாபாரம் செய்யாத நிலையிலும் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ளதாலும் அவர்களின் உணர்வுகளைத் தான் புரிந்துகொண்டுள்ளதாக தெரிவித்தார்.

இந்த வகையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு வர்த்தக வியாபார நடவடிக்கைகளுக்கு காலம் காலமாக அங்கு வியாபாரம் செய்தவர்களே உரித்துடையவர்கள் என்பதனால் மேற்படி ஒன்றியத்தின் அங்கத்தவர்கள் அனைவரையும் முதலில் ஒன்றிணைத்து அடுத்த கட்ட நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார். (ந)

இன்று அன்னை சாரதாதேவியின் 157 ஆவது ஜனன தினமாகும்

# தெய்வீகம் நிறைந்தவர் சாரதாதேவி



வெண்ணிற ஆடையும் வெண்மையாய் உளமும்
வாழ்வினில் நெறியும் ஆழ்மன அன்பும்
அண்டியோர் வறுமையை துடைத்திடும் தாகமும்
அன்னையின் கருணையே தெய்வீகம் ஆனது
எண்ணிய பொழுதினில் அமுதவாய் மொழியும்
உருக்கமாய் உலகமே அன்னையை வணங்கும்
புண்ணிய கருமம் பல்வகை வடிவம்
பொழுதெல்லாம் உரைத்தவர் சாரதா தேவியார்

-அல்லைவயூர் கே.ஆர்.திருத்துவராஜா

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



## கல்வியும் சமூகமும்

மனிதனுக்குள் ஏற்கனவே புதைந்திருக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்துவது தான் கல்வியாகும்.

கல்வி என்றால் என்ன? அது புத்தகங்களைப் படிப்பதா? இல்லை அல்லது அது பல விதமானவற்றைக் குறித்த அறிவா? அதுவுமில்லை. எத்தகைய பயிற்சியின் மூலம் மன உறுதியின் வேகமும் வெளிப்படும் தன்மையும் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு ,பயன் தரும் வகையில் அமைகிறதோ அந்தப் பயிற்சி தான் கல்வியாகும்.

வெறும் புள்ளி விபரங்களைச் சேகரித்து கொண்டிருப்பதல்ல , மனதை ஒருமுகப்படுத்துவது தான் என்னைப் பொறுத்தவரையில் கல்வி அடிப்படையான இலட்சியமாகும். மீண்டும் ஒரு முறை நான் கல்வி கற்பதாக இருந்தால் ,அந்த விஷயத்தில் சுதந்திரம் ஏதாவது எனக்கு இருக்கு மானால் ,புள்ளி விபரங்களை நான் படிக்கமாட்டேன். முதலில் மனதை ஒருமுகப்படுத்தும் ஆற்றலையும் , பற்றில்லாமல் இருக்கும் திறந்த உள்ளத்தையும் வளர்த்துக்கொள்வேன். அதன் பிறகு ,பண்படுத்தப்பட்ட அந்தக் கருவியைக் கொண்டு ,நினைத்த நேரத்தில் உண்மைகளை நான் சேகரித்துக்கொள்வேன்.

# இத்தாலியில் பிரதமரை பதவி விலக வலியுறுத்தி பெரும் ஆர்ப்பாட்டம்

## மூன்றரை இலட்சம் பேர் பங்களிப்பு

இத்தாலிய பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கொனியை பதவி விலக வலியுறுத்தி சனிக்கிழமை 350, 000 பேருக்கும் அதிகமானோர் ரோமில் ஆர்ப்பாட்டத்திலீடுபட்டனர்.

இணையத்தளம் மற்றும் சமூக வலைப்பின்னல் தளங்கள் மூலம் பெர்லுஸ்கொனிக்கு எதிரான இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பெர்லுஸ்கொனி கடந்த ஒக்டோபரில் தனது பதவி நிலை தொடர்பான சட்ட பாதுகாப்பொன்றை இழந்ததையடுத்து அவர் மோசடி மற்றும் லஞ்ச குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ளார்.

இந்நிலையில் அவர் தனக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கு மறுப்புத் தெரிவித்துள்ளார். தனக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அரசியல் உள்நோக்கம் கொண்டவை என அவர் கூறினார்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர் கள் எனக்கு ஒரு கனவு உள்ளது பெர்லுஸ் கொனி சிறையிலடைக்கப்படவேண்டும் என்பதே அதுவாகும். என்ற சுலோகத்தை கூறியபடி தலைநகர வீதிகளில் ஊர்வலமாகச் சென்றனர். (ஓ-6)

# “பூச்சிகளை தின்னும் தக்காளிச் செடி” விஞ்ஞானிகள் கண்டு பிடிப்பு

தக்காளி, உருளைக்கிழங்கு போன்ற தாவரங்கள் பூச்சி இனங்களை கொன்று தின்னும் குணம் கொண்டவை என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

தக்காளியின் தண்டுப்பகுதியில் உள்ள ஒட்டிக்கொள்ளும் முடி போன்ற பாகங்களால் தக்காளி பூச்சிகளை பிடித்து கொன்று விடுகிறது.

அதன்பிறகு அதன் தண்டுப்பகுதி மூலமாக அந்த பூச்சிகளின் சக்தி பொருட்களை உறிஞ்சி எடுத்துக்கொள்கிறது. இந்த பூச்சிகள் நாளடைவில் அழுகி தரையில் விழும் போது அந்த செடிகளின் வேர்கள் அந்த பூச்சிகளின் சத்துக்களை மண்ணில் இருந்து உறிஞ்சி எடுத்துக்கொள்கின்றன என்று ஆய்வின் மூலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

# இத்தாலிய மா.:.பிய கும்பல் தலைவர்கள் கைது

(இத்தாலி)

இத்தாலியில் மாஃபியா கும்பல்களுக்கு எதிராக தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த நடவடிக்கையின் ஒரு பகுதியாக சிசிலியன் மாஃபியா துணைத் தலைவர் என்று கூறப்படுகிற கியான்னி நிச்சி என்ற நபரை இத்தாலிய பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர் பால் மேரோவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதற்கிடையே மிலனில் அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் பதுங்கியிருந்த கேடோனோ பிடான் சட்டி என்ற கும்பலின் தலைவரையும் பொலிஸார் கைது செய்துள்ள னர்.

இவருக்கு மாஃபியா கும்பலுடன் தொடர்பு வைத்து இருந்ததற்காகவும் பணப்பறிப்பு வேலையில் ஈடுபட்டதற்காகவும் கடந்த ஆண்டு பதினெட்டு ஆண்டு கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# உலக வெப்பமயமாதல் உள்நாட்டு குழப்பங்களை அதிகரிக்கும்

(கலிபோர்னியா)

உலக வெப்பமயமாதல் மூலம் அடுத்த இருபதாண்டில் ஆபிரிக்காவில் பெரும் உள்நாட்டு போர்கள் உருவாகலாம் என்று அமெரிக்க ஆய்வு எச்சரித்துள்ளது.

ஆபிரிக்க நாடுகள் பெரும்பாலானவற்றில் உள்நாட்டு போர் நடந்து வருகிறது. குறிப்பாக சூடான் , கென்யா, சோமாலியா நாடுகளில் வறுமை, பொருளாதார பிரச்சினை யால் தான் உள்நாட்டு போர் நடக்கிறது. இங்கு அரசுகள் இருந்தும் அதற்கு எதிரான தாதாக்கள் ஆதிக்கம் அதிகம். அமெரிக்காவில் கலிபோர்னியா பல்கலைக்கழக பேராசிரி யர்கள் குழு உலக வெப்பமயமாதல் குறித்து ஆய்வு மேற்கொண்டனர். இந்தக் குழுவின் அறிக்கையில் கூறியிருப்பதாவது,

உலக வெப்பமயமாதல் மூலம் ஒரு டிகிரி அளவு வெப்பம் அதிகரிக்கும். இதன் மூலம் 2030 ஆம் ஆண்டில் ஆபிரிக்காவில் ஏற்படக் கூடிய உள்நாட்டு போரில் 55 சதவீத அளவு வேகத்தை ஏற்படுத்தும் .

இந்த வெப்பமயமாதலால் சகாரா பாலைவன பகுதியை ஒட்டியுள்ள நாடுகளில் விவசாயத்தை பெரிய அளவில் பாதிக்கும் என்றும் இதனால் உணவுப் பஞ்சம் தலை விரித்தாடும், பட்டினிச்சாவுகள் அதிகரிக்கும், உள் நாட்டு குழப்பங்களை இது அதிகரிக்கும், ஆயுதம் ஏந்தும் மக்கள் அதிகரிப்பார் இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஓ-6)

# கௌரவிப்பு நிகழ்வும் ஒளிவிழாவும்

(அல்வாய்)

பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயத்தின் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் சாதனையாளர் கௌரவிப்புநிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 8.30 மணிக்கும் ஒளிவிழா நிகழ்வு முற்பகல் 10 மணிக்கும் வித்தியாலய மண்டபத்தில் வித்தியாலய அதிபர் அ.சா.அரியகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் கௌரவிப்பு நிகழ்வின் பிரதம விருந்தினராக பருத்தித்துறை இந்து இளைஞர் மன்றத் தலைவரும் வணிக சங்கத் தலைவரும் அகில இலங்கை சமாதான நீதவானுமான சி.பத்மநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

மேலும் ஒளி விழா நிகழ்வின் பிரதம விருந்தினர்களாக பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்பணி ஜே.எக்ஸ்.பேனாட் றெக்னோக்ட் , பருத்தித்துறை கட்டைவேலி சேகரமுகாமைக் குரு என்.அருள்நாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-4-19)

# பொன்சேகாவும் ஜனாதிபதியும் அரசியல் தீர்வுத் திட்டம் குறித்த நிலைப்பாட்டை முன்வைக்க வேண்டும்

## த.தே.கூட்டமைப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் சார்பில் பொதுவான வேட்பாளராக போட்டியிடும் ஜெனரல் சரத் பொன்சேகாவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் தேசிய இனப்பிரச்சினைக் கான தங்களது தீர்வுத் திட்டங்களை முன் வைக்க வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் பிரதான இரண்டு வேட்பாளர்கள் தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் கொண்டுள்ள நிலைப்பாடு அம்பலப்படுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமானதென கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு குறித்த ஜனாதிபதி வேட் பாளர் முன்வைக்கும் தீர்வுத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்பது குறித்து தமது கட்சி தீர்மானிக்குமெனவும் யுத்தம் நிறை வடைந்துள்ள போதிலும் அரசியல் தீர்வுத் திட்டத்திற்கான போராட் டம் தொடர்வதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் அரசியல் தீர்வுத் திட்டம் குறித்த தமது நிலைப் பாட்டை முதலில் வெளியிட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

## கட்சியின் அடையாளத்தை பேணும் பொருட்டு

# ஐ.தே.க.வின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை களமிறக்க முயற்சி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை களமிறக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தலைமை தாங்க முடியாவிட்டால் அவரைவிட தகுதியானவர்கள் தேர்தலில் களமிறங்க வேண்டுமென குருணாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஜெனரல்சரத் பொன்சேகாவிற்கும் ஆதரவிற்கும் ரணில் விக்ரமசிங்கவின் தீர்மானத்திற்கு அடிமட்ட கட்சி ஆதரவாளர்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில் மக்களினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஓர் பொதுவான வேட்பாளரை ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் நியமிப்பது குறித்து சிரேஷ்ட உறுப்பினர்களுடன் ஏற்கனவே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளர்.

அத்தோடு கட்சியின் அடையாளத்தைப் பேணிப்பாதுகாக்கும் முயற்சிக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ஓ-6)


# கேள்வி அறிவித்தல்

**மின்பொறியியலாளர் (மத்திய மின் நிலையம்)– சுன்னாகம் அலுவலகத்துக்கு தேர்ச்சியற்ற தொழிலாளர்களின் சேவையை மனித வலு நிறுவனங்கள் ஊடாக பெற்றுக்கொள்ளல்**

Obtaining the Service of **Unskilled Labourers** for ***Electrical Engineer (Central Power Station) Chunnakam)*** through Man Power Agency

**கேள்வி இல :*NP/DGM/2009/48***

மேல் குறிப்பிடப்பட்ட சேவைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்வி (Tender) 2009.12.24 ஆம் திகதி மாலை 02.00 மணிவரை இலங்கை மின்சார சபை (வடமாகாணம்) மாகாண பெறுகைக் குழுத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்வியாளர்கள், கேள்விப்பத்திரங்களை ரூபா 1000.00 (ஆயிரம்) க்கான கொடுத்தல் பத்திரத்தினை எமது அலுவலகத்தில் பெற்று பணத்தினை செலுத்துவதன் மூலம், அல்லது பொது முகாமையாளர், இலங்கை மின்சார சபை, கொழும்பு என்ற பெயரில் பெறப்பட்ட வங்கிக்கட்டளையாகவோ சமர்ப்பித்து, இல: 500 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திலுள்ள பிரதிப்பொது முகாமையாளர், (வடமாகாணம்) அலுவலகத்தில் 2009ஆம் ஆண்டு **டிசம்பர் மாதம் 23ஆம்** திகதி வரை வேலை நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் பி.ப.2.30 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

**கேள்விகள் 24.04.2009 மாலை 02.00 மணிக்கு** பிரதிப் பொதுமுகாமையாளர் (வடக்கு), இலங்கை மின்சாரசபை, 500 கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். அலுவலகத்தில் திறக்கப்படும். அத்தருணம் கேள்வியாளர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்டவர் சமுகமளிக்கலாம்.

கேள்வியாளர்கள் இலங்கை மின்சார சபையிலிருந்து பெறப்பட்ட கேள்விப் பத்திரங்களில் மாத்திரம் இணைப்பிரதிகளில் **(Duplicate)** பூர்த்தி செய்து, கடித உறையிலிட்டு, அதன் இடதுபக்க மேல் மூலையில் **“மின்பொறியியலாளர் (மத்திய மின் நிலையம்) -சுன்னாகம் அலுவலகத்துக்கு தேர்ச்சியற்ற தொழிலாளர்களின் சேவையை மனித வலு நிறுவனங்கள் ஊடாக பெற்றுக் கொள்ளல்”** எனக் குறிப்பிட்ட மேற்குறித்த முகவரிக்கு 24.12.2009 ஆம் திகதி மாலை 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கும்படி பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படவேண்டும். அல்லது இவ்வலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

இவ்வறிவித்தல் தொடர்பான மேலதிக விபரங்களை கீழ்க்குறிப்பிடப்பட்ட விலாசத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

மாகாண பெறுகைக் குழு (வடமாகாணம்)
பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகம்,
இலங்கை மின்சாரசபை,
இல: 500, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

தலைவர்
மாகாண பெறுகைக் குழு,
(வடமாகாணம்)

தொலைபேசி இல: 021-222 2496
021- 222 3233
தொலைநகல் இல: 021- 222 2497
(C-3876)

“சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளிற்கு கை கொடுக்கும்”
இலங்கை மின்சாரசபை

# ஒருநாள் போட்டியில் 2 புதிய பந்துகள்!

ஒருநாள் போட்டியில் (50 ஓவர்) மாற்றங்களை கொண்டு வருவது தொடர்பாக சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) தொடர்ந்து ஆலோசனைகளில் ஈடுபட்டு வருகிறது.

ஒருநாள் போட்டியில் 3 பவர்பிளை உள்ளது. இது துடுப்பாட்ட வீரர்களுக்கு சாதகமான அம்சங்கள் ஆகும். அதுவும் துடுப்பாட்ட பவர்பிளேயில் பந்துவீச்சாளர்களின் பாடுதிண்டாட்டம்தான். இதனால் பந்து வீச்சாளர்களுக்கு சாதகமான அம்சங்கள் குறித்த ஆராயப்படு கின்றன.

ஒருநாள் போட்டியில் ஒரு அணி (ஒரு இன்னிங்ஸ்) விளையாடும்போது ஒரே ஒரு புதிய பந்துதற்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு இன்னிங்ஸுக்கு தலா 2 புதிய பந்துகளை பயன்படுத்துவது தொடர்பாக ஐ.சி.சி. ஆலோசித்து வருகிறது.

25 ஓவர்வரை ஒருபுதிய பந்து, அடுத்து 25 ஓவர் வரை மற்றொரு புதிய பந்து என்று பயன்படுத்தலாம் என்று விவாதித்து வருகிறது. இதேபோல 1 பந்துவீச்சாளர்களுக்கு 10 ஓவர் என்பதை அதிகரிக்கலாமா? என்றும் ஐ.சி.சி. ஆலோசித்து வருகிறது.

# கிறிஸ் ஹயில் சிறப்பான சதம்; மேற்கிந்தியத்தீவுகள் முன்னிலை



(அடிலெய்ட்)

அணித் தலைவர் ஹயிலின் சிறப்பான சதத்தின் மூலம் மேற்கிந்தியத் தீவுகள் அணி நேற்றைய 4 ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் 8 விக்கெட்டுக்களையிழந்து 284 ஓட்டங்களை எடுத்தது. இதன் மூலம் மேற்கிந்தியத் தீவுகள் அணி 2ஆவது இன்னிங்ஸில் 296 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையிலுள்ளது.

அவுஸ்தி ரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் வெற்றி பெற்று அவுஸ்திரேலிய அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ள நிலையில் 2ஆவது டெஸ்ட் கடந்த 4 ஆம் திகதி அடிலெய்ட் ஓவலில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 451 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 439 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.


இதன் மூலம் முதலாவது இன்னிங்ஸில் 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நேற்றைய நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் 8 விக்கெட்டுக்களையிழந்து 284 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் கிறிஸ் ஹயில் ஆட்டமிழக்காமல் 155 ஓட்டங்களையும் சந்தர்போல் 27, நாஷ் 24 மற்றும் பிரவோ 22 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஜோன்சன் 4 விக்கெட்டுக்களையும் பொல்லிங்கர் 2 விக்கெட்டுக்களையும் வோட்ஷன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி இரண்டாவது இன்னிங்ஸில் 296 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையிலுள்ள நிலையில் ஐந்தாவதும் இறுதி நாளான ஆட்டம் இன்றாகும்.

# மோசமான தீர்ப்புக்கள்; சங்கக்கார வேதனை



(மும்பை)

கடைசி இரு டெஸ்டிலும் இந்திய அணி துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சு இரண்டிலும் எங்களை வீழ்த்தி விட்டது.

மும்பை டெஸ்டில் முதல் இன்னிங்ஸில் நாங்கள் 400 ஓட்டங்களை நெருங்கினாலும், ஷேவாக்கின் அதிரடி இன்னிங்ஸ், போட்டியை எங்களிடம் இருந்து பிரித்து இந்தியாவுக்கு சாதகமாக திருப்பிவிட்டது என இலங்கை அணித்தலைவர் குமார் சங்கக்கார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

எங்களது வீரர்கள் இந்த தொடர் முழுவதும் கடுமையாக போராடினார்கள். ஆனால் அது போதுமானதாக இல்லை.

நடுவர்களின் தீர்ப்பில் சந்தேகம் இருந்தால் அதனை எதிர்த்து முறையீடு செய்யும் முறை இருக்க வேண்டும் என்பதற்கு இந்த தொடர் நல்ல உதாரணமாகும்.

நடுவரின் மோசமான தீர்ப்பு காரணமாக நாங்கள் 500 ஓட்டங்களுக்கு மேல் இழந்தோம். நிறைய விக்கெட்டுக்களையும் பறிகொடுத்தோம். இதுபோன்ற சமயங்களில் எப்போதும் அணிக்கு நெருக்கடி தான் ஏற்படும்.

நடுவர்களின் தீர்ப்பை ஆட்சேபிக்கும் முறையை ஒரு கூடுதல் சுமையாக கருது கிறார்கள். ஆனால் அந்த கூடுதல் சுமை இல்லாததால் நாங்கள் கடைசி இரு டெஸ்டில் நிறைய ஓட்டங்களை இழந்துவிட்டோம் என்றார்.

# நம்பர்-1 இடத்தில் நீடிப்பது கடினம் என்கிறார் தோனி

(மும்பை)

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2:0 என்ற கணக்கில் வென்றதன் மூலம் உல கின் நம்பர்-1 இடத்தை இந்திய அணி கைப்பற்றியது. இது தொடர்பாக அணித் தலைவர் தோனி கூறியதாவது,

நமது கனவு இப்போது நிறைவேறியிருக்கிறது. ஆனால் ஒவ்வொரு ஆட்டத்திலும் வெற்றிபெற வேண்டும்என்ற நோக்கோடு விளையாடியதால்தான் நாம் இந்த இடத்தை பெற்றிருக்கிறோம். 18 மாதங்களாக இதற்காக போராடினோம். எந்த போட்டியானாலும் குழு வாக இணைந்து விளையாடியதால் வெற்றி பெற முடிந்தது. அடுத்த 6 மாதங்களுக்கு நாம் வெறும் 2 டெஸ்ட் போட்டிகளின் மட்டுமே விளையாட இருக்கிறோம். இதனால் நம்பர்-1 இடத்தை தொடர்ந்து தக்க வைப்பது கடினம். இருப்பினும் இது சந்தோஷப்பட வேண்டிய நேரம். எதைப்பற்றியும் கவலைப்படாமல் உற்சாகமாக கொண்டாடலாம். இவ்வாறு அவர் கூறினார்.



# உலகக் கிண்ண கால்பந்தாட்டம் போட்டி அட்டவணை அறிவிப்பு

(கேப்டவுன்)

2010ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள உலக கோப்பை கால்பந்தாட்ட தொடருக்கான அட்டவணை அறிவிக்கப்பட்டுள்ளது. போட்டியை நடத்தும் தென்னாபிரிக்கா அணி தனது முதல் ஆட்டத்தில் மெக்சிக்கோவை எதிர்த்து விளையாடுகிறது.

32 நாடுகள் பங்கேற்கும் 19ஆவது உலக கோப்பை கால்பந்தாட்ட தொடர் 2010 ஆம் ஆண்டு ஜுன் 11 முதல் ஜுலை 11 வரை தென்னாபிரிக்காவில் நடக்கவுள்ளது. முதல் முறையாக இந்த தொடர் ஆபிரிக்க நாடு ஒன்றில் நடக்கவுள்ளது.

போட்டியை நடத்தும் நாடு என்ற முறையில் தென்னாபிரிக்காவும் கடந்த 2006 சம்பியன் என்ற அந்தஸ்துடன் இத்தாலியும் நேரடியாக தகுதி பெற்றன.

மற்ற நாடுகள் பல் வேறு கட்டங்களில் நடந்த தகுதி சுற்றுக்கள் அடிப்படையில் இத்தொடரில் விளையாடவுள்ளன.

32 அணிகளும் மொத்தம் 8 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் 4 நாடுகள் இடம் பெற்றுள்ளன. போட்டிகள் முதலில் லீக் முறையில் நடத்தப்படும். பின் இதில் முதல் இரண்டு இடம் பெறும் அணிகள் அடுத்து நொக் அவுட் முறையிலான ஆட்டங்களுக்கு முன்னேறும்.

வரும் 2010 ஜுன் 11ஆம் திகதி ஜோகனஸ்பேர்க்கில் நடக்கும் முதல் போட்டியில் தென்னாபிரிக்க அணி மெக்சிகோவை எதிர்த்து களமிறங்குகிறது. ஜுலை 6,7ல் அரையிறுதி ஆட்டங்களும், இறுதிப்போட்டி ஜுலை 11இல் ஜோகனஸ்பேர்க்கிலும் நடக்கும்.

**அணிகள் விபரம்**

பிரிவு ஏ

தென்னாபிரிக்கா, மெக்சிகோ, உருகுவே, பிரான்ஸ்.

பிரிவு பி

ஆர்ஜென்டினா, நைஜீரியா, கிரீஸ், தென் கொரியா.

பிரிவு சி

இங்கிலாந்து, அமெரிக்கா, அல்ஜீரியா, சுலோவேனியா.

பிரிவு டி

ஜேர்மனி, அவுஸ்திரேலியா, செர்பியா, கானா.

பிரிவு இ

நெதர்லாந்து, டென்மார்க், ஜப்பான், கமரூன்.

பிரிவு எப்

இத்தாலி, பராகுவே, நியூசிலாந்து, சுலோவேகியா.

பிரிவு ஜி

பிரேசில், வடகொரியா, போர்த்துக்கல், ஐவரி கோஸ்ட்.

பிரிவு எச்

ஸ்பெயின், சுவிட்சர்லாந்து, சிலி, ஹோண்டுராஸ்.

# மனோ கணேசன் எம்.பியின் பாதுகாப்பு வாகனம் கராஜில்

## அரசியல் பழிவாங்கல் எனக் குற்றச்சாட்டு

நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் கட்சி நிலைப்பாடு கடந்தவாரம் அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்து மனோ கணேசன் எம்.பியின் பொலிஸ் பாதுகாப்பு ஜீப் வாகனம் பழுதுபார்க்கப்படவேண்டும் என்ற காரணங்காட்டப்பட்டு பொலிஸ் கராஜிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பழுது பார்ப்பதற்காக வாகனம் பொலிஸ் கராஜிற்கு கொண்டு செல்லப்படும் வேளைகளில் வழங்கப்படும் மாற்று வாகனம் இம்முறை இதுவரையில் தரப்படவில்லை. நீதிமன்ற உத்தரவின் மூலமாகவே மனோ கணேசன் எம்.பிக்கு பின் தொடர் பாதுகாப்பு வாகனமும் மேலதிக அமைச்சரவை பாதுகாப்பு காவல் அதிகாரிகளும் வழங்கப்பட்டுள்ள நிலையில் இந்நடவடிக்கை நீதி மன்ற உத்தரவை மீறி நடத்தப்படும் அரசியல் பழிவாங்கல் என ஜனநாயக மக்கள் முன்னணி விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விவகாரம் தொடர்பில் மனோ கணேசன் எம்.பி பொலிஸ் மா அதிபர் மகிந்த பாலசூரியவிற்கு அனுப்பி வைத்துள்ள அவசர கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மேன்முறையீட்டு நீதிமன்றம் தனது இடைகால உத்தரவின் மூலம் எனக்கு பாதுகாப்பு வாகனத்தையும், பாதுகாப்பு அதிகாரிகளையும் பொலிஸ் மா அதிபர் வழங்க வேண்டுமென கூறியுள்ளது. இந்நிலையில் பொலிஸார் கடந்த வாரம் எனது பாதுகாப்பு வாகனத்தை பழுதுபார்க்க வேண்டுமென கூறிக் கொண்டு சென்றனர்.

தற்சமயம் எனது வாகனம் பொலிஸ் கராஜில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. பின் தொடர் வாகனம் இல்லாத காரணத்தினால் எனது பாதுகாப்பு அதிகாரிகளுக்கு தமது பாதுகாப்பு கடமைகளை செய்யமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

நான் எனது கடமைகளுக்காக பயணம் செய்யும் போது எனது பாதுகாப்பு அதிகாரிகள் எனது வாகனத்திற்குப் பின்னாலே வரமுடியாது என்பதையும் அவர்கள் தமது வாகனத்திலேயே ஆயுதங்களுடன் எனது வாகனத்தை பின் தொடர்ந்து பயணிக்க வேண்டும் என்பதை யும் நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும். அவர்களது பயணத்திற்காக பயன்படுத்து வதற்கு தனிப்பட்ட முறையில் என்னிடமும் மேலதிக வாகனம் கிடையாது என்றார். (ந-5)

# காப்புறுதித்தரத்தை மீளாய்வு செய்க இலங்கைக் குழு பிரித்தானியா விஜயம்

(கொழும்பு)

இலங்கைக்கான கப்பல் போக்குவரத்து காப்புறுதி ஆபத்து தரத்தை மீளாய்வு செய்யுமாறு கோரி அரச அதிகாரிகள் குழு ஒன்று பிரித்தானியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளது.

இலங்கைக்கு செல்லும் கப்பல்களுக்கான காப்புறுதி தொகையை மீள்ஆய்வு செய்யுமாறு கோரிக்கையை விடுப்பதற்கும் பேச்சுக்களை நடத்துவதற்கும் என அரசு குழு ஒன்றை பிரித்தானியாவுக்கு அனுப்பியுள்ளது.

இந்தக் குழுவில் கடற்படை அதிகாரிகளும் அரச அதிகாரிகளும் அடங்கியுள்ளனர். புதிய ஆபத்து காப்புறுதிதரத்தை மீள் ஆய்வு செய்து வெளியிடுமாறு இந்தக் குழு கேட்கவுள்ளது.

போர் ஆபத்துக்கள் தொடர்பான காப்புறுதி அதிகாரிகளுடன் நாம் பேச்சுக்களை மேற்கொள்வதுடன் இலங்கைக்கு வந்து நிலைமைகளை ஆராயுமாறும் நாம் அவர்களுக்கு அழைப்புக்களை விடுக்க உள்ளோம் என இந்தக் குழுவில் அங்கம்வகிக்கும் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ந-5)

## ஒரு இலட்சத்து...

இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டும் மற்றும் உறவினர், நண்பர்களுடன் தங்க அனுமதிய ளிக்கப்பட்டும் உள்ளனர்.

இதில் யாழ்.மாவட்டத்தில் 62 ஆயிரத்து 145 பேர் மீள்குடியமர்த்தப்பட்டு அல்லது உறவினர், நண்பர்களுடன் தங்க அனு மதிக் கப்பட்டுள்ளனர்.

அத்துடன் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் 45 ஆயிரத்து 500 பேர் வரை மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். எனவே தற்போது வவுனியா நலன்புரி முகாம்களில் ஒரு இலட்சத்து 27 ஆயிரத்து 905 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் நேற்று முன்தினம் வரை 39 ஆயிரம் பேர் முகாம்களை விட்டு சுதந்திர மாக வெளியேறி நாட்டின் பல பகுதிக்கும் சென்றனர். இவ்வாறு முகாம்களிலிருந்து சென்றவர்களில் 19 ஆயிரம் பேர் மீண்டும் திரும்பியுள்ளனர்.

தற்போது முகாம்களிலிருந்து சுதந்திர மாக வெளியேறி நாட்டின் பல்வேறு பகுதிக ளுக்கும் செல்லும் மக்களுக்கு இலவச போக்கு வரத்துச் சேவைக்கென 15 பஸ்கள் ஈடுபடுத் தப்பட்டுள்ளன.

வவுனியா நலன்புரி முகாம்களில் தற் போது தங்க வைக்கப்பட்டுள்ள மக்கள் அனைவரும் ஜனவரி மாத இறுதிக்குள் மீள் குடியமர்த்தப்பட வேண்டும் என ஜனாதிபதி பணித்துள்ளார்.

இதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள் ளன. அத்துடன் வன்னி நிலப்பரப்பில் தின மும் 500 சதுர மீற்றரில் மிதிவெடி அகற்றும் பணிகள் இடம்பெறுகின்றன. தற்போது கிளி நொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ள அரச அலுவலகங்க ளுக்குச் செல்லும் ஊழியர்களுக்கென யாழ்ப் பாணத்தில் இருந்தும் வவுனியாவிலிருந் தும் தலா 3 பஸ்கள் இலவச சேவையில் ஈடு பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அரச ஊழியர் கள் 260 பேர் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு நேற்று வரை கடமைக்குத் திரும்பியுள்ளனர் என அவர் குறிப்பிட்டார்.(ந-5)

## பிரிட்டன்...

ஆளுநரும் யாழ்.மாவட்ட அரச அதிபரும் தூதுவர்களுக்குக் எடுத்துக் கூறினர்.

அத்துடன் ஏ-32 வீதியை மக்கள் பாவ னைக்காகத் திறப்பதுடன் யாழ்ப்பாணப் போக்குவரத்துக்கான சங்குப்பிட்டி-கேரதீவுக் கடல்பாதை அமைப்பது குறித்தும் வடக்கு மாகாண ஆளுநரிடம் தூதுவர்கள் கேட்டறிந் தனர்.

இதேவேளை யாழ்.பல்கலைக்கழகத் திற்குச் சென்ற தூதுவர்கள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் மற்றும் பீடாதிபதிகளைச் சந்தித்து பல்கலைக்கழக நடவடிக்கைகள் தொடர்பிலும் யாழ்ப்பாண நிலைமைகள் தொடர்பிலும் ஆராய்ந்தார் கள். (ந-5)

# இடம்பெயர்ந்த மக்களால் 2 பில்லியன் பணம் வைப்பு

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

வடக்கில் யுத்தம் காரணமாக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள இடம்பெயர் மக்கள் சுமார் இரண்டு பில்லியனுக்கும் அதிகமான பணம் மற்றும் சொத்துக்களை வைப்புச் செய்துள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர் முகாம்களில் தங்கவைக்கப் பட்டுள்ள மக்கள் பெரும்பாலும் தங்க ஆபர ணங்கள் மற்றும் பணத்தை இவ்வாறு வைப் புச் செய்துள்ளனர்.

தற்காலிக வங்கி கிளைகளில் ஆயிரக் கணக்கான வைப்புகள் செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் மீள்குடியேற்றப்பட்டதன் பின்னர் வெளிநாடுகளில் அவர்களுக்கு கிடைக்கப் படும் பணத்தின் அளவும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை கிளிநொச்சி உள்ளிட்ட பல இடங்களிலும் வங்கிக் கிளைகள் திறக்கப்படவுள் ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-5)

## தமிழீழ போராட்டத்தை முன்னெடுக்க...

இது தொடர்பில் அதில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது,

போர் நிறைவு பெற்று விட்டதாக இலங் கை அரசு அறிவித்து ஆறு மாதங்கள் கடந் துள்ள நிலையில் வடக்குக் கிழக்கில் புதிய விடுதலை அமைப்பொன்று உதயமாகியுள் ளது.

கியூபா மற்றும் பாலஸ்தீன விடுதலை அமைப்புக்களுடன் தொடர்புள்ள மக்கள் விடுதலை இராணுவம் என்னும் அமைப்பு கிழக்கிலங்கையில் 4 மாதங்களுக்கு முன்னர் உருவாக்கப்பட்டதாகவும் தமிழீழத்தைப் பெறுவதற்குப் படையினர் மீதும் படை நிலை கள் மீதும் தாக்குதல்களை ஆரம்பிக்கப் போவதாகவும் அதன் கிழக்குப் பிராந்தியக் கட்டளை அதிகாரி கோணேஸ் தெரிவித்துள் ளார்.

அவருடனான சந்திப்பு கிழக்கு மாகாணத் தில் உள்ள இரகசிய இடம் ஒன்றில் இடம்பெற் றிருந்தது. விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப் பட்ட பின்னரும் தமிழ் மக்களுக்கான எந்தத் தீர்வும் முன்வைக்கப்படவில்லை.

எனவே நாம் எமது இலட்சியத்தை அடைய தாக்குதல்களைத் தீவிரப்படுத்தத் திட்டமிட்டுள் ளோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தமது படை யணியில் தற் போது பயிற்சி பெற்ற 300 வீரர் கள் உள்ளதாக வும் 5 ஆயி ரம் தொண்டர் படை யினரை இடம் பெ யர்ந்த மக்களில் இருந்து இணை த்துக் கொள்ள முடியும் எனவும் அவர் தெரி வித்துள்ளார்.

தமது அமை ப்பின் மத்திய குழு பத்துப் பேரைக் கொண்டதாகவும் அது விடுதலைப் புலிகள் அமைப் பில் இருந்து வேறுபட்டது எனவும் தெரிவித்துள்ள கோணேஸ், விடுத லைப்புலிகள் அமைப்பில் இருந்தவர்களும் தம்முடன் இணைந்து கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் விடுதலைப்புலிகளின் உறுப் பினர்களும் எமது படையில் உள்ளனர். ஆனால் விடுதலைப்புலிகளின் நடவடிக்கை கள் சில தவறானவை. விடுதலைப்புலிகள் தற்போது முற்றாக முறியடிக்கப்பட்டுள்ளனர். நாம் அது தொடர்பில் கவலை கொள்ள வில்லை.

நாம் பொதுவுடைல்மக் கொள்கையுடை யவர்கள். நாம் ஒரு புதிய தமிழ் அமைப்பை உருவாக்க முனைகின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை இராணுவத்தின் ஆளு மை தொடர்பில் தெளிவின்மையுள்ளது. அதில் 1980 களில் சிறிலங்காப் படையின ருடன் போராடிய பலர் உள்ளதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

தளபதி கோணேஸ் 40 வயது நிரம்பிய வர். அவர் 1983 களில் இந்திய உத்தரப் பிர தேசத்தில் பயிற்சி பெற்றவர். அவர் பாலஸ்தீன விடுதலை இயக்கத்திலும் பயிற்சி பெற்றவர். தமக்குத் தற்போதும் பாலஸ்தீன விடுதலை இயக்கம், கியூபா மற்றும் இந்திய மாவோ யிஸ்ட் என்பவற்றுடன் தொடர்புகள் இருப்ப தாகவும் அவர்கள் எம்மைப் போல தமது உரி மைகளுக்காகப் போராடுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் முன்னர் இலங்கைப் படையின ரால் கைது செய்யப்பட்டுத் துன்புறுத்தல்க ளுக்கு உட்பட்டிருந்தவர். பின்னர் ஐரோப்பிய நாடு ஒன்றுக்குத் தப்பிச் சென்றிருந்தார். புதிய அமைப்பொன்று மிகவும் சிக்கலான தருணத்தில் இலங்கையில் தோன்றியுள் ளது.

இலங்கை வெற்றியைக் கொண்டாடும் போது புதிய அமைப்பு உருவாகி வருகின்றது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் ஜெனரல் பொன்சேகாவும் தேர்தலில் போட்டியிடும் போது மறுபுறம் ஆயுதப் போராட்டம் மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளது.

நாம் விடுதலைப்புலிகளை விட அரசியல் ரீதியாக அனுபவம் வாய்ந்தவர்கள். எனவே பயங்கரவாத முத்திரையை எவ்வாறு தவிர்ப் பது என்பது எமக்குத் தெரியும் என கோணேஸ் தெரிவித்துள்ளார்.

எமது எதிரி இலங்கை அரசுதான். நாம் தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடுகின் றோம். நாம் அனைத்துலக சமூகத்திற்கு எதி ரானவர்கள் அல்ல. அனைத்துலகத்தின் ஆதரவுகள் எமக்குத் தேவை. விடுதலைப் புலிகளின் போரியல் யுத்திகளைக் கடைப் பிடிக்க வேண்டும் என்ற கட்டாயம் எமக்கில் லை.

ஆனால் கெரில்லாத் தாக்குதல்கள்தான் எமது பரந்த தெரிவு. பொருளாதார, இரா ணுவ மற்றும் நிர்வாக மையங்களே எமது இலக்குகள் என அவர் மேலும் தெரிவித் துள்ளார்.

எமது அடுத்த தாக்குதல் இலக்கு கருணா குழுவினர் மீதாகவேயிருக்கும். நாம் நாளுக்கு நாள் வலுப்பெற்று வருகின்றோம். எனவே தாக்குதலுக்கான காலம் நெருங்கி விட்டது என இந்த அமைப்பைச் சேர்ந்த வேறு ஒரு போராளி தெரிவித்திருந்தார்.

கிழக்குப் பகுதியிலுள்ள ஒரு பின்தங்கிய இடத்தில் சில நாள்கள் கோணேஸுடன் நாம் தங்கியிருந்து நேர்காணலை மேற்கொண்டி ருந்தோம். அந்தச் சமயத்தில் மூன்று இளைஞர்கள் பயிற்சி முகாமுக்குச் செல்வதற்குக் காத்திருந்திருந்தனர்.

அவர்கள் 15 மற்றும் 16 வயது நிரம்பிய வர்கள். மக்கள் விடுதலை இராணுவம் எம்மைக் கவர்ந்துள் ளது.

அவர்களால்தான் எதனையும் தமிழ் மக் களுக்குச் செய்ய முடியும் என அவர்கள் தெரி வித்திருந்தனர். (ந-5)

## சரத்துடன்...

நடத்தி வருகின்றனர்.

நேற்று முன்தினம் இரா.சம்பந் தன், ஜெனரல் சரத் பொன்சேகா வைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தப் பேச்சின் போது திருப்தி தரக்கூடிய முடிவுகள் முன்வைக்கப் பட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப் புத்தரப்பில் தெரிவிக்கப்பட்ட போதி லும், தொடர்ந்து சரத் பொன்சேகா வுடன் சந்திப்பு இடம்பெறும் என வும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தரப்பில் பசில் ராஜ பக்ஷவுடன் கூட்டமைப்பின் நாடா ளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரே மச்சந்திரன் நேற்று முன்தினம் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பதென்ற முடிவை எடுப்ப தற்கு இன்னும் சில தடவைகள் ஜனா திபதித் தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான வேட்பாளர்களுடனும் சந் தித்துப் பேசவேண்டிய தேவை உள் ளதாக தமிழ்த் தேசிய கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (ந-5)

அன்புக்கினிய வாசகர்களே!
வலம்புரியுடன் இணைந்து உங்கள் அபிமானத்திற்குரிய
சங்கு நாதம்
ஞாயிறு தோறும் வெளிவரும்.
- அரசியல் களம்
- ஆலடி மாநாடு
- வியாசர் பதில்
- கவிதை மழை
- அறிவியல் சிந்தனைகள்

உங்கள் ஆக்கங்களை: 'சங்குநாதம்'
இல.3,2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தவறிவிட்டது

நாராயணசாமி ரவிவர்மன் ஆகிய எனது, காத்தார் சின்னக்குளம் வீதி, அம்மன் கோவிலடி, அண்ணாநகர், வவுனியா எனும் முகவரி உடைய தே.அ.அட்டை (810270934V), சாரதி அனு மதிப் பத்திரம், வவுனியா வதிவிட விஷேட அடையாள அட்டை, மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் (Insurance/Tax) என்பன உள்ளடங்கிய கறுப்பு நிற பர்ஸ் இருபாலைச் சந்திக்கும் யாழ். வண்ணை வைத்தீஸ்வரா சந்திக்கும் இடைப்பட்ட பருத்தித்துறை வீதியில் 06.12.2009 அன்று தவறிவிட்டது. இதனை கண்டெடுப்பவர்கள் தயவு செய்து டிஜிட்டல் எலக்ரோனிக்ஸ், 62/16, ஸ்ரான்லி வீதி, யாழ். (ஸ்ரான்லி வீதி சம்பத் வங்கி எதிரில்) ஒப்படைத்து உதவுமாறு அல்லது 077-6623824/ 021-2224040/ 021-2224560 எனும் இலக்கங்களுக்கு தொடர்புகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். (தகுந்த சன்மானம் வழங்கப்படும்.)
(C-3875)

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஸ்ண
சாரதா சேவாச்சிரமம் 40 ஆண்டு பூர்த்தியில்

தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் பெயரால் அன்னை யின் 117ஆவது ஜெனன தினத்தில் 31.12.1969ஆம் ஆண்டு ஒரு சிறுகுடிசையில் ஆரம்பிக்கப்பட்டு இன்று அவரது 157ஆவது ஜயந்தியில் (40 ஆண்டுகள்) வெகுசிறப்பாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.
இத்தினத்தில் மதிய வழிபாட்டை அடுத்து;
- சுயதொழில் வாய்ப்பிற்கு இருவருக்கு 35000 ரூபாய் வழங்கப்படும்.
- சேவாச்சிரம தொண்டர் ஒருவருக்கு 50000 ரூபாயில் வீட்டிற்கு மின்சாரம் வழங்கப்படும்.
- 40 ஆண்டு பூர்த்தியை இட்டு அன்னையின் மலர் ஒன்றை அருட்தந்தை டேமியன் அடிகளார் வெளியிட்டுவைக்கவுள்ளார்.

- செயலாளர்.
(C-3879)

நியூ சிற்றி ரேடர்ஸ் இடமாற்றம்

சொனி , பனசொனிக், LG, கோல்ஸ்ரார் 14''17''21'' கலர் T.V, DVD பிளேயர், டிஸ் TV ,ஈரோ கோல்ட் ரிசீவர் ,சொனி ,பைனியர் கார் ரேடியோ ,கார் CD ,றேடியோ ,கசற் ரெக்கோடர் MP-3,MP-4 பிளேயர் , அம்பிளிபையர் ,பவல்ஸ் ,வூபர்ஸ் ,எலக்ரோனிக் திராசுகள் ,சுவர் மேசை கை மணிக்கூடுகள் ,கல்குலேட்டர்கள், ரெலிபோன் பற்றி ,சார்ச்சர் ,அன்ரனா ,6 பிளாஸ் ரோச் , DVD ,பாட்டு CD, மண்ணெண்ணெய் குக்கர்கள் ,காஸ் குக்கர்கள் இவற்றை நிதான விலையில் பெற்றுக்கொள்ளவும் மேற்குறிப்பிட்ட பொருட் களை சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள்.

நியூ சிற்றி ரேடர்ஸ்,
T.P.:- 021 222 3226 — 319 A, K.K.S. றோட், யாழ்ப்பாணம்.
(C-3864)

INVITATION
Carols and Chimes
by
The Choirs of
Uduvil Girls' College
At the Jubilee Hall
on
December 8, 2009, 4.00 p.m
Principal,
Staff & Student
(C-3863)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.12.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.